வருடாந்த அறிக்கை
2020



கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட.

பொருளடக்கம்

- அறிக்கையை கௌரவ செயலாளரிடம் சமர்ப்பித்தல் 301
- தலைவரின் செய்தி 302
- நிறுவனத்தின் நோக்கு மற்றும் அரும்பணி பற்றிய கூற்று 304
- பணிப்பாளர் சபை 305
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு 306
- முன்னுரை 307

பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களின் அறிக்கைகள்

- நெறிப்படுத்தல் பிரிவு 310
- காப்புறுதிப் பிரிவு 314
    - கமத்தொழில் காப்புறுதி அலுவல்களும் கால்நடைக் காப்புறுதி அலுவல்களும்
- ஓய்வூதியப் பிரிவு 321
    - கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் மற்றும்
    - கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
- நிருவாக மற்றும் மனித வளப் பிரிவு 330
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 337
- திட்டமிடல் பிரிவு 340
- நிதிப் பிரிவு 344

கணக்குகள்

- முந்திய ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள் 346
- ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்கான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகள் 350
- கமத்தொழில் காப்பறுதி செயற்றிட்டம் 353
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 381
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய , சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 402

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைள்

- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 421
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 431
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 438

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுக்கான பதில்கள்

- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 447
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 453
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்பரித்திட்டம் 457

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams: රක්ෂණ / ரக்ஷன / Rakshana
267, යුනියන් පෙදෙස, කොළඹ 2.
267, யூனியன் இடம், கொழும்பு 2.
267, UNION PLACE, COLOMBO 2.
තැ. පෙ. 21, த. பெ. 21 P.O. Box 21

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No.: 4/5/මු/ර/11

ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No.:

දිනය / திகதி / Date: 2021-12-06

செயலாளர்,

கமத்தொழில் அமைச்சு,

80/5, “கொவிஜன மந்திரய”,
ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல.

<u>வருடாந்த அறிக்கை - 2020</u>

2020 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் நிருவாகம், தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் அமுலாக்கப்பட்டவிதத்தையும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துவிதமான செயற்பாடுகள் பற்றிய விபரங்களையும் உள்ளடக்கிய 2020 சபையின் வருடாந்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

டைரக்டர் ஜெனரல்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

දුරකථන / தொலைபேசி / Telephones	සභාපති / தலைவர் / Chairman	අධ්‍යක්ෂ ජනරාල් / Director General	ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office
ෆැක්ස් / பெக்ஸ் / Fax	0112812571/72 011 2812573	0112812574	011 5384000

கௌரவ தலைவரின் செய்தி

இலங்கையின் விவசாயி மற்றும் விவசாயம் சம்பந்தமாக அரச பாதுகாப்பு மற்றும் அனுசரணையை வழங்கி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை விவசாய சமுதாயத்தின் வாழ்க்கை அபாயநேர்வினையும் அவர்களின் ஆதன அபாயநேர்வினையும் குறைப்பதற்காகவும் அத்தகைய அபாயநேர்வின்போது மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்காகவும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின்போது பயிர்ச்செய்கைக்கும் விளைச்சலுக்கும் ஏற்படுகின்ற சேதத்தை குறைப்பதற்காகவும் உச்சஅளவிலான அர்ப்பணிப்பினை அளித்து வருகின்றது.

நாங்கள் இன்றளவில் கமக்காரன் செய்கைபண்ணுகின்ற எந்தவொரு பயிருக்கும் காப்புறுதிக் காப்பீட்டினை வழங்க தயாராக இருக்கிறோம். அதைப்போலவே கௌரவ கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே அவர்களின் நெறிப்படுத்தல், வழிகாட்டல் மற்றும் தலைமையின்கீழ் கடந்த காலப்பகுதி பூராவிலும் இடைநிறுத்தப்பட்டிருந்த கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்காக மீண்டும் சேர்த்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்போது பெரிதும் மனதைக் கவரத்தக்க நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளைப் போன்றே தளர்ந்த தவணைத் திட்டங்கள் மற்றும் தெரிவுசெய்யக்கூடிய பல்வேறு அளவிலான ஓய்வூதியமும் அவசியப்பாட்டுக்கிணங்க வங்கிக் கடன்தொகை ஊடாக ஒரேதடவையில் செலுத்தவும் அதன்போது கமத்தொழில் காப்புறுதிச்சபை காப்புறுதிக் காப்பீடு மூலமாக பிணை உத்தரவாதத்தை வழங்கவும் ஏற்பாடுகளை தயார்செய்துள்ளது. மேலும் புதிய திட்டத்தில் தனது வாழ்க்கைத் துணைக்கும் பாதுகாப்பு கிடைக்கத்தக்கவகையில் மேற்கொள்ளவும் வழிசமைக்கப்பட்டுள்ளது.

அது தவிர்ந்ததாக நியாயமான தவணைப் பணமொன்றைச் செலுத்தி எந்தவொரு சேதத்திற்காகவும் நட்டஈடு கிடைக்கத்தக்கவகையில் பொதுக் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்காக கௌரவ கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே அவர்களால் அமைச்சரவை நிருபமொன்றை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை முழுமையான சுயநிதியீட்டல் அடிப்படையை நோக்கிச் செல்ல செயலாற்றி வருகின்றது.

சபையினால் கடந்த ஆண்டில் தனது பணியாட்டொகுதியினருக்காக பல்வேறு நலனோம்பல் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டதோடு ஊழியர் குழாத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவச் செலவுகளை செலவுமீளளிப்பு செய்கின்ற செயற்றிட்டம் சிறப்பிடம் வகிக்கின்றது. மேலும் கொவிட் 19 பெருந்தொற்றுடன் கடந்த காலப்பகுதிக்குள் எமது சேவைகளை இடையறாமலும் பலம்பொருந்தியவகையிலும் உரியவகையில் பேணிவருவதற்காக பணியாட்டொகுதி அங்கத்தவர் ஒவ்வொருவரும் கடுமையான ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றினர்.

குறிப்பாக எமது பணியாட்டொகுதியினரை பாதுகாப்பாக சேவைக்கு வரவழைப்பித்துக் கொள்ளவும் எமது சேவைகளை முறைப்படி பேணிவரவும் இயலுமானதாக அமைந்தமை நாம்

அடைந்த மிகப்பெரிய வெற்றியாகும் என்பதைக் குறிப்பிடவேண்டும். நாங்கள் தற்போது பிரதானமாக மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானத்தில் தங்கியிருந்து சம்பளமும் படிகளும், நிருவாகச் செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கி இயலுமானவரை அபாயநேர்வுமிக்க சுயநிதியீட்டல் அடிப்படையில் செயலாற்றி வருகிறோம்.

இந்த நிலைமையை மிருதுவானதாக்கிக்கொள்ள வேண்டுமென்பதோடு பிற கருத்திட்டங்கள், வணிகரீதியான வாய்ப்புகளில் பிரவேசிப்பதன் மூலமாக உறுதிநிலையினைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஊழியர் குழாத்தின் தொழில் மனநிறைவு, வினைத்திறன் என்பவற்றை அதிகரிப்பதற்காக மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானத்தை ஈட்டிக்கொள்ள அர்ப்பணிப்பு வழங்கிய விதத்தைப் பாராட்டி இலாபத்தில் 5% அளவில் 3% ஐ பணியாட்டொகுதியினருக்கு வருடாந்த ஊக்குவிப்புப் படியாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து தடைகளுக்கு மத்தியிலும் கடந்த 2020 காலப்பகுதிக்குள் கட்டாயப் பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டம் ஊடாக 43.6 மில்லியன் ரூபா வருமானத்தையும் மூன்றாந் தரப்பு காப்புறுதித் திட்டம் ஊடாக 278.9 மில்லியன் ரூபா வருமானத்தையும் ஏனைய காப்புறுதித் திட்டங்கள் ஊடாக 21.8 மில்லியன் ரூபா வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள சபைக்கு இயலுமாயிற்று.

நீண்டகாலமாக பேசப்பட்டுவந்த தேசிய அவசியப்பாடுகளிலொன்றான விவசாய, கமநல தகவல்களை உள்ளிட்ட தரவு முறைமையொன்றை நிர்மாணிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் கௌரவ கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே அவர்களின் இடையீடு, தலைமைத்துவம் மற்றும் நல்லாசியுடன் கமத்தொழில் அமைச்சின் பங்களிப்புடன் நிதிசார் மற்றும் மனித வளத்தை முகாமைத்துவம் செய்து எதிர்பாரத்த இலக்குகளை அடைவதில் பிரவேசித்துள்ளது.

இந்த நிலைமையை மிகவும் வெற்றிகரமாகவும் பலம்பொருந்தியதாகவும் அதிமேதகு சனாதிபதியவர்களின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைச் செயற்பாட்டுக்கு இணையானதாக பேணிவர கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை கூட்டாகவும் ஒன்றாகவும் அர்ப்பணித்துள்ளது.

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

நோக்கு

உள்நாட்டு விவசாயத்தின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் மூலமாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் காப்புறுதி நிறுவனமாதல்.

அரும்பணி

கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கான

கூட்டு முயற்சிகள்மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதன் ஊடாகசர்வதேசரீதியாக எற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

பணிப்பாளர் சபை- 2020

	பெயர்	பதவி
01	சட்டத்தரணி திரு. பிரேமசந்திர ஏப்பா தலைவர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை	தலைவர்
02	டபிள்யு. எம்.எம். பீ . வீரசேகர ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தி திணைக்களம்	அங்கத்தவர்
03	பேராசிரியர் டபிள்யு. எம், வீரக்கோன் பணிப்பாளர் நாயகம் கமத்தொழில் திணைக்களம்	அங்கத்தவர்
04	செல்வி டபிள்யு, எச்.ஏ. விமலஜீவ கணக்காளர் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு கொழும்பு 01	அங்கத்தவர்
05	திருமதி நிலக்ஷி என். குணசேகர மேலதிக செயலாளர் (நிருவாக மற்றும் மனித வளம்) கமத்தொழில் அமைச்சு	அங்கத்தவர்
06	திரு. வீ. யூசுப் மேலதிக செயலாளர் (கருத்திட்டங்கள்) கடற்றொழில் மற்றும் நீரகவளங்கள் அமைச்சு புதிய செயலகம்	அங்கத்தவர்
07	திரு. ஜீ.ஜீ. தனஞ்சய நந்தசிறி உதவி உப தலைவர் கிளை முகாமையாளர் மாத்தறை கிளை இலங்கை வங்கியின் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்	அங்கத்தவர்
08	பேராசிரியர் திரு. சீ.என்.எஸ் கமகே மேலதிக செயலாளர் (கால்நடைவளத் திணைக்களம்) (இராஜாங்க அமைச்சு) கால்நடை வளங்கள் அமைச்சு, விலங்கு வேளாண்மை மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள்.	அங்கத்தவர்

தானஞ்சார் கட்டமைப்பு
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை



முன்னுரை

விவசாயத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய வேலைத்திட்டத்தில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை பிரமாண்டமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருகின்றது.

அதன் முதன்மைப் பணியாக அபாயநேர்வு முகாமைத்துவத்தில் விவசாயிக்காக நடுநிலையான தரப்பினரொருவராக தொடர்புபடுதல் சிறப்பு முக்கியத்துவம் வகிக்கின்றது. அதன்போது விவசாயியின் பயிர்களின் அபாயநேர்வினை ஏற்றுக்கொள்ளலுக்கு மேலதிகமாக விவசாயிகளின் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் களஞ்சியங்களுக்காகவும் பாதுகாப்பினை வழங்கி விவசாயியின் சமூகப் பாதுகாப்பிற்காக செயலாற்றி வருவதும் தனித்துவமானதாகும்.

விவசாயியைப் போன்றே விவசாயத்தினதும் நிலைபெறுதகு மேம்பாட்டுக்காக நாட்டின் உணவு உற்பத்திச் செயற்பாங்கினை மிகவும் உறுதியாகவும் துரிதப்படுத்தும் நோக்கத்துடனும் கமத்தொழில் அமைச்சினை முதன்மையாகக்கொண்டு அரசாங்கத்தினால் விவசாயிகளுக்காக அமுலாக்கிய உரமானியம் போன்ற கமக்காரர்களுக்கான வசதிகளை ஊக்குவித்தலின்கீழ் தீவில் செய்கைபண்ணப்படுகின்ற 06 பிரதான பயிர்வகைகளுக்காக 2018 சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவசமாக வழங்கிய கட்டாயக் காப்புறுதித் திட்டம் 2020 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வருடாந்த தவணைப்பண வருமானம் 2016 தொடக்கம் 2020 வரை

காப்புறுதித் திட்டம்	2016 (ரூ. மி.)	2017 (ரூ. மி.)	2018 (ரூ. மி.)	2019 (ரூ. மி.)	2020 (ரூ. மி.)
பயிர்க் காப்பறுதி செயற்றிட்டம்	94.85	95.66	128.01	61.11	**45.89**
கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம்	10.56	13.39	10.59	7.87	**5.78**
களஞ்சிய/ விவசாய உபகரணங்கள் மற்றும் மூன்றாந்தரப்பு காப்பறுதி செயற்றிட்டங்கள்	7.82	42.11	137.85	220.15	**278.94**
சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதி செயற்றிட்டம்	15.61	5.31	6.34	9.42	**13.78**
உர மானியக் காப்புறுதி செயற்றிட்டம்	608.19	0.00	-	-	**-**
கூட்டுத்தொகை	737.03	156.47	282.79	298.55	**344.39**

வருடாந்த தேறிய இலாபம் 2016 தொடக்கம் 2020 வரை

	2016 (ரூ. மி.)	**2017 (ரூ. மி.)**	**2018 (ரூ. மி.)**	**2019 (ரூ. மி.)**	**2020 (ரூ. மி.)**
மொத்த வருமானம்	782.20	5735.1	4,398.5	3,365.1	**3,530.40**
தொழிற்பாட்டுச் செலவு	(404.50)	(5654.2)	(3,253.8)	(2,487.0)	**(2,129.10)**
தொழிற்பாட்டு மிகைநிலை	377.70	80.9	1,144.7	878.1	**1,401.30**
அரச கொடையும் பிற வருமானமும்	122.50	130.1	4.0	9.1	**8.30**
மொத்தச் செலவு (ஒதுக்கீடுகளும் உள்ளிட்டதாக)	(160.30)	(168.7)	(227.7)	(234.9)	**(255.90)**
வருடாந்த தேறிய இலாபம் / நட்டம்	339.90	42.3	921.0	652.3	**1153.70**

2020 ஆம் ஆண்டில் சபையின் வருமானத்தில் முனைப்பாகத் தெரிகின்ற முன்னேற்றத்தை அடைவதில் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம் வெற்றிகண்டது. 2019 ஆம் ஆண்டில் 137.85 மில்லியன் ரூபாவாக அமைந்த வருமானத்தை 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 278.94 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக் கொண்டமை இவ்வாண்டின் தனித்தன்மையாகும். மூன்றாந்த தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் சட்டத் தடைகளை தீர்த்துக்கொண்டமை மற்றும் மாவட்ட மட்டத்தில் விரிவான சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கியதன் மூலமாக சம்பந்தப்பட்ட செயற்றிட்டம் தொடர்பிலான நம்பிக்கையை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தியதன் பெறுபேறாக இந்த முன்னேற்றத்தை அடைய இயலுமாயிற்று. இதன் மூலமாக ஈட்டிக்கொண்ட வருமானம் சபையின் நிதிசார் உறுதிநிலையினை வளர்த்துக்கொள்ள பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

கமத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிசார் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்பறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்கின்ற கருத்திட்டத்தின் அலுவல்கள் 2019 ஆம் ஆண்டில் தீவின் பல மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு ஆமுலாக்கப்பட்டதோடு அதற்கு மேலதிகமாக விவசாயத் தரவுகளை உள்ளடக்கிய முகாமைத்துவ தரவு முறைமையொன்று (MIS) சகிதம் Cloud Based வெப் / நடமாடும் உள்ளீடு ஒன்றைக் கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சித்திட்டமும் 2020 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலமாக கமநிலங்களை வரைபடமாக்கல் மற்றும் கமக்காரர்களினதும் கமநிலங்களினதும் தரவுகளை உள்ளீடு செய்யும் பணிகள் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபையினால் அமுலாக்கப்படுகின்ற பிரதானமான சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமான கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்

திட்டத்தின்கீழ் 2020 ஆண்டின் இறுதியில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 959,254 ஆக அமைந்ததோடு இவ்வாண்டில் இந்த செயற்றிட்டத்தின்கீழ் நன்மைகள் வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 163,339 ஆகும்.

இதற்கு மேலதிகமாக மீனவர் சமுதாயத்தின் நன்மை கருதி நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2020 ஆண்டின் இறுதியில் 69,049 மீனவர்கள் அங்கத்துவம் வகிப்பதோடு 5036 கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தில் 2020 ஆண்டின் இறுதியளவில் நடப்பு பொறுப்பு 74.1 பில்லியன் ரூபாவாக விளங்கியது. இந்த பொறுப்பினை எதிர்கொள்வதற்காக கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக திறைசேரி பிணைமுறிகளை வழங்க அப்போது எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக கிடைக்கவேண்டிய 05 பில்லியன் நிதியம் இவ்வாண்டிலும் சபைக்கு கிடைக்கவில்லை என்பதோடு ஒவ்வோராண்டிலும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக அவசியமான ஏற்பாடுகள் அரச வரவுசெலவுத் திட்டம் மூலமாக ஒதுக்கப்படுகின்றது.

தற்போது அமுலில் உள்ள இந்த கமக்காரர் ஓய்வூதிய திட்டத்திற்குப் பதிலாக விவசாயிகளுக்காக மிகவும் பெறுபேறுமிக்க புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் கமத்தொழில் அமைச்சினதும் வழிகாட்டலில் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையின் பேரில் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதோடு அதற்கு 2020 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்திற்காக பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர்களிடம் ஆற்றுப்படுத்தி அமுலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய விவசாய, கால்நடைவள உற்பத்திச் செயற்பாங்கின்போது விரிவான பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்து அபாயநேர்வினைக் குறைப்பதற்கான பலத்தை விவசாயியை முதன்மையாகக்கொண்ட தேசிய விவசாய உற்பத்திச் செயற்பாங்கிற்கு வழங்கி நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாங்கின் முதன்மைப் பங்கினை ஈடேற்றுகின்ற நிறுவனமென்றவகையில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை தனது பொறுப்பினை 2020 ஆம் ஆண்டிலும் ஈடேற்றியது.

நெறிப்படுத்தல் பிரிவு

நெறிப்படுத்தல் பிரிவு – 2020

அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல் என்றவகையில் உள்நாட்டு விவசாயத் துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதையும் விவசாயியை பாதுகாப்பதையும் முதன்மை செயற்பொறுப்பாகக்கொண்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை இயங்கி வருகின்றது. வறட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டு யானைகளின் சேதம் உள்ளிட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளின்போது கமக்காரர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சிக்கல்களுக்கு சிறந்த தீர்வு என்றவகையில் கமத்தொழில் காப்புறுதி முறையியல் முக்கியத்துவம் வகிக்கின்றது. அதைப்போலவே விவசாயப் பொருளாதார பாங்கினூடாக உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துகையில் விசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தை மிகவும் நடைமுறைச் சாத்தியமானவகையில் பிரயோகித்தல் உள்நாட்டு விவசாய பொருளாதாரத்தையும் வாழ்க்கைப் போக்கினையும் உறுதியான மட்டத்திற்கு பேணிவருவதற்கான பாரிய உறுதுணையாக அமைந்துள்ளது. குறிப்பாக கமக்கார்களுடன் மிகவும் நெருக்கமான பயிர்க் காப்பறுதித் திட்டம், கால்நடைக்காப்பறுதித் திட்டம், சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி, விவசாய உபகரணக் காப்பறுதி, களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி போன்ற அதிக நன்மைகளைக்கொண்ட பல காப்பறுதிச் செயற்றிட்டங்கள் கமக்காரர்களுக்காக சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் சேவைகளை கமக்காரர் மத்தியில் விரிவாக்குகையில் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுதல் நெறிப்படுத்தல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சபையினால் அமுலாக்கப்பட எதிர்பார்த்துள்ள எதிர்கால வேலைத்திட்டத்தை உள்ளிட்ட கூட்டுத் திட்டத்திற்கு அமைவாக அனைத்துவிதமான தாபனஞ்சார் திட்டங்களைத் தயாரித்தல், அந்த திட்டங்களை அமுலாக்கச் செய்விப்பதற்காக நாடளாவியரீதியில் பரந்துள்ள மாவட்ட அலுவலகங்களை நெறிப்படுத்துதல், அதற்கான மனித மற்றும் பௌதிக அவசியப்பாடுகளை நிறைவுசெய்தலை உள்ளிட்ட தனித்துவமான செயற்பொறுப்பினை நெறிப்படுத்தல் பிரிவு ஈடேற்றி வருகின்றது.

- விவசாயத்துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்கிவருகின்ற பிரதான அரச நிறுவனம் என்றவகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்ததல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்ச அளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2020 ஆம் ஆண்டிலும் பல காப்புறுதிச் செயற்றிட்டங்களை நாடளாவியரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.
    1. பயிர்க் காப்புறுதிச் செயற்றிட்டம்
        - நெற் பயிர்க் காப்பறுதித் திட்டம்
        - சோளச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - பெரிய வெங்காயச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - உருளைக் கிழங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - மிளகாய் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - சோயா செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - மேலதிக பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டம் (எள்ளு, குரக்கன், கொள்ளு, பயறு, கவ்பி, உழுந்து)

- கரும்புச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ஏற்றுமதிப் பயிர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டம் (மிளகு, கறுவா)
- பெருந்தோட்டச் செய்கைக் காப்புறுதித் திட்டம் (தேயிலை)
- தெங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மலர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- இஞ்சி செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மரக்கறிச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- வாழைச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- பழச் செய்கைக் காப்புறுதித் திட்டம்

2. களஞ்சியக் காப்புறுதித் திட்டம்
3. விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம்
4. கால்நடைக் காப்புறுதித் திட்டம்
    - மாடுகள்
    - ஆடுகள்
5. திடீர் விபத்து காப்புறுதித் திட்டம்
6. சுவசெத சுகாதாரக் காப்பறுதித் திட்டம்
7. மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம்
8. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
    - கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
    - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக இடம்பெறுகின்ற அனர்த்தங்களிலிருந்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் காரணமாக கமக்காரர் சமுதாயம் எதிர்நோக்க நேரிடுகின்ற சிரமங்களுக்கான தீர்வாக நெல், சோளம். உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் செய்கைகளுக்காக கமக்காரர்களினதும் அரசாங்கத்தினதும் பங்களிப்பினைக்கொண்ட கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்கு கமக்காரர்களை சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றதோடு 2018 சிறு போகத்தில் இருந்து கமக்காரர்களிடமிருந்து தவணைப்பணம் அறவிடாமல் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின்பேரில் ஏக்கரொன்றுக்காக உச்ச அளவில் ரூ. 40,000/- இற்கு கட்டுப்பட்டதாக காப்புறுதிக் காப்பீட்டினை வழங்க அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகளை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து நிறுவனங்களினதும் இணைப்பாக்கத்துடன் இந்த காப்புறுதிச் செயற்றிட்டம் 2018 சிறு போகத்தில் இருந்து சபையினால் நாடளாவியரீதியில் அமுலாக்கப்படுகின்றது.

<u>நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் :</u>

- பயிர்ச் செய்கைக் காப்புறுதி, மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி மற்றும் கால்நடைக் காப்புறுதி பற்றி தென் மாகாண உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2020.01.07 ஆந் திகதி மாத்தறை தெலிஜ்ஜவில விவசாயப் பண்ணை பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. அதன்போது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்ற மேற்படி காப்புறுதி செயற்றிட்டங்கள் பற்றியும் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

- கம்பஹா மாவட்டத்தில் மூன்றாந் தரப்பு காப்புறுதி தொடர்பான முகவர்களை ஊக்குவிக்கின்ற மற்றும் விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 2020.08.27 ஆந் திகதி கம்பஹா மாவட்ட அலுவலக வளாகத்தில் நடாத்தப்பட்டது.

- பதுளை மாவட்டத்தில் சுவசெத காப்புறுதிக்காக உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்வதற்கான சிறப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று 2020.08.26, 27 மற்றும் 28 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டது.

- கேகாலை மாவட்டத்தின் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கும் விழிப்புணர்வூட்டுகின்ற மற்றும் மேம்பாட்டுப் பயிற்சி செயலமர்வு 2020.09.04 ஆந் திகதி ரம்புக்கனை சமுர்த்தி மண்டபத்தில் நடைபெற்றது.

- தலைமையகத்தினதும் மாவட்ட அலுவலகத்தினதும் உத்தியோகத்தர்களுக்கான GIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கின்ற நிகழ்ச்சித்திட்டம் 2020.09.11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

- கண்டி மாவட்டத்தின் மிணிப்பே பிரதேச செயலகத்திற்காக யானை - மனிதன் மோதலைக் குறைப்பதற்கான உயிருள்ள பனை வேலியொன்றை நிர்மாணிக்க அவசியமான நிதிசார் பங்களிப்பு 2020.11.10 இல் வழங்கப்பட்டது.

- களுத்துறை, மாத்தளை, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், அநுராதபுரம், மொணறாகல, பதுளை அகிய மாவட்டங்களின் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி நடவடிக்கைகளை மேம்படுத்த அவசியமான பெனர், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை அச்சிட அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் காப்புறுதித் திட்டமும்
கால்நடை வளக் காப்புறுதித் திட்டமும்

காப்புறுதிப் பிரிவு - 2020

காப்புறுதி செயற்றிட்டங்களை தயாரித்தல் மற்றும் காப்புறுதி செயற்றிட்டங்களின்கீழ் கிடைக்கின்ற பொறுப்புகளுக்காக இழப்பீட்டுத் தொகைகளை விடுவித்தலுடன் தொடர்புடைய கடமைகளைப் புரிதல் காப்புறுதிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். குறிப்பாக பயிர்க் காப்புறுதி, கால்நடைக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி நடவடிக்கைகள் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆண்டின் தொடக்கத்தில் 2018/19 பெரும்போக மேன்முறையீடுகளுக்காக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டில் பயிர்ச்சேதங்களுக்கான இழப்பீடுகளை செலுத்துதலுடன் தொடர்புடைய நடவடிகைகைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் புரிந்த பிரதான பணிகள் பின்வருமாறு அமையும்.

- **2019 சிறு போகம்**

2019 சிறு போகத்திற்காக நடாத்தப்பட்ட தேசிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அமுலாக்கப்பட்ட சுற்றறிக்கைக்கிணங்க இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 சிறு போகத்தில் மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்குகளால் சேதமடைந்த செய்கைகளுக்காக பெருந்தொகையான மேன்முறையீடுகள் மதிப்பீட்டுக் குழுக்களினால் விதப்புரைசெய்து அனுப்பிவைக்கப்பட்டமையாலும் துரிதமாக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கவேண்டிய அவசியம் தோன்றியமையாலும் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க 2019 சிறு போகத்திற்காக மாவட்ட மட்டத்தில் கீழ்க்காணும் வகையில் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாட்டில் நிலவிய கொவிட் நிலைமையின் மத்தியிலும் தாமதமின்றி இழப்பீட்டுப் பதிவேடுகளுடன் தொடர்புடைய கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

லக்கம்	2019 சிறுபோக இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு			
	மாவட்டம்	கமக்காரர் எண்ணிக்கை	ஏக்கரளவு	இழப்பீட்டுத் தொகை (ரூ,)
1	அம்பாறை	1,904	3,858.01	65,770,238.00
2	அநுராதபுரம்	1427	1,922.98	48,638,070.00
3	பதுளை	1,888	2,234.74	40,708,097.00
4	மட்டக்களப்பு	2,142	4,786.80	96,748,450.00
5	தெஹிஅத்தகண்டிய	47	43.25	774,900.00
6	காலி	2,924	2,929.47	86,147,283.00
7	கம்பஹா	4,424	4,189.78	125,344,041.00
8	அம்பாந்தோட்டை	2,048	2674.18	81,833,990.00
9	களுத்துறை	334	366.61	11,000,473.00
10	கண்டி	480	366.68	6,407,148.00
11	கேகாலை	2,937	1,703.86	32,648,719.00
12	குருநாகல்	13,901	10,944.76	250,552,008.00
13	மாகோ	8,007	7,137.23	187,139,305.00
14	மன்னம்பிட்டி	578	568.00	15,061,760.00
15	மன்னார்	21	41.00	885,600.00
16	மாத்தறை	10,282	7,060.00	216,556,829.00
17	மாத்தளை	341	301.65	6,935,785.00
18	மொணறாகல	1,873	2,227.76	55,534,953.00
19	முல்லைத்தீவு	156	149.50	4,768,200.00
20	நுவரெலியா	23	11.75	314,900.00
21	பொலநறுவை	818	1,381.38	29,961,350.00
22	புத்தளம்	1,668	2,709.25	60,917,695.00
23	இரத்தினபுரி	399	350.39	9,177,550.00
24	தம்புத்தேகம	464	489.63	13,343,986.00
25	திருகோணமலை	513	885.00	17,359,850.00
26	வவுனியா	76	93.75	1,375,360.00
	கூட்டுத்தொகை	**59,675**	**59,427.41**	**1,465,906,540.00**

➢ 2019/20 பெரும்போகம்

2019/20 பெரும்போகத்துடன் தொடர்புடைய பயிர்ச் சேதங்கள் 2019.12.30 ஆந் திகதியளவில் கணிசமான அளவில் பதிவாகி இருந்தது.

அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கையில் பயிர்ச்சேதமுற்ற நிலங்களுக்கான சம்பந்தப்பட்ட கடமை அறிவுறுத்தல்களை இற்றைப்படுத்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமையின் மத்தியிலும் அனைத்து மாவட்ட உத்தியோகத்தர்களும் பயிர்ச்சேதங்களுடன் தொடர்புடைய கடமைகளை உச்ச அளவில் மேற்கொண்டு தாமதமின்றி இறுதி அறிக்கைகளை தலைமையகத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

அத்துடன் பொலநறுவை மாவட்டத்தின் 2019/20 பெரும்போகத்தில் இடம்பெற்ற சேதம் தொடர்பிலான இழப்பீடு கணிக்கும் கடமைகளை மேற்கொள்ள போதியளவிலான பணியாளர்கள் இன்மையால் பயர்ச்சேத இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்கான நடமாடும் நிகழ்ச்சியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக பொலநறுவை, திருகோணமலை மாவட்டங்களில் இழப்பீடு செலுத்தும் கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 2019/20 பெரும்போகத்துடன் தொடர்புடைய இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு அறிக்கை பின்வருமாறு அமையும்.

	2019/20 பெரும்போக இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு அறிக்கை			
	மாவட்டம்	**கமக்காரர் எண்ணிக்கை**	**ஏக்கரளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
1	அநுராதபுரம்	6,005	**8,567.21**	**148,773,802.00**
2	அம்பாறை	6,512	10,333.77	150,892,357.00
3	பதுளை	2,361	2,811.36	44,097,715.00
4	மட்டக்களப்பு	9,615	22,791.03	305,062,051.00
5	தெஹிஅத்தகண்டிய	1,261	1,449.35	13,622,150.00
6	யாழ்ப்பாணம்	597	564.22	9,267,280.00
7	காலி	268	206.73	2,620,930.00
8	கம்பஹா	217	216.06	2,992,263.00
9	அம்பாந்தோட்டை	810	899.60	11,223,930.00
10	களுத்துறை	387	343.04	4,155,468.00
11	கண்டி	210	177.01	2,243,918.00
12	கேகாலை	159	79.50	1,687,280.00
13	கிளிநொச்சி	57	143.50	2,470,950.00
14	குருநாகல்	490	624.45	9,088,618.00
15	மாகோ	1,270	1,111.92	13,669,171.00
16	மாத்தளை	1,629	1,380.28	17,758,017.00
17	மாத்தறை	705	458.62	8,679,403.00
18	மன்னம்பிட்டி	3,507	4,023.01	53,976,402.00
19	மன்னார்	2,808	6,772.85	94,348,520.00
20	மொணறாகல	5,080	8,148.32	93,028,553.00
21	முல்லைத்தீவு	1,335	2,215.75	35,646,750.00
22	நுவரெலியா	76	40.81	641,703.00
23	இரத்தினபுரி	94	87.75	1,322,700.00
24	பொலநறுவை	3,518	6,747.38	103,815,610.00
25	புத்தளம்	2,681	4,369.08	66,773,345.00
26	தம்புத்தேகம	2,906	2,754.99	40,716,788.00
27	திருகோணமலை	5,192	8,259.18	126,427,885.00
28	வவுனியா	151	299.50	4,886,515.00
	கூட்டுத்தொகை	**59,901**	**95,876.27**	**1,369,890,074.00**

2019 சிறு போகம் மற்றும் 2019/20 பெரும்போகத்திற்கு மேலதிகமாக 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகத்தின் மேன்முறையீடுகளுக்காகவும் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கிணங்க பயிர்ச் சேதம் தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் பணத்தை விடுவித்தல் பற்றிய முழுவிபரம் பின்வருமாறு அமையும்.

இலக்கம்	பயிர்	கமக்காரர் எண்ணிக்கை	ஏக்கரளவு	இழப்பீட்டுத் தொகை (ரூ.)
1	நெல்	132,241	174,825.37	3,285,048,061.00
2	சோளம்	6,788	11,697.07	147,049,499.00
3	பெரிய வெங்காயம்	35	26.00	422,085.00
4	மிளகாய்	185	84.95	1,874,360.00
5	உருளைக்கிழங்கு	583	570.04	15,423,471.00
6	சோயா	6	6.25	91,800.00
	கூட்டுத்தொகை	**139,838.00**	**187,209.68**	**3,449,909,276.00**

➢ கால்நடைக்காப்புறுதி

கால்நடைக் காப்புறுதியின்கீழ் 2020 ஆம் ஆண்டில் 1550 விலங்குகள் காப்புறுதி செய்யப்பட்டதோடு அதன் மூலமாக ஈட்டிய காப்புறுதி தவணைப் பண வருமானம் ரூபா 4,405,357 ஆகும்.

2020 ஆம் ஆண்டில் இழப்பீடு செலுத்துதல் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிட்டவாறு அமையும்.

நாட்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக சிறப்பான மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறாவிட்டாலும் நிலவுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களின் கடமைகள் அவ்வண்ணமே பேணிவரப்பட்டதோடு இழப்பீட்டுத் தொகைகளை விடுவித்தல் கீழே குறிப்பிட்டவகையில் மேற்கொள்ளப்பட்டது.

2020 மொத்த இழப்பீடு செலுத்துதல்								
மாதம்	மாடுகள்		ஆடுகள்		கேரளா		கூட்டுத்தொகை	
	மொத்த பணத்தொகை (ரூ.)	விலங்குகள் எண்ணிக்கை	மொத்த பணத் தொகை (ரூ.)	விலங்குகள் எண்ணிக்கை	மொத்த பணத் தொகை (ரூ.)	விலங்குகள் எண்ணிக்கை	மொத்த பணத்தொகை (ரூ.)	விலங்குகள் எண்ணிக்கை
சனவரி	221,000.00	3	68,400.00	6	-	-	289,400.00	9
பெப்புருவரி	254,158.50	4	22,500.00	1	-	-	276,658.00	5
மார்ச்சு	592,790.00	7	4,950.00	1	4,000	1	601,740.00	9
ஏப்பிறல்	-	-	-	-	-	-	-	-
மே	-	-	-	-	-	-	-	-
யூன்	1,131,783.50	16	123,840.00	6	-	-	1,255,623.50	22
யூலை	613,700.00	9	54,000.00	4	-	-	667,700.00	13
ஓகத்து	119,000.00	2	17,100.00	1	-	-	136,100.00	3
செத்தெம்பர்	272,000.00	5	22,500.00	1	-	-	294,500.00	6
ஒற்றோபர்	-	-	-	-	-	-	-	-
நவெம்பர்	551,225.00	9	36,000.00	2	-	-	587,225.00	11
திசெம்பர்	148,750.00	3	56,700.00	4	-	-	205,450.00	7
கூட்டுத்தொகை	**3,904,407.00**	**58**	**405,990.00**	**26**	**4,000**	**1**	**4,314,397.00**	**85**

காப்புறுதி செய்யப்பட்ட 85 விலங்குகளுக்கான இழப்பீட்டுத்தொகையை விடுவிக்க 2020 ஆம் ஆண்டில் இயலுமை கிடைத்ததோடு மொத்தப் பொறுப்பு 4.3 மில்லியன் ரூபாவாகும்.

- **சுவசெத, திடீர் விபத்து, மூன்றாந்தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி**

அந்த காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் கணிசமான இழப்பீடு பதிவாகவில்லை என்பதோடு மொத்தப் பொறுப்பு 3 இலட்சம் ரூபாவைவிடக் குறைவான பெறுமானத்தை வகித்தது. குறிப்பாக திடீர் விபத்துக் காப்புறுதியின்கீழ் இவ்வாண்டில் பொறுப்புகள் தோன்றவில்லை.

காப்புறுதி நடவடிக்கைகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட நடுத்தரகால செயற்பாடுகள் கீழே குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டன.

- 2020 ஆம் ஆண்டில் ஆண்டுடன் தொடர்புடைய பயிர்ச் சேதங்களுக்காக பணத்தை விடுவித்தல் தொடர்பான கடமைகளில் 90% ஐ ஆண்டுக்குள்ளேயே நிறைவுசெய்ய இயலுமாயிற்று. அதைப்போலவே 2020 ஆம் ஆண்டின் சிறுபோகத்திற்கான கடமைகளும் தொடங்கப்பட்டன.

- அதைப்போலவே மிளகு, சின்னவெங்காயம், மஞ்சள், இஞ்சி, நிலக்கடலை, எள்ளு, குரக்கன், கொள்ளு, பயறு, கவ்பி, உழுந்து, அன்னாசி, பீர்க்கு, புடோல், பறங்கிக்காய், போஞ்சி, கறுவா, வாழை, பப்பாசி, கறிமிளகாய், கெரட், கரும்புச்செய்கை தொடர்பாக நிலவிய காப்புறுதி செயற்றிட்டங்களை இற்றைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மேலும் எதிர்வரும் ஆண்டுக்கான பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றை ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலமாக கிடைக்கின்ற அறிவுறுத்தல்களின்படி 2021 பெரும்போகத்தில் இருந்து காப்புறுதி நடவடிக்கைகளைத் திட்டமிட எதிர்பார்க்கப்படுகின்றது.

ஓய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

மக்காரர் ஓய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு 2020 ஆம் ஆண்டளவில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 959,254 ஆகும். 2020 ஆம் ஆண்டளவில் திட்டம் ஊடாக நன்மைகள் வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 163,339 பேர் ஆகும்.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகரித்த வயதுப் பிரிவுகளுக்கு வயது 60 வருடங்கள் நிறைவடைந்த பின்னர் கிடைக்கவேண்டிய ஓய்வூதியம் ரூ. 200/- ஆக விளங்கியபோதிலும் இது சம்பந்தமாக இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க கிடைக்கவேண்டிய ஓய்வூதியத்தை ரூ. 1000/- வரை அதிகரித்தமை, ஓய்வூதியம் பெறுனர் இறந்த தினத்தில் இருந்து அவர் உயிருடன் இருந்திருப்பின் அவருடைய வயது 80 வருடங்கள் வரை வாழ்க்கைத்துணைக்கு ஓய்வூதியத்தை செலுத்துதல், வயது 45 - 59 வரையான வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த திட்டத்திற்குப் பங்களிப்புச்செய்ய சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த 02 வருட காலஎல்லை 2007 ஆம் ஆண்டுவரை நீடித்தல் ஆகிய காரணிகளின்பேரில் இந்த திட்டத்தின் நிதியம் 2010 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் பூச்சியநிலையை அடைந்தது. இந்த காரணத்தின்பேரில் 2011 திசெம்பர் மாதம் வரை பொதுதிறைசேரி ஏற்பாடுகள் மற்றும் சபையினால் பேணிவரப்பட்ட பிற நிதியங்களை ஈடுபடுத்தி 2011 திசெம்பர் வரை ஓய்வூதியம் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் நிதியங்களைப் பெறமுடியாமல் போனமையால் 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் இருந்து 2013 திசெம்பர் மாதம்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஸ்தம்பித்தது. எனினும் இறப்பு, ஏலாமை நன்மை பெறுனர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் இடையறாமல் செலுத்தப்பட்டது.

இந்த திட்டத்தில் உருவாகியிருந்த நிதிசார் நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வொன்றினை வழங்கி திட்டத்தை இடையறாமல் அமுலாக்குவதற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தலைமையில் இந்த திட்டத்தில் மறுசீரமைப்பு ஏற்படுத்தப்பட்டதோடு அதன் பெறுபேறாக 2014 வரவுசெலவு முன்மொழிவின்படி அதிகரித்த நன்மைகளைக்கொண்ட புதிய திட்டமாக இந்த திட்டத்தை சட்டமாக்கவும் 2014 ஆம் ஆண்டிலிருந்து புதிய திட்டத்திற்கு நேரொத்தவகையில் அதிக நன்மைகளைக்கொண்ட ஓய்வூதியம் செலுத்துதலை மீண்டும் அமுலாக்கவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் நடப்புப் பொறுப்பு 74.1 பில்லியன் ரூபா ஆகும். இந்த பொறுப்பிற்கு முகங்கொடுப்பதற்காக கமக்காரர் ஓய்வூதியத் திட்ட நிதியத்தை கட்டியெழுப்ப திறைசேரி பிணைமுறிகளை வழங்குவதற்காக மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் 2015 வரவுசெலவு மூலமாக 5 பில்லியன் ரூபா நிதியத்தை வழங்க முன்மொழியப்பட்டபோதிலும் அந்தப் பணம் சபைக்கு கிடைக்கவில்லை. ஒவ்வோராண்டிலும் ஓய்வூதியம் செலுத்துவதற்கு அவசியமான நிதியேற்பாடுகள் அரச வரவுசெலவுத் திட்டம் மூலமாக ஒதுக்கப்படுகின்றது.

மேலும் 2020 ஆம் ஆண்டில் தோன்றிய கொவிட் பெருந்தொற்று நிலைமையின்கீழ் மார்ச்சு, ஏப்பிறல் மாதங்களில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த ஓய்வூதியம் பெறுனர் அனைவருக்கும் ரூ. 5,000 விசேட கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

ஓய்வூதியம் செலுத்துதல்

2020 சனவரி - திசெம்பர்

தொடர் இலக்கம்	மாவட்ட அலுவலகம்	ஓய்வூதியம் பெறுனர் எண்ணிக்கை	செலுத்திய பணத்தொகை
1	அம்பாறை	4,174	112,080,155
2	அநுராதபுரம்	8,071	208,996,240
3	பதுளை	7,025	188,315,756
4	மட்டக்களப்பு	1,196	31,598,473
5	கொழும்பு	5,332	155,885,509
6	காலி	14,505	421,885,705
7	கம்பஹா	11,505	320,878,581
8	அம்பாந்தோட்டை	9,019	241,784,759
9	யாழ்ப்பாணம்	2,604	72,182,171
12	களுத்துறை	8,984	255,318,076
10	கண்டி	16,311	460,190,991
11	கேகாலை	10,405	278,320,197
13	குருநாகல்	19,961	530,666,427
15	மன்னார்	99	2,351,965
14	மாத்தளை	5,046	133,660,715
17	மாத்தறை	10,056	287,446,245
16	மொணறாகல	5,635	148,495,433
18	முல்லைத்தீவு	136	3,972,830
19	நுவரெலியா	3,223	87,726,245
20	பொலநறுவை	5,230	143,303,357
21	புத்தளம்	5,705	152,698,198
22	இரத்தினபுரி	7,589	209,943,453
23	திருகோணமலை	947	25,206,821
24	வவுனியா	581	14,981,310
		163,339	**4,487,889,612**

கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புடைய ஓய்வூதியம் வவுனியா மாவட்டம் ஊடாக செலுத்தப்பட்டது.

இறப்புப் பணிக்கொடை மற்றும் ஏலாமை செலுத்துதல்கள்
2020 சனவரி - திசெம்பர்2020

	மாவட்ட அலுவலகம்	இறப்புகளின் எண்ணிக்கை	செலுத்திய பணம் (ரூ.)	ஏலாமை எண்ணிக்கை	செலுத்திய பணம் (ரூ.)	இறப்பு/இயலாமை மொத்த எண்ணிக்கை	பணத்தொகை
1	காலி	19	432,104	-	-	19	432,104
2	மாத்தறை	7	137,796	-	-	7	137,796
3	அம்பாந்தோட்டை	8	170,197	-	-	8	170,197
4	மொணறாகல	11	237,718	-	-	11	237,718
5	கம்பஹா	8	160,604	-	-	8	160,604
6	பதுளை	10	205,696	-	-	10	205,696
7	இரத்தினபுரி	5	91,506	-	-	5	91,506
8	களுத்துறை	7	139,085	-	-	7	139,085
9	அம்பாறை	3	54,887	-	-	3	54,887
10	கொழும்பு	4	98,935	-	-	4	98,935
11	எம்பிலிபிட்டிய	1	28,224	-	-	1	28,224
12	மன்னம்பிட்டிய	6	146,327	-	-	6	146,327
13	கேகாலை	9	214,378	-	-	9	214,378
14	கண்டி	23	435,840	-	-	23	435,840
15	குருநாகல்	12	229,023	-	-	12	229,023
16	மாகோ	8	192,337	-	-	8	192,337
17	அநுராதபுரம்	7	611,001	-	-	7	611,001
18	பொலநறுவை	6	127,816	-	-	6	127,816
19	புத்தளம்	8	181,978	-	-	8	181,978
20	தம்புத்தேகம	6	116,407	-	-	6	116,407
21	நுவரெலியா	12	224,423	-	-	12	224,423
22	யாழ்ப்பாணம்	13	237,219	-	-	13	237,219
23	திருகோணமலை	1	32,716	-	-	1	32,716
24	மாத்தளை	3	64,826	-	-	3	64,826
25	வவுனியா	4	75,625	-	-	4	75,625
	கூட்டுத்தொகை	**201**	**4,646,668**	**-**	**-**	**201**	**4,646,668**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 1996 செத்தெம்பர் 09 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக அமுலாக்கப்பட்டு வருகின்றது. கடலில் அல்லது கடனீரேரியில்அல்லத உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடித்தலை அல்லது மீனை இனப்பெருக்கம் செய்வதன் மூலமாக தனது வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்கின்ற மீனவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்காக அமுலாக்கப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமாகும்.

செயற்றிட்டத்தின் குறிக்கோள்கள்

- தனது வயோதிப வயதில் அல்லது எலாமைநிலையின்போது மீனவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- மீனவரொருவர் இறந்தவிடத்து அந்த மினவரில் தங்கிவாழ்வோருக்கு நிவாரணம் வழங்குதல்.
- தமது வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காக மீனவர்களை ஊக்குவித்தல்.
- இளைஞர்களை மீன்பிடித் தொழிற்றுறையின்பால் ஆற்றுப்படுத்துதல் மற்றும்
- மீனவர்களுக்கிடையில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதலும் சிக்கனப் பழக்கத்தை விருத்தி செய்தலுமாகும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் உறுப்பாண்மை வழங்கப்பட்டுள்ள மொத்த மீனவர்களின் எண்ணிக்கை 69,049 ஆகும். 5,036 ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூ. 109,283,648 ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது. இந்த செலுத்துதல் 390 தபால் நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் உதவுதொகை செலுத்துனர்கள் மத்தியில் 2020 ஆம் ஆண்டில் 18 பேருக்காக ரூ. 197,000 இறப்புப் பணிக்கொடையாக செலுத்தப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் செலுத்துதல் பற்றிய அறிக்கை			
2020 சனவரி - திசெம்பர்			
	மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு	ஓய்வூதியம் பெறுகின்ற எண்ணிக்கை	மொத்தப் பணத்தொகை
1	களுத்துறை	116	2,549,853.00
2	காலி	135	2,894,137.00
3	மகாவெவ	416	9,151,628.00
4	மாத்தறை	319	6,848,082.00
5	கொழும்பு	61	1,344,913.00
6	தங்காலை	279	6,035,455.00
7	புத்தளம்	67	1,569,783.00
8	நீர்கொழும்பு	625	13,405,068.00
9	மட்டக்களப்பு	504	10,992,416.00
10	திருகோணமலை	111	2,449,821.00
11	மன்னார்	472	10,056,141.00
12	கல்முனை	376	8,349,075.00
13	முல்லைத்தீவு	72	1,496,564.00
14	கிளிநொச்சி	400	8,809,905.00
15	யாழ்ப்பாணம்	1,019	21,912,279.00
நன்னீர் மீன்பிடி நீர்நிலைகள்			
1	நுவரெலியா	7	146,670.00
2	பொலநறுவை	2	44,000.00
3	இரத்தினபுரி	3	63,690.00
4	மொணறாகல	-	-
5	குருநாகல்	3	64,500.00
6	அநுராதபுரம்	4	86,040.00
7	மாத்தளை	5	106,480.00
8	கண்டி	10	200,162.00
9	கேகாலை	-	-
10	பதுளை	5	107,170.00
11	வவுனியா	1	39,372.00
12	மட்டக்களப்பு நன்னீர்	24	560,444.00
	கூட்டுத்தொகை	**5036**	**109,283,648.00**

உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளல் - 2020

	மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு	வயதுக்கிணங்க உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை (வரு.)						2020 மொத்த உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை
		18-29	30-35	36-45	46-50	51-54	55-59	
1	களுத்துறை	1,213	721	772	197	105	59	3,067
2	காலி	1,082	676	840	221	118	95	3,032
3	மகாவெவ	3,253	1,702	2,036	613	256	240	8,100
4	மாத்தறை	1,750	980	1,232	346	201	164	4,673
5	கொழும்பு	576	360	478	140	63		1,655
6	தங்காலை	2,514	1,389	1,629	412	201	169	6,314
7	புத்தளம்	2,167	1,156	1,222	255	107	61	4,968
8	நீர்கொழும்பு	2,538	1,599	2,167	735	419	378	7,836
9	மட்டக்களப்பு	2,248	1,390	1,630	555	272	266	6,361
10	திருகோணமலை	654	516	550	129	81	78	2,008
11	மன்னார்	2,066	1,227	1,343	429	222	257	5,544
12	கல்முனை	1,565	1,109	1,515	479	244	207	5,119
13	முல்லைத்தீவு	88	79	141	50	27	44	429
14	கிளிநொச்சி	519	340	540	250	185	183	2,017
15	யாழ்ப்பாணம்	2,185	1,117	1,444	668	402	617	6,433
நன்னீர் மீன்பிடி நீர்நிலைகள்								
1	நுவரெலியா	29	28	47	7	1	3	115
2	பொலநறுவை	45	35	27	11	2	1	121
3	இரத்தினபுரி	27	15	9	1	3	-	55
4	மொணறாகல	17	14	10	1	-	-	42
5	குருநாகல்	45	24	24	1	-	2	96
6	அநுராதபுரம்	169	81	84	17	7	5	363
7	மாத்தளை	31	14	23	5	2	3	78
8	கண்டி	13	12	25	5	3	3	61
9	கேகாலை	1	1	2	-	-	-	4
10	பதுளை	59	33	33	3	-	3	131
11	வவுனியா	59	33	41	15	4	-	152
12	மட்டக்களப்பு நன்னீர்	84	52	67	27	20	25	275
	மொத்தக் கூட்டுத்தொகை	**24,997**	**14,703**	**17,931**	**5,572**	**2,945**	**2,863**	**69,049**

இறப்பு மற்றும் ஏலாமை நன்மை செலுத்துதல்
2020 சனவரி - திசெம்பர்

	மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு	உதவுதொகை செலுத்தனர் எண்ணிக்கை	பணத்தொகை ரூ.
1	களுத்துறை	2	30,000.00
2	காலி	1	15,000.00
3	மகாவெவ	2	18,000.00
4	மாத்தறை	1	8,000.00
5	கொழும்பு	-	-
6	தங்காலை	1	8,000.00
7	புத்தளம்		
8	நீர்கொழும்பு	1	6,000.00
9	மட்டக்களப்பு	1	8,000.00
10	திருகோணமலை		
11	மன்னார்	4	53,000.00
12	கல்முனை		
13	முல்லைத்தீவு		
14	கிளிநொச்சி		
15	யாழ்ப்பாணம்	5	51,000.00
நன்னீர் மீன்பிடி நீர்நிலைகள்			
1	நுவரெலியா		
2	பொலநறுவை		
3	இரத்தினபுரி	-	-
4	மொணறாகல	-	-
5	குருநாகல்	-	-
6	அநுராதபுரம்	-	-
7	மாத்தளை	-	-
8	கண்டி	-	-
9	கேகாலை	-	-
10	பதுளை	-	-
11	வவுனியா	-	-
12	மட்டக்களப்பு நன்னீர்	-	-
	மொத்தக் கூட்டுத்தொகை	**18**	**197,000.00**

நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு

நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு - 2020

பணியாட்டொகுதி

2020.12.31 இல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பணியாட்டொகுதி கீழே குறிப்பிட்டவாறு அமைந்தது.

பணியாட்டொகுதி உள்ளடக்கம்

சேவைத் தொகுதி	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உள்ளோர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேட்ட முகாமைத்துவம்				
HM	பணிப்பாளர் நாயகம்	1	1	-
HM	பணிப்பாளர்	5	1	4
முகாமைத்துவம்				
MM	பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	45	25	20
கனிட்ட முகாமைத்துவம்				
JM	நிருவாக உத்தியோகத்தர்	2	-	2
	முறைமை நிருவாகி	1	-	1
	நிதி உத்தியோகத்தர்	1	-	1
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
இணை உத்தியோகத்தர்				
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	28	27
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)				
MA - Tech	போக்குவரத்து உதவியாளர்	1	-	1
	செயலாளர்	1	-	1
	புத்தகம் பதியுனர்	4	1	3
	வன் பொருள் மற்றும் வலையமைப்பு வினைஞர்	1	1	-
	தொழில்நுட்ப வினைஞர் (செவிப்புல /கட்புல)	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)				
MA - Non Tech	முகாமைத்துவ உதவியாளர்	220	151	69

ஆரம்ப (வினைஞர்)				
PL - Skilled	சாரதி	38	26	12
ஆரம்ப (வினைஞர் அல்லாத)				
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	42	31	11
		421	**267**	**154**

சபையின் செயற்பொறுப்பினை இடையறாமல் பேணிவருவதற்காக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும்வரை நிலவுகின்ற வெற்றிடங்களில் அத்தியாவசியமான ஒருசில பதவிகளுக்காக தலைமையத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் கீழே குறிப்பிட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

ஒப்பந்த அடிப்படை

HM	பணிப்பாளர்	1
MM	பிரதி /உதவிப் பணிப்பாளர்	4
Ass.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	4
MA - Non Teck	முகாமைத்துவ உதவியாளர் /வெளிக்கள	1
PL - Skilled	சாரதி	1
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	2
	அலுவலக உதவியாளர் (துப்பரவேற்பாட்டுத் தொழிலாளி)	2
	கூட்டுத்தொகை	**15**

அமய அடிப்படை

MA - Non Teck	முகாமைத்துவ உதவியாளர்	30
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	10
	கூட்டுத்தொகை	**40**

2020.12.31 இல் பணியாட்டொகுதி பகுப்பாய்வு

பணியாட்டொகுதியின் ஆண் பெண் பகுப்பாய்வு

ஆண்	-	153
பெண்	-	114
கூட்டுத்தொகை		267



வயதுப் பகுப்பாய்வு

வயதுப் பிரிவு	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
56 - 60	34	13%
51 - 55	38	14%
46 - 50	34	13%
41 - 45	53	20%
36 - 40	60	22%
31 - 35	24	9%
30இற்கு குறைவான	24	9%
கூட்டுத்தொகை	267	100%



சேவைக் காலத்திற்கிணங்க பகுப்பாய்வு

வருடங்கள்	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
30 இற்கு மேல்	39	15%
26 - 30	18	7%
21 - 25	10	4%
16 - 20	13	5%
15 இற்கு குறைந்த	187	70%
கூட்டுத்தொகை	267	100%



2020ஆம் ஆண்டில் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களில் கீழே குறிப்பிடப்பட்ட காரணங்களின்பேரில் 15 ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளார்கள்.

பதவிப் பெயர்	எண்ணிக்கை	சேவை முடிவுறுத்தப்படக் காரணம்
1. உதவிப் பணிப்பாளர்	05	இளைப்பாறல்
2.அபிவிருத்தி உத்தியோகத்தர்	03 01	இளைப்பாறல் இறப்பு
3.முகாமைத்துவ உதவியாளர்	04 01	இளைப்பாறல் பதவி விலகல்
4. அலுவலக உதவியாளர்	01	இளைப்பாறல்

2020 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பும் பதவியுர்வுகளும்

2020 ஆம் ஆண்டுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக நிலவிய சேவை அவசியப்பாட்டின் நிமித்தம் இரண்டு சந்தர்ப்பங்களில் அமய அடிப்படையில் 30 முகாமைத்துவ உதவியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

அதற்கு மேலதிகமாக சபையின் பல பிரிவுகளிலும் மாவட்ட அலுவலகங்களிலும் அலுவலக உதவியாளர் வெற்றிடங்கள் நிலவியமையால் 2020 ஆம் ஆண்டுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த அலுவலக உதவியாளர்

பதவிகளுக்காக சேவை அவசியப்பாட்டின் பேரில் 10 உத்தியோகத்தர்கள் அமய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஊழியர் பயற்சியும் கல்விச் செயற்பாடுகளும்

2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலைமை காரணமாக ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களோ அல்லது கல்விச் செயற்பாடுகளோ மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அதற்காக உத்தியோகத்தர்களை அனுப்பிவைத்தலும் இடம்பெறவில்லை.

ஊழியர் நலனோம்பல்

சபையின் பணியாட்டொகுதியினருக்காக காலை, மாலை தேனீர் வழங்குகின்ற வேலைத்திட்டம், மருத்துவக் காப்புறுதி செயற்றிட்டம், மோட்டார் சைக்கிள் உரித்தான உத்தியோகத்தர்களுக்குமோட்டார் சைக்கிள் கடன் வழங்குதல் முந்திய வருடத்தைப் போல் இவ்வாண்டிலும் இடையறாமல் அமுலாக்கப்பட்டது.

பெறுகைகள் மற்றும் போக்குவரத்துத் துறை

வழங்கல் பிரிவு

சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய கீணும் ஆவணங்களை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்றாந்தரப்பு காப்புறுதி செயற்றிட்டம்

- மூன்றாந் தரப்பு விண்ணப்பப் பத்திரங்கள்
- மூன்றாந்தரப்பு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
- முன்றாந்தரப்பு காப்பீட்டுப் புத்தகங்கள்
- மூன்றாந் தரப்பு அட்டைகள்

கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம்

- கால்நடைக் காப்புறுதி விண்ணப்பப் பத்திரங்கள்
- கால்நடைக் காப்புறுதி உறுதிப் பத்திரங்கள்

சுவசெத காப்புறுதி செயற்றிட்டம்

- சுவசெத விண்ணப்பப் பத்திரங்கள்
- சுவசெத உறுதிப் பத்திரங்கள்

பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்

- பயிர்க்காப்புறுதி விண்ணப்பப் பத்திரம்
- சேத அறிவித்தல் பதிவுடுகள்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்

- கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் அட்டைகள்
- கமக்காரர் ஓய்வூதிய அடையாள அட்டைகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

- கடற்றொழிலாளர் ஓய்வூதியம் செலுத்துதல் அட்டைகள்
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய அடையாள அட்டைகள்

தலைமையகத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் அவசியமான பொதுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், பொது 35, லீவு விண்ணப்பங்கள், போக்குவரத்துக் கடமைகளுக்கு அவசியமான ஆவணங்களை அச்சிடுதலும் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமையகத்திற்கும் அவசியமான தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்கையில் பெறுகை முறையியலுக்கு அமைவாக செயலாற்றியதோடு மாவட்ட அலுவலகங்களுக்கான அலுவலக சாதனங்களும் (மேசைகள், கதிரைகள், அலுமாரிகள்) கொள்வனவு செய்யப்பட்டன.

தலைமையகத்தின் பிரிவுகளிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்படுகின்ற காகிதாதிகள் பெறுகை முறையியல்களைக் கடைப்பிடித்து கொள்வனவுசெய்து களஞ்சியத்திற்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.

போக்குவரத்து ஒதுக்கம்

சபையின் செயற்பொறுப்பினை ஈடேற்றுவதற்காக தலைமையகம், மாவட்ட அலுவலகங்களிடம் 29 வாகனங்கள் இருக்கின்றன. இந்த வாகளங்கள் மத்தியில் 03 ஒதுக்கப்பட்ட வாகனங்கள் இருக்கின்றன. ஏனைய வாகனங்கள் தலைமையகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் ஒதுக்கக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவை பற்றிய விபங்கள் பின்வருமாறு.

தொடர் இலக்கம்	வாகன இலக்கம்	இனம்	பதிவுசெய்த வருடம்	ஆயுட் காலம்
01	32-1427	Mitsubishi Pajero	1985	36
02	32-4880	Toyota (Land Crusir)	1988	33
03	32-4850	Toyota (Land Crusir)	1988	33
04	32-4852	Toyota (Land Crusir)	1988	33
05	32-4938	Mitsubishi Pajero	1988	33
06	32-4920	Mitsubishi Pajero	1988	33
07	32-5210	Mitsubishi Pajero	1988	33
08	51-2423	Nissan (Cab)	1990	31
09	32-7718	Dihasthu (Jeep) (Rocky)	1990	31
10	32-7719	Dihasthu (Jeep) (Rocky)	1990	31
11	32-8016	Dihasthu (Jeep) (Rocky)	1990	31
12	53-9447	Mitsubishi (L200)	1992	29
13	53-9446	Mitsubishi (L200)	1992	29
14	58-4436	Mitsubishi (L200)	1996	25
15	58-4437	Mitsubishi (L200)	1996	25
16	HH-6105	Bolero (Jeep)	2003	18
17	KD-3476	Toyota (121)	2006	15
18	KF-2280	Mitsubishi Pajero	1992	29
19	QM-4647	Bajaj (Threewheel)	2007	14
20	KH-5041	Chevrolet (Aveo)	2008	13
21	KI-2554	Nissan (Sunny)	2008	13
22	KP-8706	Maruti (800)	2011	10
23	KP-8723	Maruti (800)	2011	10
24	KQ-0253	Maruti (800)	2011	10
25	NC-4104	Toyota (Hiace)	2015	6
26	NC-4096	Toyota (Hiace)	2015	6
27	CAL-6100	Micro(Rexton)	2015	6

28	CAL-6101	Micro(Rexton)	2015	6
29	TVS	Champ	2008	13

<u>அலுவலகக் கட்டிடங்கள்</u>

சபையின் தலைமையகம் இவ்வாண்டிலும் இலக்கம்: 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட முகவரியில் அமைந்துள்ள தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் பேணிவரப்பட்டது. சபையின் 30 பிரதேச அலுவலகங்கள் பேணிவரப்படுவதோடு இதில் சபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். ஏனைய மாவட்ட அலுவலகங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் அரச மற்றும் பிரத்தியேக கட்டிடங்களில் தொடர்ந்தும் பேணிவரப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு - 2020

2020 ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையினால் அமுலாக்கப்படுகின்ற காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.

அதற்கிணங்க உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மட்டுப்படத்தப்பட்ட மனித வளத்தில் உதவிப் பணிப்பாளர் உள்ளக கணக்காய்வு., பதில் கணக்காய்வு உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் - கணக்காய்வுப் பங்களிப்பு மற்றும் ஒரு பயிற்சி உத்தியோகத்தரின் சேவையைக் கொண்டதாக 2020 ஆம் ஆண்டுக்காக 11 உள்ளக கணக்காய்வு பரீட்சித்தல்களும் தலைமையகத்தில் ஒவ்வொரு பிரிவு பிரிவு மற்றும் புவியியல் மட்டத்தில் வியாபித்துள்ள 27 மாவட்ட அலுவலகங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்காக நிலவுகின்ற விவசாய அபாயநேர்வினை முகாமை செய்வதை நோக்கமாகக்கொண்டு ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை வினைத்திற்னுடனும் ஆக்கவிளைவு மிக்கதாகவும் ஈடேற்றுவதற்காக அமுலாக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் அளவுசார்தன்மை, திட்பநுட்பத்தன்மை மற்றும் அவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக கீழே ஒவ்வொரு பிரிவின்கீழும் உள்ளக கணக்காய்வுப் பரீட்சித்தல்கள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டது.

நிருவாகப் பிரிவினை உள்ளடக்கத்தக்கவகையில் கம்பஹா மாவட்ட அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள KQ 0253 இலக்கமுடைய சபையின் உத்தியோகபூர்வ ஊர்தி விபத்துக்குள்ளாகி இருக்கின்றதா என்பது பற்றிய புலன்விசாரணை, வட்டியையும் அபராதத் தொகையையும் அறவிடுவதற்காக வட்டியைக் கணிப்பிடுதல் - ஜயந்தி விஜேரத்ன (அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம்) எனும் துறையின்கீழ் கணக்காய்வுப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டது.

நிதிப்பிரிவினை உள்ளடக்கத்தக்கதாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் பற்றி உறுதிசெய்து கொள்ளல், 001622 கணக்கிலக்கம் கொண்ட கால்நடைக் காப்புறுதிக் கணக்கு / காசேடுகள் மற்றும் வங்கி ஒப்பீட்டினைத் தயாரித்தல் பற்றிய பரீட்சித்தல்கள், மாவட்ட அலுவலக நிருவாகக் கணக்குப் பரீட்சித்தல் - களுத்துறை ஆகிய துறைகளின்கீழ் கணக்காய்வுப் பரீட்சித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காப்புறுதிப் பிரிவின் அலுவல்களுடன் தொடர்படையதாக சுவசெத சுகாதாரக் காப்புறுதித் திட்ட நன்மைகளை செலுத்துதல் பற்றிய பரீட்சித்தல் - 2019 எனும் துறையின்கீழ் கணக்காய்வுப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டது.

தலைவரால் பணிப்புரை விடுக்கப்பட்ட விசேட விசாரணையின்கீழ் காணாமல்போன மூன்றாந்தரப்பு காப்புறுதிக் காப்பீட்டுப் பத்தகங்கள் பற்றிய விசேட விசாரணை, மாவட்ட அலுவலக விசேட கணக்காய்வுப் பரீட்சித்தல் - கேகாலை மாவட்ட அலுவலகம், 3436 இலக்கமுடைய பொது தவணைப்பண பற்றுச்சீட்டுப் புத்தகம் காணாமல் போனமை பற்றிய விசாரணை மற்றும் அலுவலக மேசையின் தாழ்ப்பாள் உடைந்தமை பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதோடு பணிப்பாளர் நாயகத்தினால் பணிப்புரை விடுக்கப்பட்ட விசேட விசாரணையின்கீழ் மூன்றாந்தரப்பு காப்புறுதி செயற்றிட்டத்தின் கீழான காப்புறுதி அட்டைகளை கவனயீனமாக விநியோகித்தல் பற்றிய விசாரணை - கண்டி மாவட்ட அலுவலகம், திரு. டீ. சிறில் தயானந்தவுக்க செலுத்தவேண்டிய கொடுப்பனவுகள் சம்பந்தமான அறிக்கை, புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற பயிர்ச்சேத இழப்பீட

செலுத்துதல் வைபவத்திற்காக மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கிய முற்பணத் தொகையை பாவித்தமை பற்றிய பரிட்சித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், கமத்தொழில் அமைச்சு மற்றும் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் என்பவற்றுடன் இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்

2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் (2020.07.30) நடாத்தப்பட்டதோடு அதன்போது வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கிணங்க உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வு பரீட்சித்தல் அறிக்கைகளை மதிப்பீடு செய்தல், அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களை மீளாய்வு செய்தல், வருடாந்த நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புடைய கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துகக் குழு அங்கத்தவர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

திருமதி டபிள்யு.எச்.ஏ. விமலஜீவ குழுத்தலைவர் - பணிப்பாளர் பொது நிதித் திணைக்களம்

திரு. டபிள்யு. எம்.எம். பீ. வீரசேகர குழு அங்கத்தவர் - ஆணையாளர் நாயகம் - கமநல அபிவிருத்தி திணைக்களம்

திரு. பி.எஸ்.கே.ஆர. வீரக்கோன் குழு அங்கத்தவர் - மேலதிக் செயலாளர் - கமத்தொழில் அமைச்சு

திட்டமிடல் பிரிவு

திட்டமிடல் பிரிவு - 2020

2020 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்க மற்றும் அரும்பணிக்கமைவாக இயங்கி சபையின் அனைத்துப் பிரிவுகளையும் இணைப்பாக்கம்செய்து நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு அவசியமான திட்டங்களை வகுத்தல், கருத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் தயாரித்தல், தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் காலக்கிரமம்படி திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், ஊகங்கள் மற்றும் விதப்புரைகளை சமர்ப்பித்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

பிரிவுகளுக்கிடையிலான இணைப்பாக்கம், தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கம்

திட்டமிடல் பிரிவினால் 2020 ஆம் ஆண்டு முழுவதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் அனைத்துப் பிரிவுகளுடனும் சிறந்த இணைப்பாக்கத்தைப் பேணிவந்து ஒவ்வொரு பிரிவினதும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் புள்ளிவிபரத் தகவல்களை கிரமமாக சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டதோடு மேற்படி புள்ளிவிபரங்களைப் பகுப்பாய்வுசெய்து மாதாந்தஈ காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அவசியமான நடவடிக்கைகளுக்காக உயர் முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் கமத்தொழில் அமைச்சினை உள்ளிட்ட விவசாயத்துறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஏனைய நிறுவனங்களையும் இணைப்பாக்கம்செய்து 2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக அந்த நிறுவனங்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட சகல அறிக்கைகளையும் தயாரித்து நிறுவனத் தலைவர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு துரிதமாக ஆற்றுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் இந்த சபையினால் பெறப்பட்ட முன்னேற்றம் பற்றிய தரவுகளையும் தகவல்களையும் சேகரித்து அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டதோடு அது நிறுவனத் தலைவர்கள் ஊடாக வரிசை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கருத்திட்டங்களையும் ஆராய்ச்சிப் பணிகளையும் அமுலாக்குதல்

திட்டமிடல் பிரிவின் தலைமையில் பயர்ச்சேதங்களுக்காக இழப்படு செலுத்துகின்ற செயற்பாங்கில் இனங்கண்ட சிக்கல்கள் மற்றும் முறைகேடுகளை குறைத்துக்கொண்டு சேத மதிப்பீடு மற்றும் இழப்பீடு செலுத்தும் செயற்பாங்கினை சரியாகவும் வினைத்திறனுடனம் மேற்கொள்ளும் நோக்கத்துடன் கமத்தொழில் காப்புறுதியுடன் தொடர்புடைய புதிய தொழில்நுட்பங்களை இலங்கைக்காக பிரயோகிக்கக்கூடிய விதம் சம்பந்தமாக அமுலாக்கப்படுகின்ற கீழ்க்காணும் கருத்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டன.

- **சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்கான கருத்திட்டம்**

உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வானிலை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் தpட்டமொன்னறை அறிமுகஞ் செய்கின்ற (Weather Index Base Insurance) கருத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், அம்பாறை, கம்பஹா, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு அமுலாக்கப்பட்டது.

2019/20 பெரும்போகத்தில் இந்த புதிய முறையிலின்கீழ் வவுனியா மாவட்டத்திற்காக பயிர் சேதம் விளைந்த 85 கமக்காரர்களின் 216.75 ஏக்கருக்காக ரூ. 3,134,215.00 இழப்பீடு செலுத்தப்பட்டது.

2020 சிறுபோகத்திற்காக புதிய முறையியலின்கீழ் வவுனியா மாவட்டத்தில் வானிலைக் காரணங்களால் பயிர்ச் சேதம் பதிவாகி இருக்கவில்லை என்பதோடு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பயிர்ச் சேதத்தை எதிர்நோக்கிய 168 கமக்கார்களின் 394.5 ஏக்கருக்காக ரூ. 3,909,727.08 இழப்பீட்டுத் தொகையை செலுத்த அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலைமையில் கொவிட் - 19 பெருந்தொற்று நிலைமை காரணமாக கம்பஹா மாவட்டத்தின் தாமதித்த இழப்பீடகளை செலுத்தும் பணிகள் இந்நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020/21 பெரும்போகத்திற்காக இலங்கையின் அடிப்படை விவிசாய மாவட்டங்களுக்காக இந்த முறையியலின்கீழ் இழப்பீட்டினைக் கணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பெரும்போகத்தின் ஆரம்பத்துடன் அம்பாந்தோட்ஜட, கருநாகல், அநுராதபுரம், அம்பாறை, கம்பஹா, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களை முதன்மையாகக்கொண்டு பூர்வாங்க தரவுகளை சேகரிக்கும் பணிகளை மேற்கொண்டு மேற்படி தரவுகளுக்கிணங்க காப்புறுதி உற்பத்திகளை தயாரித்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **விவசாயத் தகவல் முகாமைத்துவ முறைமை (AMIS) மற்றும் வெப்/நடமாடும் உள்ளீட்டினை (Web/ Mobile Application) கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சித்திட்டம்**

சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்கான (Index Base Insurance) கருத்திட்டத்துடன் கூட்டாக கமத்தொழில் அமைச்சின் தலைமையில் விவசாயத் தரவுகளை உள்ளிட்ட விவசாய தகவல் முகாமைத்துவ முறைமை (AMIS), வெப்/நடமாடும் உள்ளீட்டினை (**Web/ Mobile Application**) கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சிட்டம் 2020 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டது.

கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடிக் கருத்திட்டங்களின் அனுபவங்களின்படி 2020 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கமக்கார்களினதும் விவசாயநிலங்களினதும் தரவுகளையும் தகவல்களையும் உள்ளடக்குதல் பயிர்நில புவி- இடப்பரப்பு தகவல்களைச் சார்ந்தவகையில் இனங்காணல் மற்'றும் பயிர்நிலங்களை வரைபடமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் மற்றும் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட வெளிக்ள் மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. மேலும் வரைபடமாக்கல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தரவுகளை உள்ளீடுசெய்கின்ற உத்தியோகத்தர்களுக்காக மென்பொருளை அபிவிருத்தி செய்யும் நிறுவனமான Geo - edge நிறுவனத்தின் பங்கேற்புடன் பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

அவ்விதமாக பயிற்சி அளிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் உதவியுடன் தரவு உள்ளீட்டு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி விவசாய நிலங்களை வரைபடமாக்கல் மற்றும் கமக்காரர்களினதும் விவசாய நிலங்களினதும் தரவுகளை உள்ளீடு செய்யும் பணிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை அமலாக்கப்பட்டது.

இதன்போது அம்பாந்தோட்டை மாவட்டக் கருத்திட்டத்தின் முதலாவத படிமுறையின்கீழ் நெடொல்பிட்டிய மற்றும் பெலிஅத்த கமநல சேவைகள் நிலையங்களின் அனைத்து வயற் காணிகளையும் துண்டுமட்டத்தில் வரைபடமாக்கும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டன. இரண்டாவது படிமுறையின்கீழ் அனைத்து கமநலசேவை நிலையங்களியும் கண்ட மட்டத்தில் வயல்களை வரைபடமாக்கும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டன. மேட்டுநிலக் காணிகளை வரைபடமாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நடமாடும் உள்ளீட்டினை பாவித்தல் சம்பந்தமாக பூர்வாங்க விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிஅமுலாக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்தில் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்காகவும் கருத்திட்டம் பற்றிய முன்கூட்டிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டது.

மேலும் இந்த கருத்திட்டத்துடன் தொடர்புடைய வெப்/ நடமாடும் உள்ளீட்டினை அபிவிருத்தி செய்யும் பணியும் 2020 ஆம் ஆண்டு பூராவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்போது Geo - edge நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் தொடர்ச்சியான கூட்டங்களை நடாத்தி சபையின் அவசியப்பாடு மற்றும் செயற்பாங்குடன் பொருந்தக்கூடியவகையில் மேற்படி உள்ளீடகளை அபிவிருத்திசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 உள்ளிட்ட எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கான திட்டங்களை தயாரித்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் தபனஞ்சார் நோக்கங்களை அடைவதற்காக 2021 ஆம் ஆண்டில் செயலாற்றுகின்ற விதம் பற்றிய திட்டங்களை வகுக்கும் பணிகள் திட்டமிடல் பிரிவின் தலைமையில் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க சபையின் அனைத்துப் பிரிவுகளையும் பிரதானமான விவசாய மாவட்டங்களின் உத்தியோகத்தர்களையும் தொடர்புபடுத்திக்கொண்டு சபையின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. மேற்படி கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு 2021 இன் வருடாந்நத செயற்பாட்டுத் திட்டத்தினதும் 2021 - 2025 கூட்டுத் திட்டத்தினதும் வரைவு தயாரிக்கப்பட்டது. மேற்படி வரைவு உயர் முகாமைத்துவத்தினதும் பிரிவுத் தலைவர்களினதும் திருத்தங்களுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக அரச ஏற்பாடுகளின்பேரில் அமுலாக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடையதாக 2021 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் திஜட்டமிடல் பிரிவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

நிதிப் பிரிவு

நிதிசார் பொழிப்பு

2020 ஆம் ஆண்டில் சபையின் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 1153.7 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியதோடு இவ்வாண்டில் ஈட்டிய தொழிற்பாட்டு இலாபம் 1401.3 மில்லியன் ரூபாவாகும்.

2018 வரவுசெலவு முன்மொழிவின் பிரகாரம் கட்டாய காப்புறுதித் திட்டம் மேற்படி ஆறுவகையான பயிர்களுக்காகவும் இவ்வாண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அதனூடாக நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் போன்ற பயிர்களுக்காக ஏக்கருக்கு ரூ. 40,000/- உச்சவரம்பிற்கு கட்டுப்பட்டதாக காப்பீட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல போகங்களாக நிலவிய கடுமையான வறட்சி நிலைமை மற்றும் மாற்றங்களினால் ஏற்பட்ட தாக்கத்தை கருத்திற்கொண்டு ஆண்டுக்குள்ளே கமக்காரர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தொகையை அவர்களிடமிருந்து அறவிடாமல் அரசாங்கத்தினால் வழங்க தீர்மானிக்கப்பட்டதோடு மேற்படி பணத்தொகை 1950 மில்லியன் ரூபாவாகும்.

அதற்கு மேலதிகமாக ஏனைய காப்புறுதி செயற்றிட்டங்களில் துரித வளர்ச்சியை அடைய இயலுமானதோடு அது முந்திய வருடத்தன் சார்புரீதியாக 26 % வளர்ச்சியாகும்.

2020 ஆம் ஆண்டில் சபையின் கட்டாய பயிர்க் காப்புறுதி இழப்பீட்டு வங்கிப்பொறுப்பு ஏறக்குறைய 1900 மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் மூலமாக 163,091 கமக்காரர்களுக்காக 4,502 மில்லியன் ரூபா தேறிய பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டதோடு கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் 5,036 கடற்றொழிலாளர்களுக்கு 112 மில்லியன் ரூபா ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள்

இலாபத்தன்மை

- **கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்**



	1 2016	2 2017	3 2018	4 2019	5 2020
தொழிற்பாட்டு இலாபம் (ரூ.மி.)	377.7	80.9	1,144.7	878	1,401.3
தேறிய இலாபம்(ரூ.மி.)	355.8	42.3	921	652.3	1,153.7

2020 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 1153.7 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியதோடு, அது 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 76.95% அதிகரிப்பினை சுட்டிக்காட்டுகின்றது. முந்திய வருடத்துடன் சார்புரீதியாக காப்புறுதி வருமானம் அதிகரித்தமையும் இழப்பீடு செலுத்துதலை உள்ளிட்ட தொழிற்பாட்டுச் செலவுகள் குறைவடைந்தமையுமே இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளது. இதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் மொத்த காப்புறுதி வருமானம் 2,038 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அது 2020 இல் 2,294 மில்லியன் ரூபாவாக அமைந்தது. அது 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 13% அதிகரிப்பாகும். இதற்கு மெலதிகமாக சபையினால் நடைமுறைப்படத்தப்பட்ட மூன்றாந் தரப்பு காப்புறுதிச் செயற்றிட்டம் உள்ளிட்ட எனைய காப்புறுதி செயற்றிட்டங்கள் முந்திய வருடத்துடன் சார்புரீதியாக உயர்ந்த அளவிலான முன்னேற்றத்தை வெளிக்காட்டியதோடு மேற்படி செயற்றிட்டங்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் சபை ஈட்டிய வருமானம் 298.5 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அது 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 26% வளர்ச்சியாகும். இதற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் சபையினால் அனைத்து செயற்றிட்டங்களிலுமிருந்து எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைய இயலுமாயிற்று.

➢ கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்



	1 2016	2 2017	3 2018	4 2019	5 2020
வருமானம்(ரூ.மி.)	221.6	208.4	211.9	233.4	209.8
தொழிற்பாட்டுச் செலவு(ரூ.மி.)	2,653	2,679	3,114	3,271	4,555

2014 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் 163,091 கமக்காரர்களுக்கு 4,502 மில்லியன் ரூபா தேறிய ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது. இவ்வரடத்தில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவு 4,555 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு முந்திய வருடத்தைப் போலவே இவ்வருடத்திலும் பொது திறைசேரியினால் ஓய்வூதியம் செலுத்துவதற்காகன நிதியேற்பாடாக 4,450.94 மில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

➢ **<u>கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்</u>**



	1 2016	2 2017	3 2018	4 2019	5 2020
வருமானம்(ரூ.மி.)	60.5	56.1	69.7	53	29.6
தொழிற்பாட்டுச் செலவு(ரூ.மி.)	58	63.7	66.1	67.2	115.4

2020 ஆம் ஆண்டில் 112 மில்லியன் ரூபா ஓய்வூதியம் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதோடு அதற்காக சபைக்குச் சொந்தமான நிதியங்களும் பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த 48.68 மில்லியன் ரூபா பணத்தொகையும் ஈடுபடுத்தப்பட்டது.

ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்குமன ஒருங்கிணைந்த கணக்குக் கூற்று

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
நிதிநிலைமை பற்றிய ஒருங்கிணைந்த கூற்று
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(ரூ.)

	செயற்றிட்டம் 2020.1.31 இல்			குழுமம்	
	க.கா.தி.	கம.ஓய்.திட்.	கூ.ற்.ஓய், திட்.	19 திசெ : 31	18 திசெ : 31
சொத்துக்கள்					
நடைமறையல்லாச்சொத்துக்கள்					
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி	58,804,681	3,086,591	107,624	61,998,896	76,588,172
பலவ மதிர் வுவரைதடுத்துவைத்த மதலீகள்					
இறைசேரி முறிகள்	-	1,050,288,368	-	1,050,288,368	1,055,048,183
	58,804,681	**1,053,374,959**	**107,624**	**1,112,287,264**	**1,131,636,355**
நடைமறைச் சொத்துக்கள்					
கையிருப்பு	7,552,991	1,347,762	95,619	8,996,372	8,438,783
வருமதிகள்	1,141,689,593	28,158,180	338,999,572	264,902,837	1,167,872,706
வருமதியான தவணைகள்	1,949,677,184	2,811,953	-	1,952,489,137	2,116,415,761
வைப்புகளும் முற்செலுத்துதல்களும்	5,308,902	-	-	5,308,902	5,599,152
முற்பணம்	671,901	-	-	671,901	682,399
பருவ முதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச்சாதனங்கள்	2,795,687,100	186,912,687	332,715,857	3,315,315,644	2,180,673,884
வங்கியிலுள்ள காசு	15,260,940	2,811,325	1,223,681	19,295,947	54,684,464
	5,915,848,610	**222,041,908**	**673,034,730**	**5,566,980,740**	**5,534,367,149**
மொத்தச் சொத்துக்கள்	**5,974,653,292**	**1,275,416,867**	**673,142,354**	**6,679,268,004**	**6,666,003,503**
உரிமைப்பங்கையும் பொறுப்புகளும்					
மூலகணமாய் வைக்கங்கணம்					
க.க.கா.ச. ஆக்க நிதியம்(பற்றாக்குறை) மிகைநிலை	3,094,309,645	-	-	3,094,309,645	1,940,626,652
அரசாங்கக்கொடை - மூலதனம்	3,169,323	-	-	3,169,323	5,291,886
இறைசேரி பங்களித்துதொடக்க மூலதனம்	50,000,000	-	-	50,000,000	50,000,000
சம்பூதிய நிதியம்	-	(79,283,851,683)	(3,675,902,450)	(82,959,754,133)	(78,722,253,838)
இறப்புப் பணிக்கொடை நிதியம்	1,077,622,157		29,500,355	1,107,122,512	1,056,736,458
குசமக்காப்புறுதிப் பங்களிப்பு	-	1,000,000	-	1,000,000	1,000,000
பணியாட்டொகுதிமருத்துவக் காப்புறுதி நிதியம்	8,678,452	-	-	8,678,452	7,049,619
உறுபத்தி மேம்பாடு மற்றும்கைக்குளிப்புப் படி நிதியம்	17,595,272	-	-	17,595,272	11,755,982
பிற நிதியங்கள்					
க.க.கா.ச. இரண்டநிதியம்	214,367,761		-	214,367,761	147,150,959
கெத்தட்ட அருண கட்டாயக் காப்புறுதி	706,503,600	-	-	706,503,600	706,503,600
மீளகணிப்பீட்டுஒதுக்கம்	58,129,167	2,850,000	-	60,979,167	58,129,167
	5,230,375,377	**(79,280,001,683)**	**(3,646,402,095)**	**(77,696,028,401)**	**(74,738,009,515)**
நடைமறையல்லாபொறுப்புகள்					
சம்பூதிய பொறுப்புகள்	-	74,155,908,494	4,261,454,710	78,417,363,204	74,168,438,850
இறைசேரி முறிகள் மீதான அரசாங்கக்கொடை	-	1,081,488,000	-	1,081,488,000	1,081,488,000
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	40,491,283	67,904,481	3,030,564	111,426,328	95,311,245
	40,491,283	**75,305,300,975**	**4,264,485,273**	**79,610,277,532**	**75,345,238,095**
நடைமறைப் பொறுப்புகள்					
அச்சிடல் பணிகளுக்கான ஏற்பாடுகள்	1,086,048	1,026,760	602,489	2,715,297	2,518,107
முற்குவணைக் கிடைப்பனவுகள்	34,653,447	-	-	34,653,447	25,893,007
பிறசென்மதிகள்	75,508,321	5,246,471,167	52,710,896	4,130,745,875	3,974,986,149
அட்டுது செலவுகள்	17,520,354	2,619,648	1,745,791	21,885,793	22,034,035
சேத ஐழப்பீட்டுக்கான ஏற்பாடுகள்	575,018,461	-	-	575,018,461	2,033,343,626
	703,786,631	**5,250,117,575**	**55,059,176**	**4,765,018,874**	**6,058,774,924**
மொத்த உரிமைப் பங்கையும் பொறுப்புகளும்	**5,974,653,292**	**1,275,416,867**	**673,142,354**	**6,679,268,004**	**6,666,003,504**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டம்
விபரமான வருமானம் பற்றிய ஒருங்கிணைந்த கூற்று
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(ரூ.)

	செயற்றிட்டம் 2020.1.31 இல்			குழுமம்	
	க.கா.தி.	கம.ஓய்.திட்ட.	கடற்.ஓய், திட்.	19 திசெ : 31	18 திசெ : 31
வருமானம்					
காப்புறுதி தவணைப்பணம்	344,395,090	-	-	344,395,090	298,553,291
காப்புறுதி தவணைப்பணம் – திறைசேரி பங்களிப்பு	1,950,000,000	-	-	1,950,000,000	1,739,880,000
இழப்பீட்டுக்கான கொடை – தே.கா.ந.பொ.நி – பயிர் வரி	1,099,070,813	-	-	1,099,070,813	1,201,617,885
ஓய்வூதியத்திற்கான கமக்காரர் பங்களிப்பு	-	99,002,319	90,148	99,092,468	114,775,520
வட்டி வருமானம்	136,947,307	110,806,428	33,093,265	256,233,401	249,149,386
	3,530,413,210	**209,808,748**	**33,183,413**	**3,748,791,771**	**3,603,976,082**
கழிக்க – தொழிற்பாட்டுச் செலவு					
இழப்பீடு – க.க.கா.ச.	(1,914,086,373)	-	-	(1,914,086,373)	(2,173,895,081)
மறுகாப்புறுதியாளரிடமிருந்து மீள் அறவிடத்தக்க உரிமை	(163,619,152)	-	-	(163,619,152)	312,000,000
தொழிற்பாட்டுச் செலவினம்	(51,371,640)	(1,138,804)		(52,510,444)	(49,963,770)
ஓய்வூதியம் செலுத்துதலும் தரகும்	-	(4,516,147,514)	(112,923,420)	(4,629,070,934)	(3,294,702,104)
குழுமக் காப்புறுதி தவணைப்பணம்	-	(18,320,374)	(1,759,740)	(20,080,114)	(20,785,234)
மறுகாப்புறுதி தவணைப்பணம்	-	-	-	-	(576,361,848)
தவணைப்பண மீளளிப்பும் தேறிய வட்டியும்	-	(19,602,799)	(724,189)	(20,326,988)	(21,755,298)
	(2,129,077,165)	**(4,555,209,491)**	**(115,407,349)**	**(6,799,694,005)**	**(5,825,463,335)**
தொழிற்பாட்டு மிகைநிலை / பற்றாக்குறை	**1,401,336,045**	**(4,345,400,744)**	**(82,223,936)**	**(3,050,902,234)**	**(2,221,487,253)**
சேர்க்க :					
ஓய்வூதியம் செலுத்துவதற்கான அரசாங்கக் கொடை		4,450,949,000	48,685,000	4,499,634,000	3,065,000,000
நிர்வாகச் செலவினங்களுக்கான அரசாங்கக் கொடை	-	150,000,000	-	150,000,000	138,000,000
நிர்வாகச் செலவினங்களுக்கான கமக்காரர்களின் உதவுதொ	-	1,263,090	-	1,263,090	1,387,845
நிர்வாகச் செலவினங்களுக்கான கொடை – கடற்.ஓய்.திட்ட	-	-	1,500,000	1,500,000	1,500,000
பிற வருமானம்	8,293,807	390,536	220	8,684,563	9,628,446
	8,293,807	**4,602,602,626**	**50,185,220**	**4,661,081,653**	**3,215,516,291**
	1,409,629,853	**257,201,882**	**(32,038,716)**	**1,610,179,419**	**994,029,038**
கழிக்க : செலவுகள்					
நிர்வாகச் செலவுகள்	(179,606,788)	(139,844,725)	(8,242,675)	(327,694,188)	(328,159,487)
நிதியும் பிறவும்	(159,411)	(49,460,045)	(500)	(25,006,356)	(38,873,813)
	(179,766,199)	**(189,304,770)**	**(8,243,175)**	**(352,700,544)**	**(367,033,300)**
தேறிய மிகை / (பற்றாக்குறை)	**1,229,863,654**	**67,897,112**	**(40,281,891)**	**1,257,478,876**	**626,995,738**
கழிக்க : க.க.கா.ச. திரண்ட நிதியத்திற்கான ஏற்பாடு	(70,066,802)	-	-	(70,066,802)	(43,902,996)
ஏற்பாடுகளுக்குப் பின்னர் தேறிய மிகை / (பற்றாக்குறை	**1,159,796,852**	**67,897,112**	**(40,281,891)**	**1,187,412,073**	**583,092,742**
பிற விரிவான வருமானம்					
பணிக்கொடை இலாபம் / (நட்டம்)	(6,113,859)	(15,396,284)	(702,246)	(22,212,390)	(19,049,362)
ஓய்வூதியப் பொறுப்பின் அதிகரிப்பு		(3,903,039,382)	(345,884,972)	(4,248,924,354)	(4,069,346,251)
	(6,113,859)	**(3,918,435,666)**	**(346,587,218)**	**(4,271,136,743)**	**(4,088,395,613)**
விரிவான வருமானத்தின் தேறிய மிகைநிலை / (பற்றா	**1,153,682,993**	**(3,850,538,554)**	**(386,869,109)**	**(3,083,724,670)**	**(3,505,302,871)**

2020 திசெம்பர் 31 அல் நிதிசார் கூற்றுக்கள்

கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	2020.12.31 ரூ. சதம்	2019.12.31 ரூ. சதம்
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம் , சாதனம் . பொறித்தொகுதி	1	58,804,681.11	73,003,497.28
		58,804,681.11	73,003,497.28
நடைமுறைப் பொறுப்புகள்			
கையிருப்பு	2.1	7,552,990.81	5,911,638.92
வருமதிகள்	2.2	1,141,689,592.97	2,014,704,148.35
வருமதியான தவணை	2.3	1,949,677,184.30	2,114,102,797.50
வைப்புக்களும் முன்கொடுப்பனவுகளும்	2.4	5,308,901.80	5,599,152.20
முற்பணம்	2.5	671,900.59	682,398.69
பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்க	2.6	2,795,687,099.69	1,878,869,760.35
வங்கியிலுள்ள காசு	2.7	15,260,940.29	51,451,163.43
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		5,915,848,610.45	6,071,321,059.44
நடைமுறைச் சொத்துக்கள்		**5,974,653,291.56**	**6,144,324,556.72**
உரிமைப்பங்குகளும் சொத்துக்களும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
திறைசேரி பங்களித்த தொடக்க மூலதனம்		50,000,000.00	50,000,000.00
க.க.கா.ச. திரண்ட நிதியம்	3	3,094,309,644.75	1,940,626,652.11
அரசாங்கக் கொடை - மூலதனம்	4	3,169,323.27	5,291,885.94
க.க.கா.ச. திரண்ட நிதியம்	5	214,367,760.92	144,300,958.65
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	6	1,077,622,157.13	1,028,673,843.49
பணியாட்டொகுதி மருத்துவக் காப்புறுதி நிதியம்		8,678,452.29	7,049,618.74
கெத்தட்ட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம்		706,503,600.00	706,503,600.00
மீள்கணிப்பட்டு ஒதுக்கம்		58,129,166.66	58,129,166.66
உற்பத்தி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்புப்படி நிதியம்		17,595,272.04	11,755,982.24
		5,230,375,377.06	3,952,331,707.83
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடு		40,491,283.33	38,564,522.82
		40,491,283.33	38,564,522.82
நடைமுறைப் பொறுப்பு			
அச்சிடல் பணிளுக்கான ஏற்பாடு		1,086,047.96	971,151.30
முற்தவணைக் கிடைப்பனவுகள்	7.1	34,653,446.81	25,893,006.64
பிற சென்மதிகள்	7.2	75,508,320.60	77,240,875.60
அட்டுறு செலவுகள்	7.3	17,520,354.48	15,979,666.54
சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடு	7.4	575,018,461.32	2,033,343,626.00
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		703,786,631.17	2,153,428,326.08
மொத்த உரிமைப் பங்குகளும் பொறுப்புகளும்		**5,974,653,291.56**	**6,144,324,556.73**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமத் தேவைகளுடன் அமைந்தொழுகுகின்றன

……..

நிதிப் பிரிவுப் பிரதானி

நிதிக்கூற்றுகளை தயாரித்தலும் சமர்ப்பித்லும் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புக்கூற வே

பணிப்பாளர் சபையின் சார்பில் கையொப்பமிட்டது.

……..	……..
பணிப்பாளர் சபை உறுப்பினர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்
கமத்தொழில் மற்றும் நமநலக் காப்புறுதிச்சபை	கமத்தொழில் மற்றும் நமநலக் காப்புறுதிச்சடை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
விரிவான வருமானக் கூற்று
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

		2020.12.31	2019.12.31
வருமானம்	குறிப்பு	ரூ. சதம்	ரூ. சதம்
தவணை - காப்புறுதி	8.1	344,395,090.13	298,553,291.45
காப்புறுதி தவணை - திறைசேரி பங்களிப்பு		1,950,000,000.00	1,739,880,000.00
இழப்பீட்டுக்கான அளிப்பு - தே.கா.ந.பொ.நி. - பயிர் வரி		1,099,070,812.53	1,201,617,885.00
வட்டி	8.2	136,947,307.26	125,022,572.80
மொத்த வருமானம்		**3,530,413,209.92**	**3,365,073,749.25**
நெறிப்படுத்தல் செலவு			
இழப்பீடு	9.1	(1,914,086,372.63)	(2,173,895,081.29)
மறுகாப்புறுதி தவணை		-	(576,361,848.14)
மறுகாப்புறுதியாளரிடமிருந்து மீள அறவீடு செய்யக்கூடிய உரிமைகோரல்		(163,619,151.86)	312,000,000.00
தொழிற்பாட்டுச் செலவுகள்	9.2	(51,371,640.08)	(48,756,893.82)
		(2,129,077,164.57)	**(2,487,013,823.25)**
தொழிற்பாட்டு மிகைநிலை / (பற்றாக்குறை)		**1,401,336,045.35**	**878,059,926.00**
பிற வருமானம்	10	8,293,807.37	9,143,187.78
		8,293,807.37	**9,143,187.78**
		1,409,629,852.72	**887,203,113.78**
செலவுகள்			
நிர்வாகச் செலவுகள்	11	(179,606,787.71)	(184,265,833.87)
நிதி மற்றும் பிற செலவினங்கள்	12	(159,410.80)	(750,367.41)
மொத்தச் செலவுகள்		**(179,766,198.51)**	**(185,016,201.28)**
தேறிய மிகைநிலை / (பற்றாக்குறை)		**1,229,863,654.21**	**702,186,912.50**
க.க.கா.ச. திரண்ட நிதியத்திற்கான ஏற்பாடுகள்		(70,066,802.27)	(43,902,996.30)
ஏற்பாடுகளுக்குப் பின்னர் தேறிய மிகைநிலை / (பற்றாக்குறை)		**1,159,796,851.94**	**658,283,916.20**
விரிவான வருமானம்			
பணிக்கொடை இலாபம் / நட்டம்		(6,113,859.30)	(5,943,980.20)
		(6,113,859.30)	(5,943,980.20)
விரிவான வருமானத்தின் தேறிய மிகைநிலை / (பற்றாக்குறை)		**1,153,682,992.64**	**652,339,936.00**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

	மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை	திரண்ட மிகைநிலை /பற்றாக்குறை	செலவுகளுக்கான அரசாங்கக் கொடை	க.க.கா.ச. திரண்ட நிதியம்	கமக்காரர் இறப்புப் பணிக்கொடை	பணியாட்டொகுதி மருத்துவக் காப்புறுதி நிதியம்	கெத்தட்ட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம்	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்	மற்றும் ஊக்குவிப்புப் படி நிதியம்	கூட்டுத்தொகை
2019 சனவரி 31 ஆந் திகதியில்	**50,000,000**	**1,288,286,716**	**9,956,994**	**100,397,962**	**956,861,045**	**5,752,936**	**706,503,600**	**-**	**-**	3,117,759,253
ஆண்டில் சேர்ந்தவை	-		-	43,902,996	19,016,134	1,296,682	-	-	-	64,215,813
வட்டி வருமானம்	-				54,776,415		-	-	-	54,776,415
அரசாங்க கொடை மதிப்பிறக்கம்	-	-	(4,665,108)	-	-	-	-	-	-	(4,665,108)
மோட்டார் வாகனங்களின் சாட்டுதல் கிரயம்	-	-	-	-	-	-	-	(58,832,592)	-	(58,832,592)
மோட்டார் வாகனங்களின் திரண்ட தேய்மானம்	-	-	-	-	-	-	-	49,341,759	-	49,341,759
மோட்டார் வாகனங்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்ட	-	-	-	-	-	-	-	67,620,000	-	67,620,000
செலுத்திய நன்மைகள்	-				(1,979,750)		-	-	-	(1,979,750)
தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	-	652,339,936	-	-	-		-	-	-	652,339,936
2019 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**1,940,626,652**	**5,291,886**	**144,300,959**	**1,028,673,843**	**7,049,619**	**706,503,600**	**58,129,167**	**-**	**3,940,575,726**
மாற்றப்பட்ட உற்பத்தி மேம்பாட்டு மற்றும் பணியாட்டொகுதி ஊக்குவிப்புப்படி நிதியம்	-	-	-	-	-	-	-	-	11,755,982	11,755,982
2021 சனவரி 01 ஆந் திகதியில் மீதி	**50,000,000**	**1,940,626,652**	**5,291,886**	**144,300,959**	**1,028,673,843**	**7,049,619**	**706,503,600**	**58,129,167**	**11,755,982**	**3,952,331,708**
ஆண்டில் சேர்ந்தவை	-	-	2,423,020	70,066,802	18,320,374	2,503,383		-	13,946,967	107,260,547
வட்டி வருமானம்					31,763,039	383,593				32,146,633
அரசாங்கக் கொடை - கமக்காரர் ஓய்வூதியம்	-	-	(4,545,583)	-	-	-		-		(4,545,583)
செலுத்திய நன்மைகள்					(1,135,100)	(1,258,143)			(6,107,677)	(8,500,920)
COVID -19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம்									(2,000,000)	(2,000,000)
தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	-	1,153,682,993	-	-	-	-				1,153,682,993
2020 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**3,094,309,645**	**3,169,323**	**214,367,761**	**1,077,622,157**	**8,678,452**	**706,503,600**	**58,129,167**	**17,595,272**	**5,230,375,377**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று

	2020.12.31	2019.12.31
	ரூ. சதம்	ரூ.சதம்
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் பிறந்த காசுப் பாய்வு		
தேறிய மிகைநிலை / பற்றாக்குறை	1,153,682,992.64	652,339,936.00
பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள்		
தேய்மானம்	17,799,003.97	17,768,835.96
க.க.கா.ச. ஒதுக்க நிதியத்திற்கான ஏற்பாடுகள்	70,066,802.27	43,902,996.30
பணிக்கொடை இலாபம் / நட்டம்	6,113,859.30	5,943,980.20
	93,979,665.54	**67,615,812.46**
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதி விற்றொழித்தலிலான இலாபம் / நட்டம்	(26,850.19)	-
இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	4,143,168.71	4,540,217.82
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு மிகைநிலை	**1,251,778,976.70**	**724,495,966.28**
சரக்குத் தொக்குகளின் (அதிகரிப்பு /வீழ்ச்சி)	(1,641,351.89)	(814,940.48)
வருமதிகளின் அதிகரிப்பு (அதிகரிப்பு /வீழ்ச்சி)	873,014,555.38	(963,524,780.81)
வருமதியான தவணைப்பணம் (அதிகரிப்பு /வீழ்ச்சி)	164,425,613.20	(350,359,745.41)
வைப்புக்களும் முற்செலுத்துதல்களும் (அதிகரிப்பு /வீழ்ச்சி)	290,250.40	427,265,647.36
முற்பணம் (அதிகரிப்பு /வீழ்ச்சி)	10,498.10	(10,966.20)
சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	(1,458,325,164.68)	892,867,903.00
அச்சிடல் பணிகளுக்கான ஏற்பாடுகள் அதிகரிப்பு /(வீழ்ச்சி)	114,896.66	55,092.50
முற்தவணை முற்பணம் அதிகரிப்பு /(வீழ்ச்சி)	8,760,440.17	(4,381,263.39)
ஏனைய சென்மதிகள் அதிகரிப்பு /(வீழ்ச்சி)	(1,732,555.00)	4,409,645.00
அட்டுறு செலவினம் அதிகரிப்பு /(வீழ்ச்சி)	1,540,687.94	1,341,450.27
	(413,542,129.72)	**6,848,041.84**
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த பணம்	**838,236,846.98**	**731,344,008.12**
இளைப்பாற்றுப் பணிக்கொடை - செலுத்தியவை	(8,330,267.50)	(4,885,944.09)
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய காசுப் பாய்வு	**829,906,579.48**	**726,458,064.03**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப் பாய்வு		
மருத்துவக் காப்புறுதி நிதியம்	1,628,833.55	1,296,682.39
கமக்காரர் இறப்பு பணிக்கொடை நிதி	48,948,313.64	71,812,798.56
உற்பத்தி மேம்பாடு மற்றும் பணியாட்டொகுதி ஊக்குவிப்புப் படி	5,839,289.80	11,755,982.24
ஆண்டுக்குள் முதலீடுகள்	(916,817,339.34)	(786,947,839.90)
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதிக் கொள்வனவு	(3,628,122.60)	(7,229,505.30)
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதி விற்பனைப் பிறப்பாக்கம்	54,785.00	-
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய	**(863,974,239.95)**	**(709,311,882.01)**
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப்பாய்வு		
மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக்கொடை	2,423,020.00	-
அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம்	(4,545,582.67)	(4,665,107.63)
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப்பாய்வு	**(2,122,562.67)**	**(4,665,107.63)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு /(வீழ்ச்சி)	**(36,190,223.14)**	**12,481,074.39**
ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் .	**51,451,163.43**	**38,970,089.05**
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்	**15,260,940.29**	**51,451,163.44**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பொதுவான கொள்கைகள்

1.1 அறிக்கையிடல் அமைப்பாண்மை

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1999 இன் 20 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, இலக்கம் 117 இல் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை பயிர்கள், மூலிகைச் செடிகள், பண்ணை விலங்குகள், மீன்பிடிக் கைத்தொழில், காடு வளர்ப்பு, கமத்தொழிற் சாதனங்களும் கருவிகளும், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள், மூலிகைச் செடிகளின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புடைய உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்துதல், பாதுகாத்து வைத்தல் உள்ளிட்டதாக கமத்தொழில் காப்புறுதியில் சபை பிரதானமாக ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் கமத்தொழில் புரிபவர்களுக்கு மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் வழங்கும் நடவடிக்கைகளிலும் சபை ஈடுபட்டு வருகின்றது. மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் சபையின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் மாற்றமேதும் ஏற்படவில்லை.

1.3 தயாரித்தலுக்கான அடிப்படை

(அ) இசைவுக் கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதிநிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த கணக்குக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இ.நி.அ.நி./இ.க.நி) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மதிப்பீட்டுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புக்களின் கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டவேளையில் தவிர்ந்ததாக நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

நடப்புக் காலஎல்லையில் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காகவும் இடைக்கால ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும்பொருட்டும் நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்துவிதமான பணத்தொகைகளுக்காகவும் முந்திய காலப்பகுதியுடன் தொடர்புடையதாக அளவுசார் ரீதியான, தொடர்உரைசார்ந்த மற்றும் விபரமானதை உள்ளிட்ட ஒப்பிட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் உருப்படிகளை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பண அலகுகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற புழக்கத்திலுள்ள பண அலகு

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் நடைமுறைசார்ந்ததும் புழக்கத்தில் உள்ளதுமான பண அலகான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பாவனை

இ.நி.அ.நி./இ.க.நி இற்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள் , பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தைப் பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளைத் திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்கால காலவரையறைகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகள்மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றி கணிசமான துறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஊ) நடப்புத் தொழில் முயற்சி (இடையறா வழியுரிமை)

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறா வழியுரிமை கொண்டதாக இயங்க சபைக்குள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்றன.

2. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

2.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(அ) ஏற்பிசைவு செய்தலும் கணிப்பீடு செய்தலும்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படிகள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது திரண்ட தேய்மானம் அல்லது பெறுமதியின் திரண்ட சேதமடைதல் கழிக்கப்பட்டு கிரயத்தில் முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் கழிக்கப்படும். ஆதனமொன்றின் சாதனமொன்றின் அல்லது பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் ஏதேனும் காலஇடைவெளியில் மீள்நிறுவப்படவேண்டிய அவசியமேற்பட்டால் மீள்நிறுவப்பட்ட பகுதிகள் ஏற்பிசைவு செய்தலிலிருந்து நீக்கப்பட்டு புதிய பகுதியை அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் சகிதம் நிறுவனத்தினால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்துவிதமான பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள் கிரயம் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ரூ. 26,313,350.60 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி என்பதன்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) கிரயம்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது அவற்றின் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் நேரடியாக உறப்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிரந்தரமான தன்மையுடைத்தான சொத்துக்களைக் கொள்ளல், விரிவாக்கல் மற்றும் முன்னேற்றகரமாக்குவதற்காக உறப்பட்ட அடுத்தடுத்து வருகின்ற செலவுகள் மூலதன செலவுகளாக கருதப்படுகின்றன.

பிரதான பரிசோதித்தல்களையும் உள்ளிட்டதாக தனிவேறான கணக்குகள் பதியப்பட்டுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படியொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவருவதற்கான ஆற்றல் இருப்பினும் கிரயத்தை நம்பத்தகுந்தவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

(இ) மீள்கணிப்பீடு

ஒரு சொத்தாக ஏற்பிசைவு செய்தபின்னர், நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய காணி மற்றும் கட்டடிடங்கள் ஏதேனும் அடுத்தடுத்து வருகின்ற திரண்ட தேய்மானம் மற்றும் அடுத்தடுத்து வருகின்ற திரண்ட சேதநட்டம் கழிக்கப்பட்டு மீள்கணிப்பீடு செய்யப்பட்ட தினத்தில் மீள்கணிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. மீள்கணப்பீடு செய்யப்பட்ட ஒரு சொத்தின் நியாயமான பெறுமதி அறிக்கையிடல் திகதியன்று அதன் கொண்டுசெல்லல் பெறுமதியில் கணியரீதியாக மாற்றமடைவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு மதிப்பீடுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பிடுகையில் இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட அதே சொத்தின் ஏதேனும் முற்பட்ட கழித்தல் தீர்க்கப்பட்டாலேயன்றி மீள்கணிப்பீட்டுப் பெறுமதியின் ஏதேனும் அதிகரிப்பு உரிமைப்பங்குகளின் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். பெறுமதியின் வீழ்ச்சியானது மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தின் முன்னர் இனங்காணப்பட்ட அதிகரிப்பினை விஞ்சி செல்கின்றவிடத்து இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்படும் விற்றொழித்தலின் ஏதேனும் துணைநிலை மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் இருந்து பிடித்துவைத்த ஈட்டல்களுக்கு மாற்றப்படுவதோடு விற்றொழித்தலின்பேரில் இலாபம் அல்லது நட்டத்தை தீர்மானிக்கையில் கணக்குகளுக்கு எடுக்கப்படமாட்டாது.

(ஈ) தேய்மானம்

எளிய நேர்கோட்டு அடிப்படையில் கீழே காட்டப்பட்ட வருடாந்த வீதங்களில் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் அந்த அளவினை பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்காக தேய்மானம் விபரமான வருமானக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும்.

கட்டிடங்கள்	4%
மோட்டார் வாகனம்	20%
தளபாடங்களும் பொருத்திகளும்	10%
பிரச்சார சாதனங்கள்	10%
சேதத் தடுப்புச் சாதனங்கள்	10%
அறுவடைச் சாதனங்கள்	10%
துவிச்சக்கர வண்டிகள்	20%
நிலஅளவைச் சாதனங்கள்	10%
எடைத் தராசுகள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
தொலைபேசி	20%
கணினி	20%
மோட்டார் சைக்கிள்	20%

2.2 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்கத்தக்க எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமைகள் இருக்குமாயின் மற்றும் கணக்கீட்டு நியமம் (இ.க.நி) 38 அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பத்தக்க வகையில் அளவிட இயலுமாயின் அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். அதற்கிணங்க இச்சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் அல்லது ஏதேனும் திரண்ட சேதங்கள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்படுகின்றன.

கணினி மென்பொருள்கள் எளிய நேர்கோட்டு அடிப்படையில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

2.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் ஆகக்குறைந்த கிரயத்திற்கு அல்லது நிகர தேறிய பெறுமானத்திற்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமானம் என்பது பொதுவான தொழில்முயற்சி நடவடிக்கைகளின்போது மதிப்பீடு செய்யப்பட்ட முழுநிறைவு செய்தலுக்கான மற்றும் விற்பனைச் செலவுகள் குறைக்கப்பட்ட பின்னர் மதிப்பீடு செய்த விற்பனை விலையாகும். இக்கிரயத்தில் கையிருப்பு பண்டங்களை கொள்ளல் மற்றும் அவை தற்போது உள்ள இடத்திற்கு அல்லது நிலைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

2.4 நிதிசார் சொத்துக்கள்

இ.க.நி. 39 இல் விடயப்பரப்பில் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமான வகையில் இலாபம் மற்றும் நட்டம், கடனும் வருமதிகளும், பருவமுதிர்வுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனை செய்யப்படவுள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்கால இழப்புக்காப்பாக பெயரிடப்பட்ட பெறுதிக் கருவிகள் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

தனது நிதிசார் சொத்துக்களின் அடிப்படை ஏற்றுக்கொள்ளலின்பேரில் பணிப்பாளர் சபையானது அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக நிதிசார் சொத்துக்கள் நியாயமான பெறுமதியாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடி உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயத்திற்கும் தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன் மற்றும் வருமதிகளும் வைப்புகளும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏதேனும் சொத்தொன்றில் இருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின்மீது உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது

தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிசார் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவுஈடுசெய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக செலுத்தித் தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களுக்காக வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களும் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய நடப்பு விற்பனை மற்றும் மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்களைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

(ஆ) கடனும் வருமதியானவையும்

கடனும் வருமதியானவையும் முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார் பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் அத்தகைய நிதிசார் சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையின் உள்ளடங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடு செய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக்கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்புகள், முற்பணம், ஏனைய வருமதியான காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றினையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றது.

(இ) பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார் சொத்துக்களையும் நிலையான முதிர்ச்சியடைதல்களையும் முதிர்ச்சியடையும்வரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு

உள்ளவிடத்து அவை பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை மதிப்பிறக்கம் செய்தல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(ஈ) விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவையென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார் சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றினை ஏற்றுக்கொள்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும்.

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் பெயர் குறிக்கவில்லை.

2.5 நிதிசார் சொத்துக்களின் சேதம்

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான புலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்.

3.. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதிநிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டியுள்ள மீதியாகும்.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாடுகளை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளிநோக்கி பாய்ந்துசெல்வதை தேவைப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புகளும் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1 உரிமைகோரல்களுக்கான ஏற்பாடுகள்

செலுத்தப்படாத இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள் பயிர்களின் அபாயநேர்வுக் காரணிகள் மற்றும் காப்புறுதி பெறுனரின் விடயத்தின்மீது தங்கி இருப்பதோடு 2019 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

காப்புறுதி விடயம்	**இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள் (ரூ.)**
கெத்தட்ட அருண	532,000,000.00
கால்நடை	6,000,000.00
சுவசெத மற்றும் விவசாய உபகரணங்கள்	5,000,000.00
உபஉணவுப் பயிர்கள்	1,850,000.00
அசைவுள்ள ஆதனங்கள்	34,668,461.00
	575,018,461.00

மூன்றாந்தரப்பு காப்புறுதி இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள்

அடுத்தடுத்து வருகின்ற மூன்று வருடங்களின் வருமானத்தில் 15% நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்திலேயே மூன்றாந்தரப்பு ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அந்த 15% வீதத்தில் முறையே 7%,5% மற்றும் 3% நடப்பு வருடத்தின் வருமானம், முந்திய வருடத்தின் வருமானம் மற்றும் முந்திய வருடத்திற்கு முந்திய வருடத்தின் வருமானத்திற்காக விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படும்.

3.2 அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடுகள்

ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் அறவிடமுடியாக் கடன்படுனர் மீதிகளின் 5% அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

3.3 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – "இளைப்பாற்று நன்மைக் கிரயம்" மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடியவகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக்காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு தொடங்குகின்றது. பொறுப்புகளுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

3.4 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

பொருளாதார நன்மைகளின் சாட்டுதல் நிகழ்வதற்கான இடமாற்ற அல்லது நம்பிக்கையான வகையில் அளவிட இயலாத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத எதிர்கால நிகழ்வுகள் அல்லது நடப்புக் கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற கடப்பாடுகளே எதிர்பாராத பொறுப்புகளாகும்.

சபையின் மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புகள் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

4. விபரமான வருமானக் கூற்று

4.1 வருமானம்

1. சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2. அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

3. கமக்காரர்களின் சார்பிலான மானியம் என்றவகையிலேயே காப்புறுதித் தவணைகள் கிடைத்துள்ளன.

4. மூலதனச் செலவினங்களுக்காக கிடைத்த அரசாங்கக் கொடைகள் படிப்படியான அடிப்படையிவ் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

4.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

1. காப்புறுதி தவணைப்பண வருமானம் காப்புறுதிசெய்த காலத்திற்காக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

2. மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

3. வட்டி வருமானம் காலஅடிப்படையில் அட்டுறுநிலையடையும்.

4.3 அரசாங்க கொடைகளுக்கான கணக்கீடு

உறப்பட்ட செலவினங்களுக்காக சபைக்கு செலுத்தப்படுகின்ற கொடைகள் அச்செலவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலஎல்லைக்குள்ளேயே விபரமான வருமானக் கூற்றில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்கு நட்டோத்தரவாதம் அளிக்கின்ற இணைந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் படிப்படியான அடிப்படையின்பேரில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.4 செலவுகள்

உறப்பட்ட கிரயம் மற்றும் திட்டவட்டமான செலவு உருப்படி ஈட்டல்களுக்கிடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும். சபையினைப் பேணிவருகையிலும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடையதாக பேணிவருகையிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருடத்திற்கான மிகையினை தயாரிக்கையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 இலக்கமும் 2008.10.15 ஆந் திகதியும் கொண்ட பணிப்பாளர் சபைப் பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவுகள்

செலவினம்	வீதம்
சம்பளம், ஊ.சே.நி, ஊ.ந.நி, பணிக்கொடை	50%
மருத்துவச் செலவினம்	50%
மதியுரைக் கட்டணம்	60%
நலனோம்பல்	50%
சீருடைகள்	50%
உபசரிப்பு	60%
அச்சிடல்	60%
சட்டக் கட்டணம்	40%
சபை உறுப்பினர் படிகள்	60%
வாடகை	55%
தொலைபேசி	55%
தபால் கட்டணம்	40%
மின்சாரம்	55%
பிரயாணச் செலவு, மேலதிகநேரப்படி	50%
நீர்க் கட்டணம்	55%
நாளாந்தப் படி	50%
பாதுகாப்பு நடவடிக்கைகள்	75%
பிரதான அலுவலக உபகரணங்கள்	75%
வாகனப் பராமரிப்பு	57%
கணினிச் செலவுகள்	75%
எரிபொருள் செலவுகள்	68%
காகிதாதிகள்	50%
கட்டிடப் பராமரிப்பு	55%
பிரச்சாரமும் பயிற்சியும்	80%

4.5 மிகைநிலை

அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் மிகைநிலை கணிப்பிடப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியில் அறிந்த எல்லா பொறுப்புக்களுக்கும் தேய்மானம் செய்யப்படும்.

4.6 ஒதுக்க நிதியம்

அவசரவேளை ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு 5% தொழிற்பாட்டு மிகையினை வழங்குவதே கொள்கையாக அமைந்திருந்தது.

4.7 முன்கூட்டிய தவணைகள்

முன்கூட்டியே கிடைத்திருப்பின் கால்நடைக் காப்புறுதிக்கான தவணைப்பணமும் கட்டாயக் காப்புறுதிக்கான தவணைப்பண பெறுகைச் சீட்டுகளும் முற்தவணைகளாக கருதப்படும்.

5. காசுப்பாய்வுக் கூற்று

திட்டத்தின் காசுப்பாய்வுக்கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளது. அது இலங்கை கணக்கீட்டுக்கொள்கை 07 "காசுப் பாய்வுக் கூற்று" இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

6. அறிக்கையிடல் தேதிக்குப் பின்னரான சம்பவங்கள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்களாக அமைவன அறிக்கையிடல் திகதி மற்றும் நிதிசார் கூற்றுக்களை வெளியிடுவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம்பெறுகின்ற சாதகமான அல்லது பாதகமான சம்பவங்களாகும். அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் அனைத்து அளவுசார் சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்படுவதோடு உசிதமான இடங்களில் நிதிசார் கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. சார்ந்த தரப்பினர்களின் வெளிப்படுத்தல்

கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படும். இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன. கமத்தொழில் காப்புறுதித் திட்டம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு ரூ. 295,230,441.79 பெறுமதியான கடன்தொகையினை வழங்கியுள்ளது.

8. முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள்

அறிக்கையிடும் காலப்பகுதியில் முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள் எதுவுமே கிடையாது.

9. மறுகாப்புறுதி செலுத்துதல்கள்

2019 சிறுபோகத்திற்காக தேசிய காப்புறுதி நிதியத்திடமிருந்து 312 மில்லியன் ரூபா கிடைக்கவேண்டிய போதிலும் அது கிடைக்கவில்லை என்பதோடு அவர்கள் மேற்படி போகத்திற்காக செலுத்திய தவணைப்பணமான ரூ. 148,380,848.14 ஐ மீளச்செலுத்தி உள்ளார்கள். இதன் பின்னர் சபை எந்தவிதமான மறுகாப்புறுதி காப்பீட்டினையும் பெற்றுக்கொள்ளவில்லை.

10.எதிர்பாராத சம்பவங்கள்

எட்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றின் நடப்பு நிலைமை கீழேயுள்ள அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராகவும் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள வழக்குகள் பற்றிய விபரங்கள்

	நீதிமன்றம்	வழக்கு எண்	மனுதாரர்/பிரதிவாதி	விடயம்	நடப்பு நிலைமை
1	தொழிலாளர் நட்டஈட்டு நீதிமன்றம்	WC/NF/1149/2019 (ANU)	திரு. எம்.எம். செனெவிரத்ன பண்டா எதிர் சபை	கடமைப் பணிகள் மத்தியில் இடம்பெற்ற விபத்துக்காக அறவிடப்படவேண்டிதெனக் கூறப்படுகின்ற காப்புறுதித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
2	அநுராதபுரம் மேல்நீதிமன்றம்	HC/233 மற்றும் HC/234	பொலீஸ் எதிர் சந்தகோமி மஹேஷிகா	காப்புறுதித் தொகையை மோசடி செய்தல் மற்றும் போலியாவணம் புனைதல்	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
3	அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம்	B/2171/2002	பொலீஸ் எதிர் திரு. கே.ஏ. ஹீன்பண்டார	கமக்காரர் ஒய்வூதிய தவணைப் பணத்தை மோசடி செய்தல்	வழக்கு 2005 இல் இருந்து கீழடக்கி வைக்கப்பட்டுள்ளது
4	அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம்	HC 7/2018	பொலீஸ் எதிர் திரு. கே.ஜீ. சுதத் பண்டார	கமக்காரர் ஒய்வூதிய தவணைப் பணத்தை மோசடி செய்தல்	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
5	அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம்	61467	பொலீஸ் எதிர் சபை திரு. ரீ.ஏ. ரத்னசிறி மற்றும் திரு. கமல் உடுவன	சட்டவிரோத பிரமிட் செயற்றிட்டத்தை நடாத்தியமை சம்பந்தமாக	இந்த உத்தியோகத்தர்கள் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
6	கொழும்பு மேல்நீதிமன்றம்	3/8/2/HC/2006	பொலீஸ் எதிர் சபை	மாவிலாறு பயிர்ச்செய்கை இழப்பீடு	வழக்கு சட்டத்துறை தலைமை அதிபதியின் ஆலோசனைக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. அறிவுறுத்தல் கிடைக்கும்வரை கீழடக்கி வைக்கப்பட்டுள்ளது.
7	எல்பிட்டிய மேல்நீதிமன்றம்	91838	பொலீஸ் எதிர் பி.எம்.டீ. தம்மிக்க சந்திரநாத்	தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்து	வழக்கு நிறைவடைந்துள்ளது. 2020.09.29

மூன்றாந்தரப்பு மோட்டார்வாகன காப்புறுதித் திட்டத்தின் இழப்பீடுகளை செலுத்துவதற்காக தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்குகள் பற்றிய விபரங்கள்

	நீதிமன்றம்	வழக்கு எண்	மனுதாரர்/பிரதி வாதி	விடயம்	நடப்பு நிலைமை
1	கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம்	CA(writ) 269/2019	செலிங்கோ கம்பெனி எதிர் சபை	விவசாயிகள் அல்லாத தரப்பினர்களுக்காக மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரங்களை விநியோகித்தல் சம்பந்தமாக	இருதரப்பினரையும் சமரசம் செய்வதற்காக
2	குளியாபிட்டிய மாவட்ட நீதிமன்றம்	6084/பணம் (நட்டஈடு)	திரு. டபிள்யு. சோமகுமார பண்டார எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
3	குளியாபிட்டிய மாவட்ட நீதிமன்றம்	6560/ நட்டஈடு, 6561/ நட்டஈடு, 6562/ நட்டஈடு, 6563/ நட்டஈடு	திருமதி குமாரி சமன்லதா எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
4	குருநாகல் மாவட்ட நீதிமன்றம்	142/MD	திருமதி எஸ்.எம். ஞானவதீ எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
5	குருநாகல் மாவட்ட நீதிமன்றம்	224/MD 225/MD	திருமதி டபிள்யு.டீ.டபிள்யு. இந்திராணி எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
6	மாவனெல்ல மாவட்ட நீதிமன்றம்	2556/ பணம்	திருமதி ஆர்.டி. மதுசா சமரவீர எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
7	மாவனெல்ல மாவட்ட நீதிமன்றம்	2436/ நட்டஈடு	திருமதி ரீ.எம். டபிள்யு. குமுதினி தென்னக்கோன் எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

8	கோகாலை மாவட்ட நீதிமன்றம்	M/1094/20	திரு. டபிள்யு.எஸ்.எல்.சீ. சங்க மானவபுராவ எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
9	வறக்காபொல மாவட்ட நீதிமன்றம்	M/863/20	திருமதி கே. எம். கேலாவதி எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கின் முதலாவது அழைப்பு 2021.03.30
10	காலி மாவட்ட நீதிமன்றம்	M/11799	திருமதி கே.எம்.நில்மிணீ பிரியங்கர எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
11	பலபிட்டிய மாவட்ட நீதிமன்றம்	6547/பணம்	திரு. ஏ.எச். பத்மசிறி எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
12	மாத்தறை மாவட்ட நீதிமன்றம்	M/17873	திரு. எச்.டீ. அநுராத லக்மால் எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
13	மத்துகம மாவட்ட நீதிமன்றம்	MR/4671/20	திருமதி பஹலகே ஹேமலதா எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
14	கெக்கிராவ மாவட்ட நீதிமன்றம்	2076/M	திரு. மெதகெதர கருணாரத்ன எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
15	ஹிங்குரக்கொட மாவட்ட நீதிமன்றம்	241/நட்டஈடு/20	திரு. டீ.டீ.எஸ். றுவன் பண்டார எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
16	மாத்தறை மாவட்ட நீதிமன்றம்	18718/MR	திரு. சந்தன பூஜித குணவர்தன எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கின் முதலாவது அழைப்பு 2021.03.02
17	தெஹிஅத்தகண்டிய மாவட்ட நீதிமன்றம்	M/114/20	திருமதி ஆர்.டீ. சந்திரலதா எதிர் சபை	மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் நட்டஈடு	வழக்கின் முதலாவது அழைப்பு 2021.02.01

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

குறிப்பு 1 - நடைமுறையல்லாச் சொத்துக்கள்

சொத்துக்கள்	இல் கிரயம் 2019.12.31	விற்றொழித்தல்கள்	கிரயம் சேர்த்தல்	2020.12.31 இல் கிரயம்	2019.12.31 இல் திரண்ட தேய்மானம்	விற்றொழித்த	ஆண்டுக்கான தேய்மானம்	2020 12 31 இல் திரண்ட	2020.12.31 இல் பதிவழித்த
தளபாடம் , பொருத்திகள்	13,357,432.86	(359,924.00)	27,390.00	13,024,898.86	9,271,108.18	(341,780.00)	554,526.60	9,483,854.78	3,541,044.08
அலுவலக உபகரணம்	12,384,661.90	(224,928.01)	585,423.10	12,745,156.99	9,999,571.58	(216,449.28)	443,112.90	10,226,235.20	2,518,921.79
மோட்டார் வாகனம்	68,019,310.00	-	-	68,019,310.00	13,570,586.17	-	13,603,862.00	27,174,448.17	40,844,861.83
நலன்புரிச் சாதனங்கள்	717,481.00	(11,750.00)	11,289.50	717,020.50	507,330.21	(10,437.92)	32,637.07	529,529.36	187,491.14
கணினிச் சாதனங்கள்	20,753,520.30	(110,826.36)	3,004,020.00	23,646,713.94	12,402,812.36	(110,826.36)	2,876,871.50	15,168,857.50	8,477,856.44
தொலைபேசி	1,510,807.50		-	1,510,807.50	1,510,807.50	-	-	1,510,807.50	-
மோட்டார் சைக்கிள்	146,300.00		-	146,300.00	146,300.00	-	-	146,300.00	-
கட்டிடங்கள்	8,079,299.28		-	8,079,299.28	4,720,215.03	-	250,143.73	4,970,358.76	3,108,940.52
பிரச்சார உபகரணங்கள்	2,012,819.29	(12,820.00)	-	1,999,999.29	1,875,168.81	(12,820.00)	30,665.17	1,893,013.98	106,985.31
துவிச்சக்கர வண்டி	156,764.20	(9,900.00)	-	146,864.20	130,999.20	(9,900.00)	7,185.00	128,284.20	18,580.00
அறுவடைச் சாதனங்கள்	60,371.00		-	60,371.00	60,371.00	-	-	60,371.00	-
நட்டத்தடுப்புச் சாதனங்கள்	41,280.00		-	41,280.00	41,280.00	-	-	41,280.00	-
நிலஅளவையாளர் சாதனங்கள்	4,399.00	(300.00)	-	4,099.00	4,399.00	(300.00)	-	4,099.00	-
எடைத் தராசுகள்	1,036.35		-	1,036.35	1,036.35	-	-	1,036.35	-
நொராட் உபகரணங்கள்	344,423.50		-	344,423.50	344,423.50	-	-	344,423.50	-
	127,589,906.17	**(730,448.37)**	**3,628,122.60**	**130,487,580.41**	**54,586,408.89**	**(702,513.56)**	**17,799,003.97**	**71,682,899.30**	**58,804,681.11**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
	ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 2 - நடைமுறை சொத்துக்கள்		
குறிப்பு 2.1 - கையிருப்பு		
அச்சிடல் பொருட்கள்	5,782,352.48	4,967,197.32
காகிதாதிகள்	1,770,638.33	944,441.60
	7,552,990.81	**5,911,638.92**
குறிப்பு 2.2 - வருமதிகள்		
பணியாட்டொகுதி கடனும் முற்பணமும்	35,982,348.01	40,707,858.26
மோட்டார் சைக்கிள் கடன்	1,504,605.36	1,904,604.84
வருமதியான சம்பளம்	228,015.38	342,023.38
பணியாட்டொகுதி விசேட கடன் - 2004	4,800.00	4,800.00
வருமதியான ஆயுட்காப்புறுதி தவணைகள்	246,671,018.20	229,485,744.00
பல்வின கடன்படுனர்	51,542.75	51,542.75
ச.தொ.ச. நிறுவனத்திடமிருந்து வருமதியான பணம்	256,520.00	256,520.00
கமத்தொழில் அமைச்சு - விவசாயக் கட்டுப்பாட்டு நிலையம்	463,375.80	1,947,160.40
தே.கா.ந.பொ.நி. - பயிர் வரி	200,000,000.00	793,310,000.00
மறுகாப்புறுதி உரிமைகோரல்	-	312,000,000.00
மோட்டார் சைக்கிள் கடன் (பணியாட்டொகுதி)	2,566.70	2,566.70
கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் (நிருவாகம்)	104,930,222.61	115,174,191.83
கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்	47,553,691.90	40,070,084.52
கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் (மூலதனம்)	1,376,591.94	1,178,329.84
கமக்காரர் ஓய்வூதியத் திட்ட முற்பணம்	504,463,411.72	480,304,114.75
அறவிடமுடியாக் கடன்படுனருக்கான ஏற்பாடுகள்	(1,799,117.40)	(2,035,392.92)
	1,141,689,592.97	**2,014,704,148.35**
குறிப்பு 2.3 - வருமதியான தவணைகள்		
கால்நடை வளங்கள்	58,032.30	392,480.50
சுவசெத மற்றும் பிரத்தியேக	-	91,165.00
காப்புறுதித் தவணை - திறைசேரிப் பங்களிப்பு	1,949,619,152.00	2,113,619,152.00
	1,949,677,184.30	**2,114,102,797.50**
குறிப்பு 2.4 - வைப்புக்களும் முற்செலுத்தியவையும்		
வைப்புகள் - (எரிபொருள்)	150,000.00	150,000.00
வைப்புகள் - (போக்குவரத்து)	5,000.00	5,000.00
காப்புறுதி	-	688,949.63
வாடகை	5,113,901.80	4,755,202.57
அலுவலகப் பராமரிப்பு	40,000.00	
	5,308,901.80	**5,599,152.20**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

	2020.12.31 ரூ . சதம்	2019.12.31 ரூ. சதம
குறிப்பு 2.5 - முற்பணம்		
பிரயாண முற்பணம்	8,000.00	8,000.00
எரிபொருள் முற்பணம்	39,570.65	39,570.65
சம்பள முற்பணம்	50,261.41	50,261.41
பல்லின முற்பணம்	1,035.00	18,561.00
மூலதன முற்பணம்	565,800.00	565,800.00
மாவட்ட நிருவாகக் கணக்கு	205.63	205.63
கால்நடைக் காப்புறுதி முற்பணம்	7,027.90	
	671,900.59	**682,398.69**
குறிப்பு 2.6 - பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்		
திறைசேரி உண்டியல்கள்	2,000,084,607.49	1,130,984,036.50
நிலையான வைப்புகள் - மக்கள் வங்கி	164,803,742.48	167,885,723.85
நிலையான வைப்புகள் - இலங்கை வங்கி	580,171,061.36	580,000,000.00
நிலையான வைப்புகள் - பிரதேச அபிவிருத்தி வங்கி	50,627,688.36	-
	2,795,687,099.69	**1,878,869,760.35**
. குறிப்பு 2.7 - வங்கியிலுள்ள காசு		
இலங்கை வங்கி கணக்கு - 164811	383,896.59	487,521.99
இலங்கை வங்கி கணக்கு - 164667	438,151.17	1,131,573.94
இலங்கை வங்கி கணக்கு -164693	974,761.66	808,618.31
இலங்கை வங்கி கணக்கு -1622	1,281,336.70	33,390.11
இலங்கை வங்கி கணக்கு -1616	618,066.52	370,166.52
இலங்கை வங்கி கணக்கு -8600879	597,905.85	426,266.27
இலங்கை வங்கி கணக்கு -8600818	258,814.16	258,814.16
மககள வங்கிக கணகக -112352	893,041.53	313,564.91
மககள வங்கிக கணகக -112343	361,897.03	86,166.80
மககள வங்கிக கணகக - 100440112349	74,505.69	74,505.69
மககள வங்கிக கணகக - 100260112349	53,040.00	53,040.00
மக்கள் வங்கிக் கணக்கு - 100350112349	27,452.92	27,871.88
மககள வங்கிக கணகக - 100170112349	832,774.14	833,594.62
மககள வங்கிக கணகக - 335100190008791	2,048,680.88	760,599.03
மக்கள் வங்கிக் கணக்கு - 335100280008791	309,951.23	459,062.81
மக்கள் வங்கிக் கணக்கு - 100530112349	426,701.36	3,702,675.67
மககள வங்கிக கணகக -335100190112349	841,360.00	-
பிரதேச அபிவிருத்தி வங்கிக் கணக்கு- 134010103277	4,838,602.86	41,623,730.72
	15,260,940.29	**51,451,163.43**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

		2020.12.31	2019.12.31
		ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 3 - க.க.கா.ச. திரண்ட மிகைநிலை			
முன்கொண்டு வந்த மீதி		1,940,626,652.11	1,288,286,716.11
சேர்க்க :			
ஆண்டுக்கான மிகைநிலை (பற்றாக்குறை)		1,153,682,992.64	652,339,936.00
2020.12.31 இல் மீதி		**3,094,309,644.75**	**1,940,626,652.11**
குறிப்பு 4 - மூலதனம்			
மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை			
2020.01.01 இல் மீதி		5,291,885.94	9,956,993.57
கழிக்க :			
ஆண்டுக்கான கொடை - பொது திறைசேரி		1,000,000.00	-
ஆண்டுக்கான கொடை - கமத்தொழில் அமைச்சு	**4.1**	1,423,020.00	-
சேர்க்க :			
அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம்		(4,517,440.00)	(4,665,107.63)
அரசாங்கக்கொடை - கமத்தொழில் அமைச்சு		(28,142.67)	
2020.12.31 ஆந் திகதியில் மீதி		**3,169,323.27**	**5,291,885.94**
4.1 கமத்தொழில் முகாமைத்துவ தர முறைமை அமுலாக்கல் கருத்திட்டம்			
கமத்தொழில் அமைச்சின் நிதியங்கள் கிடைப்பனவு		7,715,616.89	7,000,000.00
கருத்திட்டத்திற்கான கணினிச் சாதனக்		1,423,020.00	-
கருத்திட்டத்திற்காக உறப்பட்ட பிற செலவினங்கள்			
நாளாந்தப் படிகள்		286,416.00	3,987,446.53
கணினி வாடகை (மடிக் கணினி)		371,650.00	1,883,652.50
உணவுக்காக		755,727.00	1,518,124.60
தங்குமிட வசதிகள்		792,939.00	944,831.00
பிரச்சாரம்		414,528.87	40,000.00
நுகர்வும் காகிதாதிகளும்		92,873.00	63,926.00
எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகள்		227,567.00	233,975.29
தொலைபேசி		1,867,111.42	275,204.48
		6,231,832.29	**8,947,160.40**
வருமதிகள் - கமத்தொழில் அமைச்சு		**463,375.80**	**1,947,160.40**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
	ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 5 - க.கா.ச. திரண்ட நிதியம்		
2020.01.01 ஆந் திகதியில் மீதி	144,300,958.65	100,397,962.35
சேர்க்க :		
ஆண்டுக்கான எற்பாடு	70,066,802.27	43,902,996.30
2020.12.31 இல் மீதி	**214,367,760.92**	**144,300,958.65**
குறிப்பு 6 - கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்		
2020.01.01 ஆந் திகதியில் மீதி	1,028,673,843.49	956,861,044.93
சேர்க்க		
இறப்புப் பணிக்கொடை தவணை	18,320,374.20	19,016,134.00
வட்டி வருமானம்	31,763,039.44	54,776,414.56
	50,083,413.64	73,792,548.56
கழிக்க :		
இறப்புப் பணிக்கொடை செலுத்துதல்	863,100.00	1,878,750.00
ஏலாமை பணிக்கொடை செலுத்துதல்	272,000.00	101,000.00
	1,135,100.00	1,979,750.00
2020.12.31 இல் மீதி	**1,077,622,157.13**	**1,028,673,843.49**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

		2020.12.31	2019.12.31
		ரூ . சதம்	ரூ . சதம்
குறிப்பு 7 - நடைமுறைப் பொறுப்புகள்			
குறிப்பு 7.1 - முற்தவணைக் கிடைப்பனவுகள்			
முற்தவணை - கால்நடை வளம்		1,524,785.19	2,854,241.59
முற்தவணை - கெத்தட்ட அருண		33,128,661.62	23,038,765.05
		34,653,446.81	**25,893,006.64**
குறிப்பு 7.2 - பிற சென்மதியான பணம்			
ஊழியர் படிகளுக்கான ஏற்பாடு		4,281,250.00	4,500,000.00
சேர் பெறுமதி வரி		-	1,513,805.00
மீளளிக்கவேண்டிய டெண்டர் வைப்புகள்		426,870.60	426,870.60
உரிமைகோராத இழப்பீடுகள்		70,800,200.00	70,800,200.00
		75,508,320.60	**77,240,875.60**
குறிப்பு 7.3 - அட்டுறு செலவினம்			
நிருவாகச் செலவுகள்	7.3.1	13,268,117.54	12,380,713.31
ஊக்குவிப்புப்படி - பயிர்க்காப்புறுதி		671,833.13	671,833.13
ஊக்குவிப்புப் படி - அசைவுள்ள ஆதனங்கள் - மூன்றாந்தரப்பு		3,428,580.63	2,718,751.26
தனியாள் விபத்து மற்றும் சுவசெத		53,518.75	76,530.85
தொழிற்பாட்டுச் செலவுகள் - கால்நடை வளம்		98,304.43	131,837.99
		17,520,354.48	**15,979,666.54**
குறிப்பு 7.4 - சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடு			
கால்நடை வளம்		6,000,000.00	7,000,000.00
சுவசெத		500,000.00	500,000.00
அசைவுள்ள ஆதனங்கள் - மூன்றாந்தரப்பு		34,668,461.32	23,559,605.00
உபஉணவுப் பயிர்		1,850,000.00	2,000,000.00
கெத்தட்ட அருண (கட்டாய பயிர்க் காப்புறுதி)		532,000,000.00	2,000,284,021.00
		575,018,461.32	**2,033,343,626.00**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
	ரூ . சதம்	ரூ . சதம்
குறிப்பு 7.3.1 - அட்டுறு செலவினம்		
மின்சாரம்	202,824.27	214,898.10
பாதுகாப்புச் சேவைகள் கட்டணம்	198,660.00	7,500.00
வாடகை	1,086,734.35	1,055,516.00
பராமரிப்பு - மோட்டார் வாகனம்	565,235.00	537,145.00
பிரயாணமும் வாழ்க்கைச் செலவுப்படியும்	931,918.00	1,004,959.00
சம்பளம்	2,430,572.28	1,421,622.02
ஊ .சே .நி .	204,843.17	74,935.09
ஊ .ந .நி .	51,210.79	18,733.77
பிரச்சாரம்	1,250.00	94,500.00
காகிதாதிகள்	162,695.80	218,892.50
தொலைபேசி	290,216.07	307,377.49
நீர்க் கட்டணச் சிட்டை	13,273.85	150.00
கணக்காய்வுக் கட்டணம்	6,068,088.00	5,213,846.00
எரிபொருள்	446,279.93	304,340.00
சீருடைகள்	-	7,200.00
நலனோம்பல்	-	4,780.00
உழைப்புக் கட்டணம்	85,775.00	5,750.00
சென்மதியான கணினிச் சாதனம்	11,000.00	-
போக்குவரத்துச் செலவு	9,305.00	1,600.00
மொழிபெயர்ப்புக் கட்டணம்	-	1,085.00
வங்கிக் கட்டணங்கள்	1,000.00	2,310.00
சென்மதியான கட்டிடப் பராமரிப்பு	4,830.00	-
சென்மதியான அச்சிடல் பணிகள்	165,000.00	308,594.68
சென்மதியான தபால் கட்டணம்	610.00	36,050.00
பல்லினக் கடன்கொடுனர்	163,370.03	162,880.03
சென்மதியான அலுவலக சாதனங்கள்	4,158.00	2,500.00
சென்மதியான உபசரிப்புப் படிகள்	-	5,255.00
சென்மதியான செய்தித்தாள் செலவுகள்	-	28,170.00
சென்மதியான சட்டக் கட்டணம்	64,127.00	-
விவசாயக் கட்டுப்பாட்டு நிலையக் கருத்திட்டம்	105,141.00	1,340,123.63
	13,268,117.54	**12,380,713.31**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
	ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 8. - வருமானம்		
குறிப்பு 8.1 தவணைகள் - (காப்புறுதி)		
கால்நடை வளம்	5,780,196.18	7,866,194.77
சுவசெத காப்புறுதி / தனியாள் விபத்து	13,779,807.96	9,419,321.45
உபஉணவுப் பயிர்	2,280,055.00	3,046,588.59
அசைவுள்ள ஆதனங்கள்	278,939,341.16	220,153,223.24
கெத்தட்ட அருண (கட்டாயப் பயிர்க் காப்புறுதி)	43,615,689.83	58,067,963.40
	344,395,090.13	**298,553,291.45**
குறிப்பு 8.2 - வட்டி வருமானம்		
வட்டி - திறைசேரி உண்டியல் (பயிரும் பிறவும்)	135,412,589.06	123,164,439.13
- ஊழியர்களுக்கான கடன்	1,534,718.20	1,858,133.67
	136,947,307.26	**125,022,572.80**
குறிப்பு 9 - தொழிற்பாட்டுச் செலவுகள்		
குறிப்பு 9.1 - சேத இழப்பீடு - காப்புறுதி		
கால்நடை வளம்	3,018,947.00	5,136,019.50
சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி	15,156.00	44,690.00
அசைவுள்ள ஆதனங்கள்	11,108,856.32	11,583,882.00
உப உணவுப் பயிர்	40,200.00	2,099,657.00
கெத்தட்ட அருண (கட்டாயப் பயிர்க் காப்புறுதி)	1,899,903,213.31	2,155,030,832.79
	1,914,086,372.63	**2,173,895,081.29**
குறிப்பு 9.2 பிற தொழிற்பாட்டுச் செலவுகள்		
காப்புறுதி ஊக்குவிப்புப் படிகள்	1,098,805.99	509,605.41
அசைவுள்ள ஆதனங்கள் - மூன்றாந்தரப்பு காப்புறுதி ஊக்குவிப்புப் படி	34,784,568.63	30,729,803.66
ஊக்குவிப்புப் படிகளும் பதவியுயர்வுகளும்	13,946,967.06	11,755,982.24
சுவசெத ஊக்குவிப்புப் படிகள்	227,204.01	153,272.49
நிருவாகப் படிகள்	-	14,040.00
பயிர் மதிப்பீடு	645,156.26	4,355,573.43
கால்நடை வளம்	668,938.13	1,238,616.59
	51,371,640.08	**48,756,893.82**
குறிப்பு 10 - பிற வருமானம்		
நிலையான சொத்துக்கள் விற்றொழித்தல்	26,850.19	-
அரசாங்கக் கொடை விற்றொழித்தல்	4,195,141.97	4,198,249.79
பல்லின வருமானம்	353,259.69	65,201.52
அறவிடமுடியாக்கடன் மிகையேற்பாடு	236,275.52	138,436.47
வங்கிச் சேவைகள் கட்டணம்	3,482,280.00	4,741,300.00
	8,293,807.37	**9,143,187.78**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020.12.31		2019.12.31
	ரூ. சதம்		ரூ. சதம்
குறிப்பு 11 - நிருவாகச் செலவினங்கள்			
சம்பளமும் ஊதியமும்	85,662,701.47		80,683,797.20
ஊ.சே.நி. பங்களிப்புத் தொகை	9,353,939.39		8,791,903.79
ஊ.ந.நி. பங்களிப்புத் தொகை	2,327,585.79		2,197,974.70
பிரயாண மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி	4,153,228.62		3,535,580.63
மேலதிக நேரம்	2,278,135.75		2,543,693.73
நாளாந்தச் சம்பளம்	215,411.50		405,277.40
மருத்துவச் செலவுகள்	834,380.00		592,911.00
பணிப்பாளர் சபைப் படிகள்	110,160.00		331,500.00
பணிக்கொடை	4,143,168.71		4,540,217.82
நலனோம்பல்	451,445.82		997,640.24
ஊழியர்களுக்கான படிகள்	4,081,750.00		7,276,000.00
எரிபொருள்	5,811,942.18		5,697,201.70
காகிதாதிகள்	3,829,444.82		3,188,018.48
உபசரிப்புப் படிகள்	168,622.81		210,498.08
சட்டக் கட்டணம்	271,295.20		397,349.86
போக்குவரத்து	460,425.10		373,923.33
அச்சிடல்	10,080,487.04		7,433,058.53
பிரச்சாரமும் பயிற்சியும்	530,964.90		5,963,611.81
சீருடைகள்	1,800.00		153,324.05
வாடகை	8,049,738.77		7,800,248.70
தொலைபேசி	2,150,613.67		3,101,601.34
தபால் கட்டணம்	749,445.50		1,070,240.82
நீர்	265,568.67		253,709.07
செய்தித்தாள் மற்றும் விளம்பரம்	841,989.00		235,690.00
பாதுகாப்புச் சேவைகள்	1,415,385.00		702,525.00
மின்சாரம்	1,625,492.87		1,780,961.29
பராமரிப்பு - மோட்டார் வாகனம்	7,493,103.18		7,315,419.65
பராமரிப்பு - கட்டிடங்கள்	235,250.26		808,840.54
பராமரிப்பு - அலுவலக சாதனங்கள்	789,425.22		315,416.82
தொழிற் கட்டணங்கள்	680,031.00		419,916.05
மொழிபெயர்ப்புக் கட்டணம்	4,890.00		203,930.00
கணினிச் செலவுகள்	165,112.50		131,906.25
பல்லினச் செலவுகள்	500.00		-
தேய்மானம்	17,799,003.97		17,768,835.96
கணக்காய்வுக் கட்டணம்	2,574,349.00		3,673,402.00
வெளிநாட்டுப் பயணங்கள்	-		3,369,708.03
	179,606,787.71		**184,265,833.87**
குறிப்பு 12 - நிதிசார் கட்டணங்கள்			
வங்கிக் கட்டணங்கள்	159,410.80		750,367.41
	159,410.80		**750,367.41**

2020 திசெம்பர் 31 அல் நிதிசார் கூற்றுக்கள் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய. சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2020 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று

		2020.12.31		2019.12.31
சொத்துக்கள்	**குறிப்பு**	**ரூ. சதம்**		**ரூ. சதம்**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்				
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதி	1	3,086,590.90		3,458,328.80
		3,086,590.90		**3,458,328.80**
பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த முதலீடுகள்				
திறைசேரி முறிகள்		1,050,288,368.03		1,055,048,182.56
		1,050,288,368.03		**1,055,048,182.56**
நடைமுறைச் சொத்துக்கள்				
கையிருப்பு	2	1,347,762.35		2,421,388.03
வருமதிகள்	3	28,158,180.20		19,331,022.20
பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த முதலீடுகள்	4	186,912,686.82		167,887,669.04
வருமதியான வருமானம்	5	2,811,953.00		2,312,963.48
வங்கியிலுள்ள காசு	6	2,811,325.34		2,225,694.22
		222,041,907.71		**194,178,736.97**
		.		.
மொத்த சொத்துக்கள்		**1,275,416,866.64**		**1,252,685,248.33**
உரிமைப் பங்குகளும் பொறுப்புகளும்				
மூலதனமும் ஒதுக்கங்களும்				
கமக்காரர் ஓய்வூதிய நிதியம்	7	(79,283,851,683.35)		(75,433,313,129.80)
மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்		2,850,000.00		2,850,000.00
குழுமக் காப்புறுதிப் பங்களிப்பு		1,000,000.00		1,000,000.00
		(79,280,001,683.35)		**(75,429,463,129.80)**
நடைமுறையல்லா பொறுப்புகள்				
ஓய்வூதியப் பொறுப்பு		74,155,908,494.00		70,252,869,112.00
திறைசேரி முறிகள் மீதான அரசாங்கக் கொடை		1,081,488,000.00		1,081,488,000.00
பணியாட்டொகுதி பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்		67,904,480.84		54,643,566.14
		75,305,300,974.84		**71,389,000,678.14**
நடைமுறை பொறுப்புகள்				
மூலதனத்திற்கான அரசாங்கக் கொடை	8	1,376,591.94		1,178,329.84
மொத்த சென்மதிகள்	9	5,245,094,574.88		5,286,510,760.49
அட்டுறு செலவினம்	10	3,646,408.33		5,458,609.66
		5,250,117,575.15		**5,293,147,699.99**
		.		.
மொத்த உரிமைப் பங்குகளும் பொறுப்புகளும்		**1,275,416,866.64**		**1,252,685,248.33**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன .

……..……..

நிதிப் பிரிவுப் பிரதானி

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புக்கூற வேண்டும் பணிப்பாளர் சபையின் சார்பாக கையொப்பமிட்டது

……	……
பணிப்பாளர் சபை உறுப்பினர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய. சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
விபரமான வருமானக் கூற்று
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	குறிப்புகள்	2020.12.31	2019.12.31
		ரூ. சதம்	ரூ. சதம்
வருமானம்			
வட்டி வருமானம்		110,806,428.13	119,044,408.64
கமக்காரர் பங்களிப்பு		15,527,139.48	17,332,237.96
ஓய்வூதியம் பெறுனர்களின் பங்களிப்பு		80,949,000.00	94,327,403.00
ஆயுட் காப்புறுதி தவணைக்கான கமக்காரர்களின் பங்களிப்பு		2,526,180.00	2,775,690.00
		209,808,747.61	**233,479,739.60**
செலவுகள்			
பங்களிப்புத் தொகை மீளளிப்பு		(11,780,857.00)	(11,917,037.98)
தேறிய வட்டியின் மீளளிப்பு		(7,821,942.00)	(8,544,418.02)
ஏலாமை பணிக்கொடை செலுத்துதல்		(1,138,804.00)	(1,206,876.00)
குழுமக் காப்புறுதி தவணை		(18,320,374.20)	(19,016,134.00)
ஓய்வூதியம் செலுத்துதலும் தரகும்			
-ஓய்வூதியம் செலுத்துதல்		(4,502,560,108.00)	(3,217,332,522.00)
– தரகு செலுத்துதல்		(13,587,406.00)	(13,196,218.00)
மொத்தச் செலவு		**(4,555,209,491.20)**	**(3,271,213,206.00)**
தொழிற்பாட்டு மிகைநிலை /(பற்றாக்குறை)		**(4,345,400,743.59)**	**(3,037,733,466.40)**
அரசாங்கக் கொடை – மீண்டெழும்		4,450,949,000.00	3,065,000,000.00
		105,548,256.41	**27,266,533.60**
வருமானம் – நிருவாகத்திற்கானது			
நிருவாகச் செலவுகளுக்கான கமக்காரர்களின் பங்களிப்புத் தொகை		1,263,090.00	1,387,845.00
நிருவாகச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை		150,000,000.00	138,000,000.00
பிற வருமானம்	11	390,535.70	485,257.84
		151,653,625.70	**139,873,102.84**
செலவுகள்			
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	12	(139,844,725.02)	(136,894,634.69)
நிதிசார் செலவுகள்	13	(48,870,651.63)	(88,581,354.56)
சேகரித்தல் முகவர்களுக்கான தரகு		(589,393.00)	(647,752.00)
மொத்த நிருவாகச் செலவுகள்		**(189,304,769.65)**	**(226,123,741.25)**
		(37,651,143.95)	**(86,250,638.41)**
ஆண்டுக்கான மிகைநிலை / (பற்றாக்குறை)		**67,897,112.46**	**(58,984,104.81)**
பிற விரிவான வருமானம்			
பணிக்கொடை இலாபம் / (நட்டம்)		(15,396,284.01)	(12,983,522.68)
ஓய்வூதியப் பொறுப்பின் அதிகரிப்பு		(3,903,039,382.00)	(3,744,663,516.00)
		(3,918,435,666.01)	**(3,757,647,038.68)**
விரிவான வருமானத்தின் தேறிய மிகைநிலை / பற்றாக்குறை		**(3,850,538,553.55)**	**(3,816,631,143.49)**
(கமக்காரர் ஓய்வூதிய நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டது .)			

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய. சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2020 திசெம்பர் 31 இல் உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

	கமக்காரர் ஓய்வூதிய நிதியம்	மூலதன செலவுகளுக்கான அரசாங்கக்	குழுமக் காப்புறுதிப் பங்களிப்பு	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்	கூட்டுத்தொகை
2019 சனவரி 01 இல் மீதி	**(71,616,681,986)**	**1,191,588**	**1,000,000**	-	**(71,614,490,399)**
சேர்த்தவை	-	453,600	-	-	453,600
அரசாங்கக் கொடை மதிப்பிறக்கம்	-	(466,858)	-	-	(466,858)
செலுத்த வேண்டிய தொடர்புடைய தரப்பினர்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்ட	-	(1,178,330)	-	-	(1,178,330)
மோட்டார் வாகனங்களின் சாட்டுதல் கிரயம்	-	-		(2,102,061)	(2,102,061)
மோட்டார் வாகனங்களின் திரண்ட தேய்மானம்	-	-	-	2,102,061	2,102,061
மோட்டார் வாகனங்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்ட மீள்கணிப்பீட்டுப் பெறுமதி	-	-	-	2,850,000	2,850,000
ஆண்டுக்கான இலாபம் /நட்டம்	(3,816,631,143)	-	-		(3,816,631,143)
2019 திசெம்பர் 31 இல் மீதி	**(75,433,313,130)**	**-**	**1,000,000**	**2,850,000**	**(75,429,463,130)**
ஆண்டுக்கான இலாபம் /நட்டம்	(3,850,538,554)	-	-	-	(3,850,538,554)
2020 திசெம்பர் 31 இல் மீதி	**(79,283,851,683)**	**-**	**1,000,000**	**2,850,000**	**(79,280,001,683)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய. சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று

	2020.12.31	2019.12.31
	ரூ . சதம்	ரூ . சதம்
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப் பாய்வு		
தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	(3,850,538,554)	(3,816,631,143)
Adjustment for		
சீராக்கம்	920,441	1,036,858
– தேய்மானம்	(25,370)	-
- ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதி விற்றொழித்தல் மீதான (இலாபம்) / நட்டம்	-	-
. – முந்திய ஆண்டுடன் தொடர்புடைய சீராக்கம்	15,396,284	12,983,523
– பணிக்கொடை மீதான இலாபம் /நட்டம்	**16,291,355**	**14,020,381**
இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	5,611,656	5,661,833
ஒய்வூதிய பொறுப்புகள்	3,903,039,382	3,744,663,516
	3,908,651,038	**3,750,325,349**
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு மிகைநிலை	**74,403,839**	**(52,285,414)**
சரக்குத் தொக்குகளின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	1,073,626	1,494,943
வருமதிகள் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(8,827,158)	(4,597,923)
வருமதியான வருமானம் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(498,990)	51,827
பிற செலுத்த வேண்டியவை (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(41,416,186)	157,641,699
அட்டுறு செலவுகள் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(1,812,201)	658,534
	(51,480,909)	**155,249,080**
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த பணம்	**22,922,930**	**102,963,665**
இளைப்பாற்றுப் பணிக்கொடை – செலுத்தியவை	(7,747,025)	(11,397,648)
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய காசுப் பாய்வு	**15,175,905**	**91,566,018**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப் பாய்வு		
ஆண்டில் முதலீடுகள்	(19,025,018)	(89,226,530)
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதி விற்றொழித்தலில் இருந்து பெற்ற பணம்	25,370	-
ஆதனம் , சாதனம் , பொறித்தொகுதிக் கொள்வனவு	(548,703)	(453,600)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய காசுப் பாய்வு	**(19,548,351)**	**(89,680,130)**
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசுப் பாய்வு		
மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை	548,703	453,600
அரசாங்கக் கொடைக்கான மதிப்பிறக்கம்	(350,441)	(466,858)
அரசாங்க முறிகள்	4,759,815	(2,048,183)
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த தேறிய காசுப் பாய்வு	**4,958,077**	**(2,061,440)**
காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் அதிகரிப்பு /(வீழ்ச்சி)	**585,631**	**(175,553)**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை	2,225,694	2,401,247
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை	**2,811,325**	**2,225,694**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

<u>முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

1. பொதுவான கொள்கைகள்

1.1 அறிக்கையிடல் அமைப்பாண்மை

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1999 இன் 20 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, இலக்கம் 117 இல் அமைந்துள்ளது. கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமே தாபிக்கக்கட்டது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கமக்காரர்களுக்கான கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே பிரதான செயற்பாடாகும்.

1.3 தயாரித்தலுக்கான அடிப்படை

(அ) இசைவுக் கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதிநிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று, மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த கணக்குக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இ.நி.அ.நி./இ.க.நி) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மதிப்பீட்டுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புக்களின் கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தவிர்ந்ததாக நிதிக்கூற்றுகள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

நடப்புக் காலஎல்லையில் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காகவும் இடைக்கால ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும்பொருட்டும் நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்துவிதமான பணத்தொகைகளுக்காகவும் முந்திய காலப்பகுதியுடன் தொடர்புடையதாக அளவுசார் ரீதியான, தொடர்உரைசார்ந்த மற்றும் விபரமானதை உள்ளிட்ட ஒப்பிட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் உருப்படிகளை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பண அலகுகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற புழக்கத்திலுள்ள பண அலகு

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் நடைமுறைசார்ந்ததும் புழக்கத்தில் உள்ளதுமான பண அலகான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பாவனை

இ.நி.அ.நி./இ.க.நி இற்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள் , பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தைப் பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபெறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளைத் திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்கால காலவரையறைகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகள்மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றி கணிசமான துறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஊ) நடப்புத் தொழில் முயற்சி (இடையறா வழியுரிமை)

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறா வழியுரிமை கொண்டதாக இயங்க சபைக்குள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்றன.

2. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

2.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(அ) ஏற்பிசைவு செய்தலும் கணிப்பீடு செய்தலும்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படிகள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது திரண்ட தேய்மானம் அல்லது பெறுமதியின் திரண்ட சேதமடைதல் கழிக்கப்பட்டு கிரயத்தில் முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் கழிக்கப்படும். ஆதனமொன்றின் சாதனமொன்றின் அல்லது பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் ஏதேனும் காலஇடைவெளியில் மீள்நிறுவப்படவேண்டிய அவசியமேற்பட்டால் மீள்நிறுவப்பட்ட பகுதிகள் ஏற்பிசைவு செய்தலிலிருந்து நீக்கப்பட்டு புதிய பகுதியை அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் சகிதம் நிறுவனத்தினால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்துவிதமான பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள் கிரயம் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ரூ. 28,952,354.05 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி என்பதன்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) கிரயம்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது அவற்றின் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் நேரடியாக உறப்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிரந்தரமான தன்மையுடைத்தான சொத்துக்களைக் கொள்ளல், விரிவாக்கல் மற்றும் முன்னேற்றகரமாக்குவதற்காக உறப்பட்ட அடுத்தடுத்து வருகின்ற செலவுகள் மூலதன செலவுகளாக கருதப்படுகின்றன.

பிரதான பரிசோதித்தல்களையும் உள்ளிட்டதாக தனிவேறான கணக்குகள் பதியப்பட்டுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படியொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவருவதற்கான ஆற்றல் இருப்பினும் கிரயத்தை நம்பத்தகுந்தவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

(இ) மீள்கணிப்பீடு

ஒரு சொத்தாக ஏற்பிசைவு செய்தபின்னர், நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய காணி மற்றும் கட்டடிடங்கள் ஏதேனும் அடுத்தடுத்து வருகின்ற திரண்ட தேய்மானம் மற்றும் அடுத்தடுத்து வருகின்ற திரண்ட சேதநட்டம் கழிக்கப்பட்டு மீள்கணிப்பீடு செய்யப்பட்ட தினத்தில் மீள்கணிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. மீள்கணப்பீடு செய்யப்பட்ட ஒரு சொத்தின் நியாயமான பெறுமதி அறிக்கையிடல் திகதியன்று அதன் கொண்டுசெல்லல் பெறுமதியில் கணியரீதியாக மாற்றமடைவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு மதிப்பீடுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பிடுகையில் இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட அதே சொத்தின் ஏதேனும் முற்பட்ட கழித்தல் தீர்க்கப்பட்டாலேயன்றி மீள்கணிப்பீட்டுப் பெறுமதியின் ஏதேனும் அதிகரிப்பு உரிமைப் பங்குகளின் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். பெறுமதியின் வீழ்ச்சியானது மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தின் முன்னர் இனங்காணப்பட்ட அதிகரிப்பினை விஞ்சி செல்கின்றவிடத்து இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்படும் விற்றொழித்தலின் ஏதேனும் துணைநிலை மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் இருந்து பிடித்துவைத்த ஈட்டல்களுக்கு மாற்றப்படுவதோடு விற்றொழித்தலின்பேரில் இலாபம் அல்லது நட்டத்தை தீர்மானிக்கையில் கணக்குகளுக்கு எடுக்கப்படமாட்டாது.

(ஈ) தேய்மானம்

எளிய நேர்கோட்டு அடிப்படையில் கீழே காட்டப்பட்ட வருடாந்த வீதங்களில் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் அந்த அளவினை பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்காக தேய்மானம் விபரமான வருமானக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும்.

தளபாடங்களும் பொருத்திகளும்	10%
அலுவலக சாதனங்கள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
பிரச்சார சாதனங்கள்	10%
கணினி	20%
கணினி மென்பொருள்	20%
மோட்டார் வாகனங்கள்	20%
வளிச்சீராக்கி கருவிகள்	20%

2.2 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்கத்தக்க எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமைகள் இருக்குமாயின் மற்றும் கணக்கீட்டு நியமம் (இ.க.நி) 38 அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பத்தக்க வகையில் அளவிட இயலுமாயின் அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். அதற்கிணங்க இச்சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் அல்லது ஏதேனும் திரண்ட சேதங்கள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்படுகின்றன.

கணினி மென்பொருள்கள் எளிய நேர்கோட்டு அடிப்படையில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

2.3 சரக்குத் தொக்குகள்

முறைப்பாட்டின் மேன்முறையீட்டுக்கிணங்க மாவட்ட நீதவான் தீர்ப்பினை வழங்கியுள்ளதோடு மனுக்களில் குறிப்பிடப்பட்டிராத மேலதிக நிவாரணங்களை வழங்குவதை நிராகரித்துள்ளார். அதனால் க.கா.ச. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை பெற்றுக்கொண்டு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீட்டினை சமர்ப்பித்துள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2020 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்கான குறிப்புகள்

குறிப்பு -01

சொத்துக்கள்	2020 சனவரி 01 இல் கிரயம்	அகற்றுதல்	சேர்த்தல்கள்	2020 திசெம்பர் 31 இல் கிரயம்	2020 சனவரி 01 இல் திரண்ட தேய்மானம்	அகற்றுதல்	ஆண்டுக்கான தேய்மானம்	மொத்த தேய்மானம்	தேறிய புத்தகப் பெறுமதி
அலுவலக உபகரணங்கள்	528,648.50		-	528,648.50	418,344.96		14,792.00	433,136.96	95,511.54
நலன்புரிச் சாதனங்கள்	1,325.00		-	1,325.00	1,325.00		-	1,325.00	-
தளபாடங்களும் பொருத்திகளும்	78,876.92	(1,200.00)	-	77,676.92	63,914.42	(1,200.00)	2,850.00	65,564.42	12,112.50
கணிணிச் சாதனங்கள்	264,945.00		-	264,945.00	263,864.92		1,080.08	264,945.00	-
	873,795.42	**(1,200.00)**	-	**872,595.42**	**747,449.30**	**(1,200.00)**	**18,722.08**	**764,971.38**	**107,624.04**

ஆதனம், சாதனம், பொறித்தொகுதியில் 2020 திசெம்பர் 31 இல் இன்னமும் பாவனையில் நிலவுகின்ற ரூ. 696,175.42 மொத்த பெறுமதிகொண்ட முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்கள் அடங்குகின்றன

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
குறிப்பு 02 – கையிருப்பு	**ரூ. சதம்**	**ரூ. சதம்**
அச்சிடல் பொருட்கள்	95,619.12	105,756.95
	95,619.12	**105,756.95**
குறிப்பு 03 – வருமதிகள்		
கமக்காரர் ஒய்வூதியக் கடன்	338,949,572.34	564,335,972.90
இறப்புப் பணிக்கொடை முற்பணம்	50,000.00	50,000.00
	338,999,572.34	**564,385,972.90**
குறிப்பு 04 – பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்		
திறைசேரி உண்டியல் – இலங்கை வங்கி	332,715,857.31	133,916,454.67
	332,715,857.31	**133,916,454.67**
குறிப்பு 05 – வங்கியிலுள்ள பணம்		
கணக்கிலக்கம் 164790 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	209,188.45	324,626.90
கணக்கிலக்கம் 164795 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	938,855.04	507,735.60
சேகரித்தல் கணக்கு	75,638.00	175,244.00
	1,223,681.49	**1,007,606.50**
குறிப்பு 06 – கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	(3,288,940,707.97)	(2,947,929,044.87)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	(92,633.00)	-
	(3,289,033,340.97)	(2,947,929,044.87)
ஆண்டில் சேர்த்தவை		
ஆண்டுக்கான மொத்த மிகைநிலை / (பற்றாக்குறை)	(386,869,108.86)	(341,011,663.10)
	(3,675,902,449.83)	**(3,288,940,707.97)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020.12.31		2019.12.31
	ரூ. சதம்		ரூ. சதம்
குறிப்பு 7 – இறப்புப் பணிக்கொடை நிதியம்			
முன்கொண்டுவந்த மீதி	28,062,614.70		26,661,514.70
சேர்க்க			
ஆண்டுக்கான பங்களிப்புத் தொகை	1,759,740.00		1,769,100.00
கழிக்க			
இறப்புப் பணிக்கொடை செலுத்துதல்	(322,000.00)		(368,000.00)
	(322,000.00)		(368,000.00)
	1,437,740.00		**1,401,100.00**
	29,500,354.70		**28,062,614.70**
குறிப்பு 08 – சென்மதிகள்			
சென்மதியானவை – ஓய்வூதியம் செலுத்துதல்	4,828,177.00		254,423.00
சென்மதியானவை – கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	47,553,691.91		40,070,084.99
சென்மதியானவை – மீளளிக்கவேண்டிய பங்களிப்புத் தொகை	204,027.00		90,746.00
சென்மதியானவை – இறப்புப் பணிக்கொடை	125,000.00		98,000.00
சென்மதியானவை – ஊக்குவிப்புப் படிகள்	325.00		325.00
சென்மதியானவை – பங்களிப்புத் தொகை மீதான மீளளிக்கின்ற வட்டி	191,734.00		122,595.54
சென்மதியான கமக்காரர் ஓய்வூதிய நிதியம்	-		91,367.00
	52,902,954.91		**40,727,541.53**
குறிப்பு 9 – அட்டுறு செலவினம்			
அச்சிடல் கட்டணம்	602,489.17		570,092.50
சட்டக் கட்டணம்	17,000.00		17,000.00
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள்	1,536,732.00		1,432,702.00
	2,156,221.17		**2,019,794.50**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020.12.31	2019.12.31
	ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 10 – நிருவாகச் செலவினம்		
சம்பளமும் ஊதியமும்	2,915,871.79	2,661,894.51
ஊ.சே.நி. பங்களிப்புத் தொகை	349,904.61	316,414.29
ஊ.ந.நி. பங்களிப்புத் தொகை	87,476.15	79,106.06
மேலதிகநேரம்	7,430.00	-
விசேட படி	524,916.00	418,404.00
பணிக்கொடை	225,161.10	207,637.66
எரிபொருள்	170,939.48	167,564.76
காகிதாதிகள்	153,177.79	161,870.74
அச்சிடல்	92,637.83	223,420.27
சட்டக் கட்டணம்	221,000.00	409,000.00
பணியாட்டொகுதி சீருடைகள்	72.00	6,132.96
வாடகை	731,794.43	709,113.52
தொலைபேசி	195,510.33	281,963.76
தபால் கட்டணம்	93,680.69	133,780.10
நீர்க் கட்டணச் சிட்டை	24,142.61	23,064.46
பாதுகாப்பு	94,359.00	46,835.00
மின்சாரம்	147,772.08	161,905.57
மோட்டார் வாகனப் பராமரிப்பு	394,373.85	385,022.09
கட்டிடப் பராமரிப்பு	21,386.39	73,530.96
அலுவலக சாதனப் பராமரிப்பு	52,628.35	21,027.79
கணினி செலவுகள்	158,407.50	291,693.75
தேய்மானம்	18,722.08	19,636.00
கணக்காய்வுக் கட்டணம்	1,561,311.00	200,000.00
	8,242,675.06	**6,999,018.25**
குறிப்பு 11 – நிதிக் கட்டணங்கள்		
வங்கிக் கட்டணம்	500.00	7,500.00
	500.00	**7,500.00**

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கைகள்

எனது இல: ஏஜிஎல்/ஈ/14/ஏஏஜபீ/ 2020/எப்ஏ 2021 செத்தெம்பர் 29 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:- (1) செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

(2) செயலாளர் – நிதி அமைச்சு

எனது இலக்கம்: ஏஜிஎல்/ஈ/14/ஏஏஜபீ/ 2020/எப்ஏ 2021 செத்தெம்பர் 29 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்ககான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2020 திசெம்பர் 31 அந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 வது பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பயனுள்ள ஆயுட்காலம் ஒவ்வொரு நிதியாண்டினதும் இறுதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டியபோதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முழுமையாகவே தேய்மானம் கழிக்கப்பட்ட எனினும் தொடர்ந்தும் பாவனைக்கு எடுத்துக்கொண்டிருந்த கிரயம் ரூ. 25,801,935 ஆக அமைந்த ஆதனம், சாதனம், பொறித்தொகுதி சம்பந்தமாக அவ்விதம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை இனங்காணுதலும் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கான இறப்புப் பணிக்கொடை ஆயுட்கணிப்பு மதிப்பீடு மூலமாக கணிக்கப்பட வேண்டியபோதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூ. 1,077,622,157 ஆக அமைந்த கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியம் சம்பந்தமான பொறுப்புகள் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மூலமாக கணிக்கப்பட்டு காலத்துடன் நேரொத்தவகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மகியங்கனை, எம்பிலிபிடடிய மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற 3 உத்தியோகபூர்வ இல்லங்களில் சபைக்குச்

சொந்தமான 76.6 பர்ச்சஸ் காணியின் பெறுமதியும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடங்களின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமுகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் ஆகிய இரண்டிலிருந்தும் கிடைக்கவேண்டிய ரூ. 658,323,918 ஆக அமைந்த கடன் மீதியை 12 மாதங்களில் செலுத்தித் தீர்க்கும் நோக்கம் இல்லாவிட்டாலும் நடைமுறைப் பொறுப்புக்களின்கீழ் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை எனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகிறேன்.

1.3 திட்டத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட தகவல்கள் திட்டத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுகள் மற்றும் அது சம்பந்தமான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதன் மூலமாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதோடு நான் அது பற்றிய எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்லது அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தப் போவதில்லை.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக அமைவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக அமைந்தவிடத்து (ஏற்புடையதாகத் தக்கதாக) வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் வேறுவிதமாகப் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்துவதில்லையா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதாகும்.

திட்டத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வாசிக்கையில் அதில் கணியரீதியான தவறாகக் காட்டப்படல் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் சரிசெய்வதற்காக ஆளுந்தரப்பினருக்கு அந்த தகவல்கள் பற்றி அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் சரிசெய்யாத தவறாகக் காட்டப்படல் இருக்குமாயின் அவை அரசியலமைப்பின் 165(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள்

இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மேசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற ஏதுக்களால் இடம்பெறுவதாலாகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில்

கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கணக்காய்வுக்காக அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2 (ஆ) மற்றும் (இ) ஆகிய பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் ஆளும் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு திட்டத்தில் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	1992 இன் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி	
	(i) நி.ஒ. 177 1)	சேகரிக்கப்படுகின்ற அரசாங்கப் பணம் நாளாந்தமோ அல்லது இயலுமானவரை சீக்கிரமாக வங்கிக்கு மாற்றி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல், அரசாங்கத்தின்சார்பில் எந்தவொரு பணத்தொகையையும் சேகரிக்கின்ற உத்தியோகத்தர்களின் கடமையாக அமைவதோடு காலி மற்றும் புத்தளம் மாவட்ட அலுவலகங்களில் வைப்புச் செய்வதிலான மாதிரிப் பரிசீலனைகளுகிணங்க காப்புறுதி உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட கமத்தொழில்சார்ந்த மோட்டார் வாகன காப்புறுதி தவணைப்பணம் 1 தொடக்கம் 2 மாதங்கள் வரை தாமதித்து மாற்றியனுப்பப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.
	(ii)நி.ஒ. 261 (3)	போதியளவு பணம் இருந்தாலேயோழிய ஏதேனும் செலுத்துதலை காசேட்டில் குறிப்புப் பதிதலோ செலுத்துதலுக்காக காசோலை விநியோகிக்கப்படுதலோ ஆகாது. அத்துடன் நிலவுகின்ற செலுத்துதல்கள் போன்றே அண்மித்த செலுத்துதல்களையும் ஸ்தம்பிக்காமல் மேற்கொண்டு வருவதை இயலச் செய்விக்கும்பொருட்டு உரிய அதிகாரிகளிடம் நேரகாலத்துடன் விண்ணப்பித்து போதியளவு பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆவண செய்தல் வேண்டியிருப்பினும் அவ்விதமாக செயலாற்றாமையின்பேரில் காப்புறுதி இழப்பீட்டுக்காக

		வரையப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ. 55,720,568 ஆக அமைந்த 1,780 காசோலைகள் மீளவும் வருவாய்க்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii) நி.ஓ. 762	கையிருப்பு அனுப்பற்கட்டளை மட்டத்தை இனங்கண்டு மேற்படி கையிருப்பு மட்டங்களைப் பேணிவராமையால் 2020 ஆம் ஆண்டில் 13 சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தில் மோட்டார் வாகனக் காப்புறுதி அட்டைகளின் கையிருப்பு தீர்ந்திருந்தது. மேலும் அவசரத் தேவையின்பேரில் 25,000 அட்டைகளை கொள்வனவு செய்கையில் விமானக் கட்டணமாக ரூ. 148,000 மேலதிக கிரயத்தை ஏற்க நேர்ந்திருந்ததோடு இந்த பணத்தொகையானது முறையான களஞ்சியக் கட்டுப்பாட்டு வழிமுறை பாவிக்கப்படாமையால் சபைக்கு உறப்பட நேரிட்ட மேலதிக கிரயமென்பது அவதானிக்கப்பட்டது.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம்	(i) பகிரங்க அறிவித்தலை பிரசுரிப்பதன் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் கட்டமைப்புசார்ந்த நேர்முகப்பரீட்சை ஊடாக வெளிவாரி அல்லது உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பேரில் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், முறைமை நிருவாக உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளில் இளைப்பாறிய 8 உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நீடிக்கப்படுதலின்பேரில் 8 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த மற்றும் பயிற்சி அடிப்படையிலும் 40 உத்தியோகத்தர்கள் அமய அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.
		(ii) ஒவ்வொரு சேவைத் தொகுதியையும் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை குறைந்தபட்சம் ஒருவருடத்திற்கு ஒருதடவை அல்லது அவசியப்பாட்டுக்கிணங்க நடாத்தப்படவேண்டுமென்பதோடு நியமனத் தேதியிலிருந்து 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டும். அவ்வாறாயினும் 2017 சனவரி தொடக்கம் இற்றைவரை வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை. அதன் காரணமாக 2016 – 2017 ஆம் ஆண்டுகளில் சபையில் சேவைக்குச் சேர்ந்த 12 உதவிப் பணிப்பாளர்களுக்கு 11 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மற்றும் 15 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு உரிய காலப்பகுதியில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய இயலாமல் போயிற்று.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகள்	**அவதானிப்புகள்**
(அ) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்	
(i) 7 (அ) பிரிவின்படி விவசாயிகளுக்கு உறுதிநிலையை வழங்குகின்ற மற்றும் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் நட்டத்தின்போது அவர்களுக்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்காக விவசாயிகளின் நன்மைகருதி முழுமையான காப்புறுதித் திட்டமொன்றை தாபித்து அமுலாக்குதல்.	சபையினால் பேணிவரப்படுகின்ற கெத்தட்ட அருண காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடைய 8,185 கமக்காரர்களுக்கு உரித்தான 4 வருடங்கள் பழைமையான ரூ. 70,800,200 இழப்பீட்டுத் தொகை, கணக்கு இலக்கங்கள், கமக்காரர்களின் பெயர்கள் மற்றும் இணையத்தள அட்டை இலக்கங்கள் பொருந்தாமை காரணமாக வங்கிகளால் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததோடு சம்பந்தப்பட்ட கமக்காரர்களை இனங்கண்டு செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 7 (ஆ) பிரிவின்படி விவசாய மற்றும் பூங்காவியல் உற்பத்திகள் மற்றும் மூலிகைச் செடிகள், மீன்பிடி மற்றும் காட்டு விளைபொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் நீண்டகாலம் பாதுகாத்து வைத்தல் சம்பந்தமான காப்புறுதித் திட்டமொன்றை விவசாயிகளின் நன்மைகருதி தாபித்து நடைமுறைப்படுத்துதல்.	களஞ்சியக் காப்புறுதிக்ககாக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் வளங்களை சிக்கனமாகவும் பயனுறுதிமிக்கவகையிலும் காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவிக்கவில்லையென்பது.

2.3 பிற கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) அரசகரும மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்நத உத்தியோகத்தரொருவருக்கு சபையினால் செலுத்தப்பட்டிருந்நத சம்பளமான ரூ. 228,015 தொகை செலவுமீளளிப்புச் செய்யாமல் 9 வருடங்களாக நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வரப்படுகின்றது.

(ஆ) அலுவலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2008 யூன் 04 ஆந் திகதி இலங்கை காணிமீட்டல் மற்றும் அபிவிருத்திசெய்தல் கூட்டுத்தாபனத்திற்கு சபையினால் ரூ. 565,800 முற்பணத்தொகை வழங்கப்பட்டிருந்ததோடு முற்பணம் வழங்கி 13 வருடங்கள் கழிந்திருந்தபோதிலும் திட்டமிட்டபடி பணிகள் ஈடேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய ரூ. 426,871 ஆக அமைந்த மீளளிக்கவேண்டிய டெண்டர் வைப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான கால்நடை தொழிற்றுறையினரின் அபாயநேர்வினைக் குறைத்து பாதுகாப்புத்தன்மையை உறுதிசெய்வதை நோக்கமாகக்கொண்டு அமுலாக்கப்பட்ட கால்நடைக்காப்புறுதி திட்டத்தின் வருமானம் துரிதமாக வீழ்ச்சியடைந்து வந்தது. அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2020 ஆம் ஆண்டளவில் கால்நடைக் காப்புறுதி வருமானம் நூற்றுக்கு 57 வீதத்தால் அதாவது ரூ. 13,391,254 இல் இருந்து ரூ. 5,780,196 வரை ரூ. 7,611,058 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

(உ) 2020 நவெம்பர் 19 ஆந் திகதி முகாமைத்துவ உதவியாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக ரூ. 237,654 கிரயத்தை ஏற்று 3 செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் தினமாக 2020 திசெம்பர் 31 குறிப்பிடப்பட்டிருக்கையில் அதனைக் கருத்திற்கொள்ளாமல் பணிப்பாளர் நாயகத்தினால் மத்திய மாகாணத்திலிருந்து 16 பேர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு அதில் 07 பேர் 2020 நவெம்பர் 26 ஆந் திகதி சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இதனால் செய்தித்தாள் அறிவித்தலுக்காக உறப்பட்ட ரூ. 237,654 ஆக அமைந்த கிரயம் பொருளாதாரப் பயனற்ற கிரயமாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) 01 வருடம் தொடக்கம் 5 வருடங்கள் வரை பழைமைவாயந்நத ரூ. 1,764.637 ஆக அமைந்த கடனும் முற்பணமும் மீதியை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(எ) நிதிநிலைமை பற்றிய கூற்றில் நடைமுறைப் பொறுப்பின்கீழ் காட்டப்படுகின்ற 2018 - 2019 வருட காலப்பகுதிக்கான அச்சிடல் செலவுகள், கலப்புக் கடன்கொடுனர் மற்றும் பயிர்க்காப்புறுதி ஊக்குவிப்புப் படியாக செலுத்தவேண்டிய கூட்டுத்தொகை ரூ. 999,713 ஆக அமைந்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிப்பெயர்கள் 421 இல் 15 பதவிகளில் 155 வெற்றிடங்கள் நிலவியதோடு தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் வெளிக்களக் கடமைகளை ஈடேற்றுவதற்கு இந்த வெற்றிடங்கள் நிலவுகின்றமை தடையாக அமைந்துள்ளமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்குச் சொந்தமான "கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியம்" தொடர்பில் தனிவேறான வங்கிக் கணக்கு பேணிவரப்படாமை காரணமாக மீதி ரூ. 1,077,622,157 ஆக அமைந்த கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியத்திலிருந்து மேற்படி செயற்றிட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன்தொகை, அந்த செயற்றிட்டத்திலிருந்து பங்களிப்புத் தொகையாக கிடைக்கவேண்டிய அளவு மற்றும் நிதியத்திலிருந்து நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த பெறுமதியையும் அதனோடு தொடர்புடைய வட்டியையும் உள்ளடக்கிய கூட்டுத்தொகை ரூ. 915,938, 172 ஐக் கழித்தபின்னர் எஞ்சுகின்ற ரூ. 161,683,984 மீதி அந்த நிதியத்திற்கு எந்தவிதமான நன்மையும் செலுத்தப்படாமல் சபையின் செலவுகளுக்காகவும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்காகவும் பாவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட மறுகாப்புறுதி உடன்படிக்கையின் பிரகாரம் 2019 சிறுபோகத்திற்காக ஒரு கமக்காரருக்கு பதிவாகக்கூடிய மொத்த இழப்பீட்டுப் பெறுமதியின் ஆரம்ப ரூ. 10,000 ஐ செலுத்துவதற்காக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து மேலும் பெறப்படவேண்டிய 312 மில்லியன் ரூபா நிலுவைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டில்

உடன்படிக்கையை இல்லாதொழித்து ரூ. 148,380,848 ஐ மாத்திரம் பெற்றுக்கொண்டமையால் சபைக்கு ரூ. 163,619,152 நட்டம் விளைந்திருந்தது.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இல: ஏஜிஎல்/ஈ/12/எப்பிஎஸ்/ 2020/எப்ஏ 2021 யூலை 30ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:- (1) செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

(2) செயலாளர் – நிதி அமைச்சு

எனது இலக்கம்: ஏஜிஎல்/ஈ/12/எப்பிஎஸ்/ 2020/எப்ஏ 2021 யூலை 30 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. **நிதிக் கூற்றுகள்**

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்ககான நிதிக்கூற்றுகள் 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பானதாக அமைதல்

இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் மற்றும் கமக்காரர் ஒய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதிய கடப்பாடுகளுக்கான ஆயுட்கணிப்பு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் கணிக்கப்பட்டிருந்ததோடு 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதியக் கடப்பாடு ரூ. 74,155,908,494 ஆக அமைந்தது. மேலும் இந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்குப் போதியளவிலான முதலீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்ககீட்டுக் கோளாறுகள்

உதவுதொகை செலுத்துனர்கள் ஓய்வூதியத்திற்காக சேர்ந்த திகதி மற்றும் உரிமைகோருகின்ற திகதியை உள்ளடக்கிய உதவுதொகை செலுத்துனர்களின் பெயர்ப்பட்டியல், முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களின் மாதாந்த பங்களிப்புத்

தொகையின் பெறுமதி மற்றும் உரிமைப் பத்திரம் செயலிழந்த உதவுதொகை செலுத்துனர்களின் பெயர்ப்பதிவேடு இற்றைப்படுத்திப் பேணிவரப்படாமை காரணமாக உதவுதொகைப் பணம் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதியப்படாமல் மீளாய்வாண்டில் உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து கிடைத்த ரூ. 96,476,139 வருமானம் மாத்திரம் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 திட்டத்தின் இடையறாத வழியுரிமை

திட்டத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூ. 78,198,513,683 எதிர்க்கணிய மீதியாக அமைந்திருந்ததோடு நடைமுறைச் சொத்துக்களை விஞ்சியதாக நடைமுறைப் பொறுப்பு ரூ. 5,028.075,667 ஆக அமைந்திருந்தது. மேலும் 2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1853/49 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளின்படி 2014 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் ஓய்வூதியம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டபோதிலும் உதவுதொகையை அறவிட்டுக்கொள்ளல் 1987 மே 07 ஆந் திகதிய 452/12 இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகை மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கமக்காரர்களின் பங்களிப்பு முறையே ரூ. 21,495,773 மற்றும் ரூ. 19,316,409 ஆக அமைந்ததோடு ஓய்வூதியம் செலுத்துதல் முறையே ரூ. 3,217,332,522 மற்றும் ரூ. 4,502,560,108 ஆக அமைந்திருந்தது. ஓய்வூதியத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 3,065,000,000 மற்றும் ரூ. 4,450,949,000 திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்ததோடு திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் திட்டத்தைப் பேணிவர முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மேசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மேசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.
- உள்ளக கட்டப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும்

நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2.1 மற்றும் 1.2.3 பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(i) பிரிவு 4	உரிய தகைமைகளைக் கொண்டவரும் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவருமான கமக்காரர்களுக்கு தமது தொழில்சார் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிரந்தர, பகுதியளவிலான அல்லது பூரணமான உடலியலாமை ஏற்பட்டவிடத்து பொருளாதாரரீதியான ஏதேனும் உறுதுணையாக அமையத்தக்கதாக கொடுப்பனவொன்றினை செலுத்துதல், இறப்பின்போது இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் மற்றும் வயது 60 வருடங்கள் நிறைவடைந்தவிடத்து ஓய்வூதியமொன்றை செலுத்துதலை நோக்கமாகக்கொண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை திட்டத்தில் எந்தவோர் உறுப்பினரும்

		சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(ii) பிரிவு 6(1)	வயது 60 வருடங்களை பூர்த்திசெய்த தினத்தில் இருந்து உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படவேண்டியபோதிலும் ஓய்வூதியம் செலுத்தப்படவேண்டிய தினத்திலிருந்து அல்லாமல் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட தினத்தில் இருந்து செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அக்காலப்பகுதிக்குள் செலுத்தவேண்டிய நிலுவை ஓய்வூதியத்திற்காகவும் நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 திசெம்பர் 31 வரையான 8 வருடங்களுக்கு சம்பந்தப்பட்ட 125,828 கமக்காரர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த நிலுவை ஓய்வூதியத்தின் கூட்டுத்தொகை ரூ. 3,745,948,105 ஐ செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(iii) பிரிவுகள் 15 (2) மற்றும் (3)	உதவுதொகை செலுத்துனரொருவர் உதவுதொகையை முறைப்படி செலுத்தாமையின்பேரில் நன்மைகளை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டினை செய்வதற்கேதுவாக அது பற்றி உதவுதொகை செலுத்துனருக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். இருப்பினும் அவ்விதமாக விழிப்புணர்வூட்டாமை காரணமாக வயது 60 வருடங்கள் நிறைவடைந்த ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமை இருப்பதாகக்கருதிய 1,451 பேர் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.
	(iv) பிரிவு 20	தாபிக்கப்பட்டுள்ள மதியுரைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மதியுரைக்குழு கூடவேண்டியபோதிலும் 2016 நவெம்பர் மாதத்தின் பின்னர் இற்றைவரை குழுக்கூட்டம் நடைபெறவில்லை.

3.2 செயலாற்றுகை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய செயற்றிட்டத்தை பழைய செயற்றிட்டத்துடன் ஒப்பிடுகையில் புதிய திட்டத்தின் ஊடாக கமக்காரர்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. அதனால் 2016 - 2020 கூட்டுத் திட்டத்தில் புதிய செயற்றிட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய சமூகப் பாதுகாப்பு திட்டங்களை அறிமுகஞ் செய்வதற்காகன திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இந்த பணி ஈடேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியம் தயாரிப்பதற்காக 7,402 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு அதில் 1,837 விண்ணப்பங்களுக்கான நன்மைகளை வழங்க முடியாதிருந்தது.

3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்.

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சனவரியில் இருந்து ஒற்றோபர் வரை மொத்தமாக 161,000 கமக்காரர்களுக்காக ரூ. 3,8000,491,790 பணத்தொகை கமத்தொழில் மற்றும் கமநலக்

காப்புறுதிச்பையின் 14 மாவட்ட கணக்கு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வு செய்யப்படுகின்ற தருணமாகும்வேளையில் செலுத்தப்பட்டிராத ஓய்வூதியம் ரூ. 76,019,485 சபைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. ஓய்வூதியப் பணத்தொகையை செலுத்தாமல் போனமைக்கு வழிசமைத்த காரணங்களைக் கண்டறிந்து பார்க்கவும் உரிமைகோராத ஓய்வூதியம் பெறுனர்கள் பற்றிய தகவல்களை வரவழைப்பித்து தற்போது உயிருடன் இல்லாவிட்டால் ஓய்வூதியம் பெறுனர் பதிவேட்டிலிருந்து பெயர்களை நீக்க சபையானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1992 - 2002 வரையான காலப்பகுதியில் இருந்து முன்கொண்டுவரப்படுகின்ற வைப்புச் செய்திருப்பினும் தேறாத 3 கணக்குகளுடன் தொடர்புடைய ரூ. 1,179,624 பெறுமதியான 117 காசோலைகளை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்க்கத் தவறியிருந்தது.

(இ) 2014 சனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூயத் திட்டத்தில் சேர்ந்த கமக்கார உதவுதொகை செலுத்துனர்களின் உயிர்த்தரவுத் தகவல்களை உள்ளீடுசெய்து முறைமையை இற்றைப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு ரூ. 1,726,875 ஐ செலவிட்டு 08 மாவட்டங்களில் மாத்திரம் மதிப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு ஏனைய மாவட்டங்களில் மதிப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தரவு முறைமையை இற்றைப்படுத்த சபை நடவடிக்கை எடுக்காமையால் அதற்காக உறப்பட்ட செலவு பயனற்றதாக அமைந்ததோடு புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த கமக்கார உதவுதொகை செலுத்துனர்களின் உயிர்த்தரவுத் தகவல்களை உள்ளீடு செய்கின்ற பணிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலகட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இல: ஏஜிஎல்/ஈ/11/எப்ஜபிஎஸ்/ 2020/எப்ஏ 2021 யூலை 30 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:- (1) செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

(2) செயலாளர் – நிதி அமைச்சு

எனது இலக்கம்: ஏஜிஎல்/ஈ/11/எப்ஜபிஎஸ்/ 2020/எப்ஏ 2021 யூலை 30 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றாழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்ககான நிதிக்கூற்றுகள் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின்ற 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2020 திசெம்பர் 31 அந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பானதாக அமைதல்

இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியம்

பெறுனர்களின் ஓய்வூதிய கடப்பாடுகளுக்கான ஆயுட்கணிப்பு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் ஓய்வூதியப் பொறுப்பு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்படி மீதி ரூ. 4,261,45,710 ஆக அமைந்தது.

1.2.2 கணக்கீட்டுக் கோளாறுகள்

(அ) 2009 சனவரி தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியுடனான தொடர்புடையதாக ஓய்வூதியம் கோரிய 121 கடற்றொழிலாளர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவை ஓய்வூதியத்தின் கூட்டுத்தொகை ரூ. 3,685,792 முந்திய வருடத்துடன் சீராக்கப்படாமல் மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சென்மதியான இறப்புப் பணிக்கொடை நிதியத்தின் ரூ. 98,000 தொடக்கமீதி மீளாய்வாண்டில் கணக்குப் பதிகையில் தேறிய தவணைப்பணக் கணக்கின் தொடக்க மீதியாக கணக்குப் பதிந்தமை காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறையும் இறப்புப் பணிக்கொடை நிதியமும் அந்தப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 திட்டத்தின் இடையறாத வழியுரிமை

மீளாய்வாண்டின் இறுதித்தினத்தன்று செயற்றிட்டத்தின் ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 4,261,454,710 ஆக காணப்பட்டதோடு அது முந்திய வருடத்தைப் பார்க்கிலும் நூற்றுக்கு 8.83 சதவீத அதிகரிப்பாகும். அத்துடன் திரண்ட நிதியத்தின் தேறிய சொத்துக்களின் நிலைமை ரூ. 3,675,902,450 எதிர்க்கணிய நிலைமை வரை அதாவது முந்திய வருடத்தைப் பார்க்கிலும் நூற்றுக்கு 11.76 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால் அதுவும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. மேலும் எதிர்வரும் வருடங்களில் இந்த நிலைமை தொடர்ந்தும் வளர்ச்சியடையக் கூடுமென்பதால் அது பற்றி கவனத்திற்கொண்டு செயற்றிட்டத்தை மறுசீரமைத்து நிதிசார் சாத்தியவளம் கொண்டதாக அமுலாக்க நிறுவனம் இற்றைவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்ககூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மேசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல்

மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவனம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2.1 மற்றும் 1.2.3 பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(i) பிரிவுகள் 5 மற்றும் 6	உரிய தகைமைகளைக் கொண்டவரும் வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் வயது 59 வருடங்களக்கு மேற்படாதவருமான கடற்றொழிலாளர்களுக்கு தமது தொழில்சார் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாத நிரந்தர, பகுதியளவிலான அல்லது பூரணமான உடலியலாமை ஏறபட்டவிடத்து பொருளாதாரரீதியான ஏதேனும் உறுதுணையாக அமையத்தக்கதாக கொடுப்பனவொன்றினை செலுத்துதல், இறப்பின்போது இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் மற்றும் வயது 60 வருடங்கள் நிறைவடைந்தவிடத்து ஓய்வூதியமொன்றை செலுத்துதலை நோக்கமாகக்கொண்டு இந்த திட்டம்

		ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவோர் உறுப்பினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(ii) பிரிவு 7	உதவுதொகை செலுத்துனருக்கு வயது 60 வருடங்கள் நிறைவடைந்த திகதியில் இருந்து ஓய்வூதியத்திற்கான உரிமை கிடைக்கின்றபோதிலும் திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஓய்வூதியம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு நிலுவை ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் 2009 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து 2016 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக ஓய்வூதியத்தைக் கோரிய 176 கடற்றொழிலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலுவை ஓய்வூதியமான ரூ. 4,828,177 ஐ செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(iii) பிரிவு 16	உதவுதொகை செலுத்துனரொருவர் பங்களிப்புத் தொகையை செலுத்துகையில் தொடர்ச்சியான பத்து தவணைகளுக்கான தவணைப்பணத்தை முறைப்படி செலுத்தாமையின்பேரில் நன்மைகளை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி உதவுதொகை செலுத்துனருக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். ஆயினும் மேற்படி அறிவித்தலை செய்யாமை காரணமாக வயது 60 வருடங்கள் நிறைவடைந்த ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமை இருப்பதாகக் கருதிய 58 பேர் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.
	(iv) பிரிவு 20	தாபிக்கப்பட்டுள்ள மதியுரைக்குழுவினால் நடைமுறைப்படத்தப்படவேண்டிய தத்துவங்களை நடைமுறைப்படத்துவதற்காக மதியுரைக்குழு கூடவேண்டியபோதிலும் 2016 நவெம்பர் மாதத்தின் பின்னர் இற்றைவரை குழுக்கூட்டம் நடைபெறவில்லை.

3.2 செயலாற்றுகை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய செயற்பாட்டுத் திட்டத்தின்படி கடற்றொழிலாளர் ஓய்வூதிய அட்டைகளை பாதுகாப்பதற்காக மாவட்டத்திற்கிணங்க அட்டைகளை வகைப்படுத்தல், அட்டைகளை ஸ்கேன் (scan) பண்ணுதல் மற்றும் களஞ்சியப்படுத்தலைப் போன்றே கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களின் தரவு ஆவண முகாமைத்துவ முறைமை (Document Management System) ஊடாக பாதுகாக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2016 -2020 கூட்டுத் திட்டத்தில் உள்நாட்டு விவசாயிக்கு உறுதிநிலையை வழங்குவதற்காக நிலவுகின்ற சமூகப் பாதுகாப்பு திட்டங்களை இற்றைப்படுத்தவும் புதிய பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகஞ் செய்யவும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் நடைமுறையிலுள்ள கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை நடப்புத் தேவைகளுக்கிணங்க திருத்தியமைத்து புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகஞ் செய்தலையோ நிலவுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்ளலையோ கடந்த பல வருடங்களாக காணக்கிடைக்கவில்லை.

3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்.

2010 ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்து கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களில் ரூ. 518,000,000 கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகையின் கூட்டுத்தொகை ரூ. 338,949,572 ஆக அமைந்திருந்தது.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கைக ளுக்கான பதில்கள்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

5. நிதிக்கூற்றுகள்

5.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

5.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியில் உள்ளடங்கிய மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பீடுசெய்து கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு ஏனைய சொத்தக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் கணக்குப் பதியப்பட்டுள்ளது. முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மத்தியில் பாவிக்கக்கூடிய சொத்துக்களை மீள்கணிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு ஏனைய சொத்துக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து தவணைப்பணத்தைப் பெற்றுக்கொண்டு இந்த நிதியம் அமுலாக்கப்பட வேண்டுமென்பதோடு ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற பணிக்கொடை செலுத்துதல்கள் இந்த நிதியத்தில் பற்று வைக்கப்படும். எதிர்காலத்தில் புதிய ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் வருடாந்தம் ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) மஹியங்கன, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லக் காணிகளின் பெறுமதி மற்றும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதியை மதிப்பீடுசெய்தல் சம்பந்தமாக இன்றளவில் மாவட்ட பிரதி / உதவிப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி அவசியமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதோடு துரிதமாக அந்த பணிகளை நிறைவுசெய்து மதிப்பீட்டுப் பெறுமதியைக் கணக்குப் பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ) இந்த மீதிகளுக்குள்ளே கமக்காரர் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள கடன்தொகை மாத்திரமன்றி அதன்மீது வருமதியான வட்டித் தொகையும் செயற்றிட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கிய நடைமுறைக் கணக்கின் மீதிகளும் உள்ளடங்குகின்றன. அதனால் அந்த வருமதியான மீதிகள் நடைமுறைச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளன. செயற்றிட்டங்களின் நிதிநிலைமையின்பேரில் படிப்படியாக அந்த பணத்தை அறவிட எதிர்பார்க்கப்படுகின்றது.

1.3 செயற்றிட்டத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

1.4 நிதிக்கூற்றுகள் சம்பந்தமான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்பு

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.2.2 சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு

(அ)

(i) நி.ஒ. 177(1)

வெளிக்களத்தில் அறவிடப்படகின்ற தவணைப் பணத்தையும் அலுவலகத்தில் அறவிடப்படுகின்ற தவணைப்பணத்தையும் அன்றைய தினத்தில் அல்லது அதற்கு அடுத்த தினத்தில் வங்கியிலிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வெளிக்களத்தில் அறவிடப்படுகின்ற தவணைப் பணத்தை வங்கியிலிடுவதிலான தாமதங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டமையால் அதனைத் தவிர்த்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வூட்டல் செய்யப்பட்டுள்ளது. அவ்விதமாக அறவிடப்படுகின்ற தவணைப்பணத்தை இணக்கம் செய்கின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் தோன்றாதிருக்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ii) நி.ஒ. 261(3)

போதியளவிலான பணத்தொகை கணக்கில் இல்லாவிட்டால் சபையினால் காசோலை வரைதலோ அல்லது காசேட்டுக்கான வவுச்சர்கள் எழுதுதலோ மேற்கொள்ளப்படமாட்டாது. அவசியப்பாட்டுக்கிணங்க இழப்பீடு செலுத்துகையில் பணத்தை வரவழைப்பித்துக் கொள்வதற்கு முன்னர் இழப்பீட்டினைச் செலுத்தி பின்னர் பொது திறைசேரியிடமிருந்து செலவுமீளளிப்பு செய்துகொள்கின்ற தருணங்கள் இருக்கின்றன. அதற்கிணங்க படைப்புழு சேதத்திற்காக 100% ஐப் பார்க்கிலும் குறைவான சேதமுற்ற அம்பாறை மாவட்டக் கமக்காரர்களுக்காக இழப்பீடு செலுத்துதலுடன் தொடர்புடையதாக இந்த காசோலைகள் சபையில் நிலவிய நிதியங்களைப் பாவித்து தயாரிக்கப்பட்டதோடு அமைச்சினால் பணம் வழங்குதல் தாமதம் செய்யப்பட்டமையால் மேற்படி காசோலைகளை கமக்காரர்களுக்கு வழங்காமல் தடுத்துவைக்கப்பட்டது. எனினும் படைப்புழுவினால் 100% பயிர்ச்சேதம் விளைந்த கமக்காரர்களுக்கு செலுத்துவதற்காக மாத்திரம் பணம் வழங்கப்பட்டமையால் மேற்படி ரூ. 55,720,568 ஆம் அமைந்த மொத்தப் பெறுமதியையுமே வருவாய்க்கு எடுக்க செயலாற்றப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2018/19 படைப்புழுச் சேதம் தொடர்பில் பகுதியளவிலான சேதமேற்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்தப்படவில்லை.

இவ்விதமாக அம்பாறை மாவட்டத்தில் பகுதியளவிலான சேதத்திற்காக காசோலைகளை வரைய நேரிட்டமைக்கான காரணம் அக்காலத்தில் மாவட்டத்தில் 100% படைப்புழு சேதத்திற்காக முதலிலேயே இழப்பீடு செலுத்தப்பட்டமையாலும் இழப்பீடு பெறுவதற்காக கமக்காரர்கள் ஒருங்கிணைதல் போன்றவற்றை மேற்கொள்வதும் விவசாய அமைப்புகளால் தொடர்ச்சியாக இழப்பீடுகோரி போராடியமையுமாகும். எனினும் அரசாங்கத்தினால் நிதியேற்பாடுகள் வழங்கப்படாமையால் பகுதியளவிலான சேதங்களுக்காக இழப்பீடு செலுத்தப்படவில்லை.

(iii) நி.ஒ. 762

அட்டைகளைக் கொள்வனவுசெய்ய அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அந்த காலப்பகுதியில் நிலவிய பெருந்தொற்று நிலைமை காரணமாக உரியவகையில் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதுடன்

அவசியப்பாட்டின்பேரில் சீக்கிரமாக அட்டைகளை வரவழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு கிடைக்கின்ற கையிருப்புகளை மாவட்ட அலுவலகங்களின் அவசியப்பாட்டுக்கிணங்க விநியோகித்தமையால் களஞ்சியத்தில் அட்டைகள் கையிருப்பு தீர்ந்துள்ள சந்தர்ப்பங்கள் நிலவின. கொள்வனவுசெய்த தரவு முறைமை ஊடாக இந்த குறைபாடு முகாமை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அங்கீகரித்த ஆட்சேர்ப்புத்திட்டம்

(i) பணிப்பாளர் (நிருவாகம்)

சபையின் நிருவாக நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக உத்தியோகத்தரொருவர் இருக்கவில்லை என்பதோடு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற நடவடிக்கைகள், மாவட்ட அலுவலகங்களுக்கு அவசியமாகின்ற பண்டங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பற்றி பல்வேறு பிரச்சினைகள் குவிந்திருந்ததோடு பணிப்பாளர் நாயகத்தினால் தனது செயற்பொறுப்பிற்கு மேலதிகமாக அந்தப் பணியும் ஆற்றப்பட்டமை காரணமாக பணிப்பாளர் நாயகத்திற்கு நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தடையாக அமைந்திருந்தது. எனவே அந்த நிலைமையைத் தவிர்த்துக்கொண்டு அப்பணிகளை வெற்றிகரமாக ஈடேற்றுவதற்காக துரிதமாக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அவசியப்பாடு நிலவியது. அதனால் பகிரங்க சேவையில் பலவருடகால அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தரொருவர் விண்ணப்பித்திருந்ததோடு அவர் பற்றி பணிப்பாளர் சபைக்கு விழிப்புணர்வூட்டி ஒருவருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொண்டு சபையில் உருவாகியிருந்த நிருவாக நெருக்கடிகளை தீர்த்துக்கொள்வதற்கான பாரிய நிவாரணம் பெறப்பட்டது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்)

சபை மூன்றாந்தரப்பு காப்புறுதிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதோடு அவ்விதமாக காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்கள் நாடுமுழுவதிலும் விபத்துக்க உள்ளாகி பாரிய எண்ணிக்கைகொண்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்ததோடு இந்த வழக்குகளை நெறிப்படுத்துவதற்காக சபையில் நிரந்தரமான சட்ட உத்தியோகத்தர் ஒருவர் இருக்கவில்லை என்பதால் 2020 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி மட்டத்தில் ஒருவருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அதற்கிணங்க இதுவரை நாடு பூராவிலும் மூன்றாந்தரப்பு காப்புறுதி மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள், சனையினால் கைச்சாத்திடப்படவேண்டிய உடன்படிக்கைகள் மற்றும் ஊழியர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தமான தாமதங்களைப் போக்கி அந்த வழக்குகளை முனைப்பானதாக்கிக்கொள்ள இயலுமை கிடைத்துள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் (கால்நடைக் காப்புறுதி)

கால்நடை செயற்பாடுகளின்போது உயிர் இரசாயனவியல் பற்றிய உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக இந்த காப்புறுதியில் தோன்றுகின்ற சிக்கல்களை இனங்காணவும் காப்புறுதிச் செயற்பாடுகளின்போதும் கால்நடைக் காப்புறுதியுடன் தொடர்புடைய மருத்துவர்களுடன் இணைப்பாக்கத்தை மேற்கொள்வதற்காகவும் விடயத்துறை பற்றிய அறிவுபடைத்த உத்தியோகத்தர் ஒருவரின் அவசியத்தின்பேரில் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த விண்ணப்பப் பத்திரங்களை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபையின்

அங்கீகாரத்தின்பேரில் ஆட்சேர்ப்புசெய்து அப்பிரிவின் செயற்பாட்டுக்கு பங்களிப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

<u>உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)</u>

சபையின் கமக்காரர் ஓய்வூதிய நடவடிக்கைகளை பேணி வருகையில் தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருள்களில் தோன்றுகின்ற அன்றாட சிக்கல் நிலைமைகள் காரணமாக அப்பிரிவுகளின் செயற்பொறுப்பினை முறைப்படி ஈடேற்றுவதற்கான இயலுமை அற்றுப்போயிற்று. அதனால் ஆரம்ப ஓய்வூதிய முறைமையைத் தயாரிக்கையில் அதில் பங்களித்த உத்தியோகத்தரொருவர், பொருத்தமான ஒருவரை சேர்த்துக்கொள்ளும்வரை சேவையைத் துரிதப்படுத்துவதற்காக 06 மாதங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இப்பதவிக்காக எற்கெனவே அட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபைக்காக போதியளவிலான சாரதிகள் இருக்கவில்லை என்பதாலும் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலைமையில் சுகாதாரப் பாதுகாப்புமிக்கதாக ஊழியர்களை அலுவலகத்திற்கு அழைப்பித்துக்கொள்ள நேர்ந்ததாலும் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக வழங்கப்பட்டிருந்த சாரதி ஒதுக்க வாகனங்களுக்காக இணைக்கப்பட்டதோடு சபையில் நிலவிய கொள்கையின்படி தலைவருக்காக ஒப்பந்த அடிப்படையில் சாரதியொருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

(iii) வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2020 ஆம் ஆண்டிலிருந்து வருங்காலத்தில் ஒவ்வொரு மாவட்டம்தோறும் நடாத்தப்பட அவசியமான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் 2021 ஆம் ஆண்டின் முதலாவது 04 மாத காலப்பகுதிக்குள் பரீட்சைகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பரீட்சை நடவடிக்கைகளை ஏற்பாடுசெய்ய கொரோனா நிலைமை காரணமாக இயலாமல் போயிற்று. அது இயற்கை ஏதுக்களால் ஏற்பட்ட தாமதமேயன்றி சபை உத்தியோகத்தர்களின் தவறு காரணமாக ஏற்பட்டதொன்றல்ல. உரிய வகையில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைப்பாக்கம் செய்யப்படும்.

2.2.3

(அ) <u>1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்</u>

(i) செலுத்துதல் நிராகரிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக திருத்திய பதிவேடுகளைத் தயாரித்து அனுப்புமாறு கமநல சேவைகள் நிலையங்களுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதோடு அவ்விதமாக கிடைத்த திருத்திய பதிவேடுகளுக்கான செலுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இழப்பீட்டுத் தொகைக்காக மீளவும் உரிமைகோராத கமக்காரர்களின் மேற்சொன்ன ரூ. 70,800,200 பணத்தொகையானது தொடர்ச்சியாக கமக்காரர்கள் உரிமை கோராமையால் கமத்தொழில் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றப்படுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு மேற்படி பணத்தொகையை விவசாயத் தரவு முகாமைத்துவ முறைமையை உருவாக்குவதற்காக வழங்க அங்கீகாரம் கிடைத்துள்ளது.

(ii) சபையினால் களஞ்சியக் காப்புறுதித் திட்டமொன்று அமுலாக்கப்பட்டு வருவதோடு 2020 ஆம் ஆண்டில் கமக்காரர்களால் கோரப்படாதிருந்ததோடு களஞ்சியக் காப்புறுதிக்காக கமக்காரர்களை கவர்ந்திழுக்க அவசியமான விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.4

2.3 <u>பிற கணக்காய்வு அவதானிப்புகள்</u>

(அ) கணக்காண்டின் தொடக்கத்தில் வருமதியான சம்பள மீதி ரூ. 342,023.38 நிலவியதோடு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூ. 171,011.50 பணத்தொகையை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஞ்சியதொகையை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இந்த காணி சபைக்கு தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள காணியாக அமைவதோடு 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு மதிப்பீட்டில் எதிர்கால வேலைத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

(இ) இந்த மீதியில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படுகின்ற கேள்விகோரல் பணத்தொகைக்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டி அப்பணத்தொகையை அவர்கள் முறைப்படி கோரியவிடத்து செலுத்த 2021 இல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) கால்நடைக் காப்புறுதி வருமானத்தை அதிகரித்துக்கொள்ள அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அந்த தொழிற்றுறையில் இயங்கிவருகின்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி செயற்றிட்டத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ) 2020 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கைகொண்ட முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புசெய்ய செய்தித்தாள் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதோடு அவற்றைத் தேர்ந்தெடுத்து நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும்வரை அமய அடிப்படையில் 07 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். வருங்காலத்தில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்காக முறையான நேர்முகப் பரீடசைகளை நடாத்தி தெரிவுசெய்தல் மேற்கொள்ளப்படும்.

(ஊ) நீண்டகாலமாக அறவிடப்படாத ஊழியர் கடன் மற்றும் முற்பணம் பற்றிய விபரங்கள் பணிப்பாளரிடம் (நிருவாகம்) வழங்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் தகவல்களை கற்ராராய்ந்த பின்னர் இந்த கடன்களை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(எ) இந்த மீதிகளை சரிவர இணக்கஞ்செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஏ) 2020 ஆம் ஆண்டளவிலும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியை முழுமையாகவே சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு இந்த பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்தே ஏறக்குறைய இதற்கு இணையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான காரணம் சபை இன்றளவில் சுயநிதியீட்டல் அடிப்படையில் செயலாற்றி வருவதால் ஒட்டுமொத்த பணியாட்டொகுதியையும் ஒரே தடவையில் சேர்த்துக்கொள்ளாமல் நிதிசார்

உறுதிநிலையின்பேரில் இடைக்கிடையே ஆட்சேர்ப்பு அதிகரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது சபையினால் ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஐ) சபையின் அனைத்து நிதியங்களுக்காகவும் தனிவேறான வங்கி நடைமுறைக் கணக்குகள் பேணப்படுவதில்லை என்பதோடு நிலவுகின்ற மீதிகள் முதலீட்டு வழிமுறைகளில் முதலீடு செய்யப்படுகின்றன. இந்த நிதியத்தில் நிலவுகின்ற பணம் இந்த நிதியத்திற்காக இலகுவாக அடையாளம் காணக்கூடியவகையில் தனிவேறான நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடுசெய்ய இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(ஒ) 2019 சிறுபோகத்திற்காக மறுகாப்புறுதியின்கீழ் கிடைக்கவேண்டிய காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு பல தருணங்களில் அவர்களுக்கு எழுத்திலும் வாய்மொழி மூலமாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டதோடு அது சம்பந்தமாக பொது திறைசேரியுடனும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் மறுகாப்புறுதியை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்நது வழங்க இயலாதென்பதால் சபையினால் மறுகாப்புறுதிக்காக செலுத்தப்பட்ட தவணைப்பணம் செலவுமீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக இழப்பீட்டுத் தொகையில் முதலாவது ரூ. 10,000 பணத்தைச் செலுத்த சம்பந்தப்பட்ட பணம் அனைத்துமே தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க மறுகாப்புறுதிக் காப்பீடு அமுலாக்கப்படாமையால் ரூ. 163,619,152 வருமதியானதெனக் கணிப்பிடப்பட்டிருந்த பணத்தொகை சபைக்கு கிடைக்கவில்லை.

.....

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

4. நிதிக் கூற்றுகள்

4.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

4.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குப் புறம்பாகச் செயற்படுதல்

2007 ஆம் ஆண்டிலிருந்து கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்குப் பதியப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டத்தை மறுசீரமைத்து முறைப்படி பொறுப்பினை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2.2 கணக்கீட்டு வழுக்கள்

(அ) பணக் கிடைப்பனவுளுடன் தொடர்புடைய தகவல்களுக்காக உரியவகையில் பேரேட்டுக் கணக்குகள் பதியப்படல் வேண்டும். மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்ற ஓய்வூதியப் பெயர்ப்பட்டியலை கணினி முறைமை ஊடாக பெற்றுக்கொள்ள இயலும். திட்டத்தின் உறுப்பாண்மையைப் பெற்றுள்ள உதவுதொகை செலுத்துனர்களின் தகவல்களை கணினி முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பிந்திய தகவல்களை கணினிமயப்படுத்துவதிலான தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையால் செல்லுபடியற்றதாகிய மற்றும் இயங்காநிலையிலுள்ள உதவுதொகை செலுத்துனர்களை கணினி முறைமையிலிருந்து பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் நிலவுகின்றன. இந்த நிலைமையின்கீழ் பிந்திய தவணைகளை தன்னியக்கமுறையில் கணினிமயப்படுத்துவதற்காக அரச வங்கிகள் மூலமாக பிந்திய தவணைகளை அறவிட்டு இந்த தவணைகளை எமது தரவு முறைமையுடன் இணைத்துக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.2.3 **திட்டத்தின் தொடர்ச்சியான வழியுரிமை**

திட்டத்தின் நடப்புப் பொறுப்பு ரூ. 74,155,908,494 ஆகும். இந்த பொறுப்பு தோன்றுவதில் பின்வரும் காரணங்கள் பிரதானமாக தாக்கமேற்படுத்தி உள்ளன.

(i) 1987 ஆம் ஆண்டில் திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்க இணங்கிய 750 மில்லியன் ரூபா தொடக்க மூலதனத்தை முறைப்படி வழங்காமை.

(ii) தவணைப்பணத்தை அதிகரிக்காமல் இடைக்கிடையே ஓய்வூதியத் தொகையை 200 ரூபாவில் இருந்து 1000 ரூபா வரை அதிகரித்தமை.

(iii) மூலத் திட்டத்தில் இருந்திராத வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியத்தை செலுத்துதல் 1995 அரச கொள்கைக்கு அமைவாக தொடங்கப்பட்டமை.

2014 இல் புதிய வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட பின்னர் தோன்றிய எதிர்கால கடப்பாடுகளுக்கு அவசியமான நிதியங்களைக் கட்டியெழுப்புவதற்காக திறைசேரி பிணைமுறிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2015 வரவுசெலவு மூலமாக 5 மில்லியன் ரூபா திறைசேரி பிணைமுறிகளை தொடக்கநிலையாக வழங்க தீர்மானிக்கப்பட்டபோதிலும் இடம்பெற்ற அரச கொள்கை மாற்றத்துடன் அந்த நிதியங்கள் சபைக்கு கிடைக்கவில்லை என்பதோடு வருடாந்த ஓய்வூதியப் பொறுப்பு மாத்திரம் இறுதியில் பொது திறைசேரியால் வழங்கப்பட்டது. கமக்காரர் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக கமத்தொழில் காப்புறுதித் திட்டத்திடமிருந்தும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்தும் பெற்றுக்கொண்ட கடனுக்காக வருடாந்த சராசரி திறைசேரி உண்டியல் வட்டி கணிப்பிடப்பட்டு கணக்குப் பதியப்பட்டுள்ளது.

4.3 நிதிக் கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் ஆளுந்தரப்பினரதும் பொறுப்புக்கள்

4.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

5. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

(அ) i பிரிவு 4

1987 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் பல்வேறு காலகட்டங்களில் அரச கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின்பேரில் தவணைப்பணம் அதிகரிக்கப்படாமல் நன்மைகள் அதிகரிக்கப்பட்டமையால் 2010 ஆம் ஆண்டளவில் நிதியம் பூச்சியநிலையுற்றமையால் திட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளல் நிறுத்தப்பட்டது. இந்த நிலைமைக்குள் புதிய சேர்த்துக்கொள்ளலைத் தொடங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2014இன் 1853/49 ஆம் இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் பதிய சேர்த்துக்கொள்ளலை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதோடு அதன்போது தொடர்ந்தும் அது சம்பந்தமாக அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக பிரதி திறைசேரி செயலாளரொருவரின் தலைமையில் நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் விதப்புரைகளுக்கிணங்க புதிய சேர்த்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ii 6(I) பிரிவு

20,000 இற்கு மேற்பட்ட கமக்காரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்காக காத்திருக்கைப் பட்டியலில் இருந்தமையால் அந்த கமக்காரர்களுக்கு துரிதமாக ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக ஓய்வூதியப் பதிவேட்டில் சேர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனால் காத்திருக்கைப் பட்டியலில் இருந்த பெருந்தொகையான கமக்காரர்களுக்காக ஓய்வூதியம் செலுத்த இயலுமை கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் எந்தவிதமான நிலுவைத்தொகையும் உருவாகாதவகையில் ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொள்கின்ற

சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதியப் பதிவேட்டில் உள்ளடக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், செலுத்தவேண்டியதாக உள்ள நிலுவை ஓய்வூதியம் எதிர்காலத்தில் திறைசேரி நிதியேற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு படிப்படியாக செலுத்தப்பட உள்ளது.

iii <u>பிரிவு 15 (2) மற்றும் (3)</u>

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக பங்களிப்புச் செய்துள்ள கமக்காரர்கள் தொடர்ச்சியான 05 தவணைகளைச் செலுத்தத் தவறினால் அவர்களின் உறுப்பாண்மை செல்லுடியற்றதாவதோடு அதுபற்றி அவர்கள் செயற்றிட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற வேளையிலேயே அவசியமான விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்படுவதோடு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தவணைப்பணக் குறிப்புப் புத்தகத்திலும் அது பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விதமாக உறுப்பாண்மை செல்லுபடியற்றதான கமக்காரர்கள் செலுத்திய தவணைப்பணம் அவர்களின் வயது 60 வருடங்கள் நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் வட்டிசகிதம் செலவுமீளளிப்புச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

iv <u>பிரிவு 20</u>

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளலைத் தொடங்கி முனைப்பானதாக்க அவசியமான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதற்கிணங்க மிகவும் துரிதமாக மதியுரைக்குழுக் கூட்டத்தை நடாத்தவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

3.2 <u>செயலாற்றுகை</u>

(அ) 2021 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை இற்றைப்படுத்தி புதிய சேர்த்துக்கொள்ளலை ஆரம்பிக்கவும் அதனை அமுலாக்குகையில் புதிய தொழில்நுட்ப முறைகளை பிரயோகிக்கவும் திட்டமிட்டு இன்றளவில் அது அமுலாக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியத்தை தயாரிப்பதற்காக 7,402 விண்ணப்பங்கள் காணப்பட்டபோதிலும் மேற்படி விண்ணப்பப் பத்திரங்களின் பணிகளை நிறைவுசெய்வதற்காக உச்ச அளவிலான வினைத்திறனுடன் செயலாற்றப்பட்டது. அதற்கிணங்க இன்றளவில் ஓய்வூதியத்தை தயாரிப்பதற்காக உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கையை 1000 ஐவிட குறைத்துக்கொள்ள இயலுமாயிற்று.

எதிர்காலத்தில் தாமதங்களின்றி ஓய்வூதியத்தை வழங்குவதற்காக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு புதிய தொழில்நுட்ப முறைகளை பாவித்து கணினி முறைமையை மாவட்ட அலுவலகங்களுடன் இணைத்து துரித சேவையை கமக்காரர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

3.3 <u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u>

(அ) கொரோனா பெருந்தொற்று காரணமாக வெளியிடங்களுக்குச் சென்று வீட்டுக்குத் திரும்பிவர இயலாமல் நீண்டகாலமாக அந்த இடங்களில் தங்கயிருக்கவேண்டி நேரிட்டமை காரணமாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

அவ்வாறின்றி ஏறக்குறைய 06 மாதகாலமாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியம் பெறுனர்களின் விபரங்களை இணக்கஞ்செய்து அவர்களை ஓய்வூதியம் செலுத்துதல் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(ஆ) பொது திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிதிச் சுற்றிக்கை இலக்கம் 01/2020 (பழைய சுற்றிக்கை இலக்கம் 2/2016) இன்படி 2021.01.22 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 509/04 இலக்கமுடைய பணிப்பாளர்சபைப் பத்திரம் மூலமாக அங்கீகாரம் கிடைத்த பின்னர் இந்நிலைமையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் உதவுதொகை செலுத்துனர்களின் தகவல்களை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில் தகவல்களை சமர்ப்பித்திருந்த கமக்காரர்களின் எண்ணிக்கை தாழ்ந்த பெறுமானத்தைக் கொண்டிருந்தபோதிலும் கிடைத்துள்ள தகவல்களை மாவட்ட மட்டத்தில் கணினிமயப்படுத்தி இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபை எதிர்பார்த்தவகையில் கமக்காரர்கள் மதிப்பாய்வின்போது உரியவகையில் தகவல்களை சமர்ப்பியாமையால் மதிப்பாய்வுப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவது நிறுத்தப்பட்டது.

.....

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

1. **நிதிக் கூற்றுகள்**

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து புறம்பாக செயற்படுதல்

2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதிய பொறுப்புக் கணக்குகள் கணக்குப் பதியப்பட்டுள்ளன. இந்த ஓய்வூதியத்திட்டம் சுயநிதியீட்டல் அடிப்படையைக் கொண்டதாக அமையவில்லை என்பதால் எதிர்காலத்தில் இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைத்து உரியவகையில் இது பற்றி முறைசார்ந்தவகையில் பொறுப்புக்களை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றளவில் ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்குவதன் மூலமாக நியாயமான பங்களிப்பினை ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பேச்சுவார்த்தைகள் கடற்றொழில் அமைச்சுக்கும் சபைக்கும் இடையில் நடாத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க எதிர்காலத்தில் அதுசம்பந்தமான முறைமைசார்ந்த விதத்தில் புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரிக்க இயலுமானதாக அமையமெனக் கருதப்படுகின்றது.

1.2.2 கணக்கீட்டு வழுக்கள்

(அ) ஓய்வூதியம் உரித்தான 121 மீனவர்களுடன் தொடர்புடைய நிலுவை ஓய்வூதியத்தை ஒதுக்குதல் 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் ஊடாக சீராக்கி சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) இந்த நிலைமையை 2021 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.2.3 திட்டத்தின் இடையறாத வழியுரிமை

அரசாங்க கொள்கைகளின்பேரில் இந்த திட்டத்தின் நன்மைகளை தவணைப்பணத்தை அதிகரிக்காமல் மேற்கொண்டமையால் உதவுதொகை செலுத்துனருக்கு உரித்தாகின்ற அரசாங்க மானியத்தின் அளவு அதிகரித்துள்ளது. அதனால் நிதியத்தின் எதிர்க்கணியத் தாக்கம் உயர்வடைந்து வருவதோடு இதனைத் தீர்த்துக்கொள்வதற்காக அரசாங்க மானியத்தைப் பெறவேண்டிய நிலையேற்படும். அதற்கிணங்க வருடாந்த வரவுசெலவு

ஏற்பாட்டின் பேரில் அவசியமான நிதியங்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிக்க அவசியமான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்போது கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் பற்றியும் கவனஞ் செலுத்தப்பட்டதோடு அதற்காக தொடர்ந்தும் நிபுணத்துவ அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரி பிரதி செயலாளரொருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் விதப்புரையின்பேரில் அமைச்சரவையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின்படி செயலாற்ற எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

1.3 நிதிக் கூற்றுகள் சம்பந்தமான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்பு

1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

சட்டதிட்ட ஏற்பாடுகளுக்கான தொடர்பு

(அ) i 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள்

புதிய ஓய்வூதிய திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக அவசியமான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்போது கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டதோடு அதற்காக தொடர்ந்தும் நிபுணத்துவ அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரி பிரதி செயலாளரொருவரின் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் விதப்புரையின்பேரில் அமைச்சரவையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் பிரகாரம் செயலாற்ற எதிர்பார்க்கப்படுவதோடு அதன் பின்னர் இந்த செயற்றிட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படுவதை மேம்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ii <u>பிரிவு 07</u>

நீண்டகாலமாக கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது தாமதித்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிலுவையான ஓய்வூதியத்தை செலுத்துகையில் அவ்விதமாக தாமதித்தமைக்கான காரணங்களைக் கண்டறிந்த பின்னர் செலுத்தும்போது பழைய நிலுவை ஓய்வூதியம் செலுத்தப்படுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் இந்த நிலைமை தோன்றியுள்ளது. யுத்தம் நிலவிய மாவட்டங்களில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தை விண்ணப்பிக்கையில் பாரிய தாமதங்கள் காணப்பட்டமையால் அவ்விதமாக தாமதித்தமைக்கான காரணங்கள் பற்றி கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரை உள்ளிட்ட மாவட்ட அரச உத்தியாகத்தர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஏற்புடைய பணத்தொகையைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ii <u>பிரிவு 16</u>

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர்கள் மூலமாகவே உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து தவணைகள் அறவிடப்படுவதோடு அந்த உதவுதொகை செலுத்துனர் உறுப்பாண்மையை இழந்தவரா என்பதைக் கண்டறிந்து தவணைப் பணத்தை அறவிட்டுக்கொள்ளல் சம்பந்தமாக அவசியமான அறிவுறுத்தல்களை இடையறாமல் அவர்களுக்கு வழங்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்விதமாக உறுப்பாண்மை இல்லாதொழிந்த உதவுதொகை செலுத்துனரொருவர் தொடர்ந்தும் பங்களிப்புத்தொகையை செலுத்தியிருப்பின் அவருக்கு வயது 60 வருடங்கள் பூர்த்தியாகையில் ஏற்புடைய தேறிய தவணைப் பணத்தையும் வட்டியையும் மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் அவ்விதமாக உறுப்பாண்மை செல்லுபடியற்றதாகியமை பற்றி அறிவித்தல் விடுத்தல் கடற்றொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு உறுப்பாண்மையை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் மூலமாக புதிய உதவுதொகை செலுத்துனராக மீண்டும் பங்களிப்புச் செய்வதற்கான இயலுமை உண்டு.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியான கடற்றொழில் திணைக்களத்திற்கு கணக்காய்வு ஐயவினாக்களில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீண்டும் இடம்பெறாதிருக்க ஆவன செய்யுமாறு விழிப்புணர்வூட்டப்படுகின்றது.

iii <u>பிரிவு 20</u>

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை மறுசீரமைத்து சுயநிதியீட்டல் அடிப்படையில் பேணிவரக்கூடிய ஓய்வூதியத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக கடற்றொழில் அமைச்சுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றளவில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்டம் எதிர்காலத்தில் அமுலாக்கப்படுகின்ற விதம்பற்றி அமைச்சரவைக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான நிபுணத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் புதிய சேர்த்துக்கொள்ளலை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதால் துரிதமாக மதியுரைக் குழுவினைக் கூட்ட அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.2 <u>செயலாற்றுகை</u>

(அ) கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய பதிவேடுகளை பாதுகாப்பதற்கான பதிவேட்டறையொன்றை அமைக்க அவசியமான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓய்வூதியத் திட்டத்திற்காக புதிய கணினி முறைமையொன்றை தயாரிப்பதற்காக இன்றளவில் கேள்விகோரல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மெற்படி கணினி முறைமையை நிறுவுகையில் மெற்படி பதிவேடுகளுக்கான Document Management System மூலமாக பதிவேடுகளை பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) புதிய அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் புதிய ஓய்வூதியத் திட்டமொன்று பற்றி குறிப்பிட்டுள்ளமையால் மேற்படி அரச கொள்கையின்படி அவசியமான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை ஆரம்பிக்க அவசியமான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்காக தொடர்ந்தும் நிபுணத்துவ அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள திறைசேரி பிரதி செயலாளரொருவரின் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் விதப்புரையின்பேரில் அமைச்சரவையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கிணங்க செயலாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

3.3 <u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u>

(அ) ஓய்வூதியத் திட்டத்தில் தோன்றிய நிதிசார் நெருக்கடிபற்றி பொதுதிறைசேரியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டவாறு செலவுமீளளிப்பு செய்கின்ற அடிப்படையில் இந்த பணம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இன்றளவில் 338.9 மில்லியன் ரூபா பணத்தொகை கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்து அறவிப்பட வேண்டியுள்ளதோடு கடன்தொகையும் அதன்மீதான வடடியும்

மேற்படி மீதிக்குள் அடங்குகின்றது. திட்டத்திற்காக தவணைப்பணம் கிடைப்பது வீழ்ச்சியடைந்தமையும் திட்டத்திடம் நிதியங்கள் இல்லாமல் போனமையும் இந்த நிலைமையில் தாக்கமேற்படுத்தி உள்ளது. கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்ற வட்டியின் வீதமானது வருடாந்த சராசரி திறைசேரி உண்டியல் வட்டி வீதமாகும். அறிவிடப்படவேண்டிய எஞ்சிய கடன்தொகையை படிப்படியாக அறவிட்டுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

.....